
# இரவி

'இரவி' காலாண்டு மின் இதழ்















**75ஆவது அகவையில் பவள விழாக்கொண்டாடும் கலாபூசணம் கோகிலா மகேந்திரன் அம்மையாருக்கு 'இரவி' சஞ்சிகை வாழ்த்தைத்தெரிவிக்கிறது**

மலர் ~ 1 தை ~ பங்குனி 2026 கதிர் ~ 7

வெளியீடு: இரவி சஞ்சிகை இலங்கை

# இதுவரை வெளி வந்த இதழ்களும் படைப்பாளர்களும்





































# இரவி

**கலை இலக்கிய**
**காலாண்டு இதழ்**

**பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்**

**கதிர் 07**

**தை - பங்குனி 2026**

உங்கள் படைப்புகளை அனுப்ப:

**iravi.magazine@gmail.com**

பக்க வடிவமைப்பு: த. நரேஸ்

ஓவியங்கள்: நரேஸ் வழிகாட்டலில் மைக்ரோ சொப்ட் - கோ பைலட் (செயற்கை நுண்ணறிவு)

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்குமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

## இந்த இதழை தங்கள் படைப்புகளால் அலங்கரித்த ஆளுமைகள்



# இரவி கதிரின் உள்ளே....

**கதிர் வீச்சு**

தமிழில் வேற்று எழுத்துப் பயன்பாடும் பயன்படுத்துவதில் தோன்றும் எதிர்ப்புகளும்

**கட்டுரை**

பவளவிழாக் கண்ட சாதனைத்திலகம் கலாபூசணம் கோகிலா மகேந்திரன்
மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்
திருக்குறள் அதிகாரம் - 23
ஈழத்தில் வெளிவந்த தமிழ்த் திரைப்படங்கள் ஒரு தேடல்
தொல்காப்பியக் காதல் - அன்றும் இன்றும்

**சிறுகதை**

மௌனமே பேசு
நீதி வெல்லும்
புண்ணிய யாத்திரை
முதுமை
தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை

**கவிதைகள்**

1. தைத்திருநாள் சிறப்புக் கவிதை
2. காலமே பதில் சொல்லு
3. அன்பு
4. ஏவுகணை நாயகன்
5. விதி
6. முண்டாசு முற்காணி
7. இறைவா வரம் தருவாயோ
8. நதியாகிப் போகிறோம்
9. எது வசந்தம்
10. சொல்வது எல்லாம்
11. கொலை செய்யும் காதல்
12. நீதி பேசிய சிலம்பு
13. எழுத்தறிவின் மேன்மை
14. இயற்கைச்சீற்றம்
15. சொற்களற்ற மயானம்
16. இளையவன் சிவா கவிதைகள்
17. சில அடங்கல்கள்
18. கவிஞர் நிழலி கவிதை

**பத்தி**

கனடா நாதவீணா மன்றத்தின் ஆண்டு விழா
ஹைக்கூ முற்றம் நிகழ்ச்சி

**துளிப்பாக்கள் (ஹைக்கூ)**

**மரபுக்கவிகள்**

நேரிசை வெண்பா - போதையில்லா சமூகம்

**தொடர் நவீனம்**

கரிசல் மண்ணில் ஒரு காவியம் - பாகம் - 6

**கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...**

உங்கள் கேள்விகளுக்கு **'கீரர்'** பதிலளிக்கிறார்

**நிகழ்வுகள்**

இளங்கோவும் தாத்தாவும் சிறுவர் இலக்கிய வெளியீடு
திருமதி தயாழினி சிவநாதனின் மூன்று நூல்கள் வெளியீடு
கிண்ணியா சபீனா அவர்களுக்கு இலக்கிய வித்தகர் விருது
ஒட்டகச்சிவிங்கி பொம்மை சிறுவர் இலக்கிய வெளியீடு
துளித்தேன் ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு

# தமிழில் வேற்று எழுத்து பயன்பாடும் பயன்படுத்துவதில் தோன்றும் எதிர்ப்புகளும்

*உலகெங்கும் வாழும் என் இனிய தமிழ் நெஞ்சங்களே உங்கள் அனைவருக்கும் நற்றமிழ் வணக்கம். இனிய தைத்திருநாள் நல்வாழ்த்து உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும். வாழ்க வளத்துடன்.*

*இரவி மின் இதழின் 2026ஆம் ஆண்டுக்கான 1வது இதழுடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. எமக்கு தொடர்ச்சியாக நீங்கள் வழங்கிவரும் பேராதரவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் படைப்புகளைத் தவறாது அனுப்பிவைத்து எம்மோர்டு இணைந்து பயணிக்கும் அனைத்து மூத்த ஆளுமைகளுக்கும் தற்போது துளிர்விட ஆரம்பித்திருக்கும் படைப்பாளர்களுக்கும் உங்கள் தொடர்ச்சியான பங்களிப்புக்களுக்காக நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து* ***'இரவி'*** *சஞ்சிகையை பன்நெடுங்காலம் ஆவணப்படுத்திப் பாதுகாத்திட முனைப்புக்காட்டி இவ்விதழை ஆவண காப்பகத்தில் தரவேற்றம் செய்ய ஆரம்பித்துவிட்ட* ***'நூலகம்'*** *நிறுவனத்தின் நிறுவுநர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றியை தெரிவிக்கிறேன். (தற்போது.* ***'இரவி'*** *சஞ்சிகையை யார் வேண்டுமானாலும் நூலகம் இணைய ஆவணக்காப்பகத்திலிருந்து தரவிடக்கம் செய்து வாசிக்கலாம்). அனைவரும் தொடர்ச்சியாக உங்கள் ஆதரவை எமக்கு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது வெளியீட்டை தொடர்கிறோம்.*

*இந்த இதழில் தற்போது கூடுதலாக முன் வைக்கப்படுகின்ற பிரச்சனை அல்லது சர்ச்சைக் குரிய விடயமாகிய, தமிழில் இல்லாத வேற்று மொழி எழுத்துக்களும் அவற்றை பயன்படுத்துவதற்கான எதிர்பும் பற்றிய விடயத்தைப் பற்றி பலரிடம் எழும் குழப்பம் காரணமாக அதைப்பற்றி இந்த பதிவில் எனது கருத்த்தை எழுதுகிறேன்.*

*முதலில் தமிழ் பயன்பாட்டில் உள்ள வேற்று மொழி எழுத்துகள் எவை என பாத்தால் ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, ஸ்ரீ, போன்ற எழுத்துகளே அவை. இந்த எழுத்துகளை தவிர்ந்து வேறு எழுத்துகள் தமிழில் வேற்றுமொழிச் சொற்களில் இருந்து கொண்டுவரப்பட்டுப் பயன்படுத்தப் படுவதில்லை. தமிழ் அரிச்சுவடியில் உள்ள எழுத்துகள் நாம் அறிந்தவையே. அவை தவிர்ந்த அனைத்து எழுத்துகளும் வேற்றுமொழி எழுத்துகளே எனக்கொள்வோம்.* ***தமிழ் அரிச்சுவடியில் உள்ள தமிழ் எழுத்துகளாவன:***

***உயிர் எழுத்துகள்: 12 அ முதல் ஔ வரையுள்ளவை***

***மெய் எழுத்துகள்: 18 க் முதல் ன் வரையுள்ள****வை*

***ஆயுத எழுத்து : 1 ∴ ஆக மொத்தம் 31 எழுத்துகள்***

*உயிர் மெய் எழுத்து: மெய்யுடன் உயிர் கலந்து பிறந்தவை (எ.கா: க் + அ = க) உயிர் மெய் எழுத்து கள் ஆகும். 18 மெய்யெழுத்துகளுடனும் 12 உயிர் எழுத்துகளினதும் சேர்க்கையால் பிறப்பிக்கப் படும் ஒலியை எழுப்புவனவாக அமையும் எழுத்துகள். ஆக அவற்றின் எண்ணிக்கை 12 X 18 = 216 இவற்றுடன் மேற்கூறிய முதன்மை எழுத்துகள் 31ஐயும் சேர்க்க வருவது 247, இவையே இலக்கண விதிமுறைகளின்படி தமிழ் அரிச்சுவடியில் சேர்க்கப்பட்டுள்ள தமிழி மொழியின் மொத்த எழுத்துகள் ஆகும். இவை தவிர்ந்து வேறு எந்த எழுத்து தமிழ் சொல்லில் பயன்படுத்தப்பட்டாலும் அது வேற்றுமொழி எழுத்தே எனக்கொள்ளலாம். ஆகவே எமக்கு எது தமிழ் எழுத்து எது வேற்றுமொழி எழுத்து என்பது தெளிவாக தெரியும். தெரிந்தேதான் தமிழல்லாத எழுத்துகளை பயன்படுத்துகின்ற தவறை செய்கிறோம். இந்தத் தவறு தற்போது தோன்றியதல்ல. தமிழில் சமஸ்கிருத வார்த்தைகள் நிறைந்து மணிப்பிரவாளம் புழக்கத்திலிருந்த காலத்திலிருந்தே இந்த தவறு இடம்பெறத்தொடங்கிவிட்டது. ஆகவே இதனை ஒரே நாளில் திருத்துவதென்பது கடினமானவிடயம்தான். தமிழ் அல்லாத எழுத்துகளை தமிழுக்குள் பயன்படுத்தாத ஒரு தமிழ் சமூகத்தை உருவாக்குவதென்பது மிக்க மகிழ்ச்சிகரமானதும் வரவேற்கத்தக்க தும் அவசியமானதுமான விடயமே.*

*இந்த எழுத்துகள் பயன்படுத்தப்பட்டமைக்கான காரணம் தமிழில் சில சொற்களில் ஒலிகளை அதற்கமை வாக வெளிப்படுத்துவதற்கான எழுத்து இல்லாமல் இருந்தமையே. அதே வேளை இந்த ஒலிகளின் மாற்று வடிவங்களை வழங்கும் எழுத்து இருந்தாலும் அவற்றை பயன்படுத்தினால் உச்சரிப்புக்கமைவாக ஓசையில் வேறுபாடு ஏற்படும். அந்த ஓசை வேறுபாடுகளை சரிசெய்வதற்காகவே இந்த கிரந்த எழுத்துகளை பயன்படுத்தத் தொடங்கினர் மூதாதையர் என்றே அறியமுடிகிறது.*

*இந்த விடயம் தற்போது தமிழ் மொழியின் அதி தீவிரமான பற்றாளர்கள் என தங்களை அடையாளப் படுத்துபவர்களால் தொடர்ச்சியாக விவாதத்துக்கு உட்படுத்தப்படுகிறது. நான் அண்மையில் ஒருசில முகநூல் நண்பர்களின் பதிவுகளையும் பார்த்தேன், அவர்கள், வேற்று மொழி எழுத்துகளையோ*

சொற்களையோ பயன்படுத்துவோர் எனது நட்பு வட்டத்தில் இருந்து விலகிக்கொள்ளுங்கள் என்று பதிவிட்டிருந்தார்கள். எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. நட்புக்கும் இந்த மொழிக்கலப்பு சார் குழப்பத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. இதனை உடனடியாக ஒரே நாளிலோ மாதத்திலோ மாற்றியமைப்பது என்பது சவாலான விடயம் அல்லவா?.

ஆம், ஒவ்வொருவருடையவும் ஆரம்பக்கல்வி கற்கும் காலத்திலேயே இது அவர்களிடத்தில் புகுத்தப் பட்டுவிட்டது ஆகையால் இது சிரமம்தான் என்று கடந்து போய்விடவும் முடியாது. எனது கவிதைகளிலேயே சில கவிதைகளை மட்டும் சிறப்பான கவிதையென்று விமர்சனம் செய்த மற்றொரு பிரபலமான கவிஞரிடம் அது ஏன் சில கவிதைகள் மட்டும் உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்று வினவினேன். அதற்கு அவர் கூறிய பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எந்தக் கவிதைகளிலெல்லாம் நான் ஸ்பரிசம், தர்க்கம், பிரபஞ்சம், அநுக்கிரகம், ஜனனம், ஈனம், சந்தர்ப்பம் போன்ற வடமொழிச் சொற்களை பயன்படுத்தீருந்தேனோ அவையே அவரை மிகவும் கவர்ந்திருந்தது. அந்தச்சொற்களை அவர் சிறந்த தமிழ்சொற்கள் என்றும் குறிப்பிட்டமை இன்னும் வியப்பில் ஆழ்த்தியது. அந்த அளவுக்கு வடமொழிச் சொற்கள் அநேகமானவர்களிடத்தில் உறைந்துபோய் இருக்கிறது. இதை பார்க்கையில் உங்களுக்கே சிரிப்பு வரவில்லையென்றால் அதுகூட ஆச்சரியம்தான். இவ்வாறு பல வேற்று மொழிச்சொற்கள் தமிழில் கலந்துள்ளன. அநேகமான படைப்பாளர்கள் அறியாமலே பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே மாற்றத்தை கொண்டுவருவதாயின் சில விடயங்கள் ஆரம்ப செயற்பாடுகளாக செய்யப்படவேண்டியிருக்கிறது. அவற்றை யார் ஆரம்பிப்பது, யார் செய்வது என்பதை தமிழ் சான்றோர் உலகுதான் தீர்மானிக்கவேண்டும். இதனை மாற்றுவதற்கு விரைந்து சில நடைமுறைகளை மேற்கொள்வது உறுதியான மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்பதே எனது கருத்து.

குறிப்பிட்ட தமிழல்லாத வேற்றுமொழி எழுத்துக்கு நிகரான ஒலி, ஓசை வடிவத்தைத் தரக்கூடிய தமிழ் எழுத்துகளை வடிவமைத்து தமிழ் அரிச்சுவடியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

புதிய எழுத்து வடிவங்கள் உருவாக்கப்படாத பட்சத்தில் இருக்கக்கூடிய எழுத்துகளில் இந்த ஓசையை தரக்கூடிய எழுத்துகளை அடையாளம் கண்டு அவற்றை ஓசை 1, ஓசை 2, ஓசை 3 என்று வரையறை செய்து அறிமுகம் செய்யலாம். இது புதிய எழுத்து உருவாக்கம் போன்றதல்ல, சற்று குழப்பகரமானதே

சில ஓசையை சரியாக கொண்டுவருவதற்கு ஏற்ப ஏனைய நடைமுறையிலுள்ள எழுத்துகளுடன் மற்றொரு எழுத்தை சேர்த்து பயன்படுத்தும் முறைமையை கொண்டு வரலாம். (எ. கா: அஹோரம் - அ.்.கோரம், ஹைக்கூ - .்.கய்கூ)

அனைத்து பிற மொழிச் சொற்களையும் அடையளம் கண்டு, அவற்றை பட்டியலிட்டு வெளியிடுவதோடு அவற்றின் பயன்பாடு குறிப்பிட்ட திகதியிலிருந்து தமிழ் மொழிப் பயன்பாட்டில் தவிர்க்கப்படவேண்டும் என்ற அறிவிப்பை கொண்டுவரலாம்.

தமிழ் தட்டச்சு மென்பொருளில் இந்த எழுத்துருக்களை அறவே இல்லாமல் செய்யலாம்.

ஸ்ரீ என்ற எழுத்துக்கு பதிலாக சிறீ என்று எழுதுவதை நடைமுறைக்கு கொண்டுவரலாம்.

'ஸ்ரீ' எழுத்துபற்றி குறிப்பிடுகையில் ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. இலங்கையில் ஒரு காலப்பகுதியில் வாகனங்களின் இலக்கத்தகட்டில் ශ්‍රී (இது சிங்கள எழுத்து) என்ற எழுத்து போடப்படுகின்ற நடைமுறை வந்தது. அப்போது தமிழ் தலைமைகள் அதை எதிர்க்கிறோம். ஒரு போதும் அந்த எழுத்தை பயன்படுத்த மாட்டோம் என எதிர்ப்புப்போராட்டம் நடாத்திக்கொண்டு அதற்குப்பதிலாக தமது வாகனங்களில் ஸ்ரீ என்ற எழுத்தைப் போட்டுக்கொண்டு வலம்வந்தார்கள். இதுகூட தமிழ் எழுத்து இல்லை என்பதை அறியாதவர்களாக இருந்தது அவர்கள் அறியாமையோ?.

தமிழ் மொழிப்பரீட்சைகளில் பிறமொழிச் சொற்கள், பிறமொழி எழுத்துகள் பயன்படுத்தப்பட்டால் புள்ளி குறைப்பை மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு செய்யலாம்

பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியிலேயே தமிழ் அல்லாத பிறமொழி எழுத்துகளையும் சொற்களையும் தவிர்க்கவேண்டும். பயன்படுத்தப்பட்டால் அது நடவடிக்கைக்குரிய தவறு என அறிவிப்பது சிறப்பு.

இவ்வாறான செயற்பாடுகளை தகைசார் வல்லுனர்களும் அறிஞர்களும் இணைந்து விரைந்து மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாற்றம் சாத்தியமாகும். அதுவரை பயன்படுத்துதல் சார்பான சர்ச்சையை செய்பவர்கள் செய்துகொண்டே இருப்பார்கள் பயன்படுத்துபவர்கள் கண்டும் காணாததுபோல் பயன்படுத்திக் கொண்டே இருப்பார்கள். முடிந்தவரை அனைத்து தமிழர்களும் தற்போதிருந்தே படிப்படியாக வேற்று எழுத்து மற்றும் சொற்களின் பயன்பாட்டையும் தவிர்ப்பது சிறப்பே.

மீண்டும் அடுத்த இதழில் மற்றொரு தலைப்புடன் உங்களை சந்திக்கிறேன்.

அதுவரை நற்றமிழ் வணக்கத்துடன்

**பிரதம ஆசிரியர்**



# பவள விழாக்கண்ட சாதனைத்திலகம்

தமிழின் சிறப்பை உலகறிச்செய்யும் சிறந்த செயற்பாட்டுகளில் ஈடுபடும் அனைவருமே போற்றுதற்கும் மாட்சிமைக்கும் உரியோரே. அந்த வகையில் ஏற்கனவே தமிழ் இலக்கியத்துறையில் ஆழக் கால்பதித்து உலகத் தமிழர்கள் மத்தியில் தம்மை இலக்கிய கர்த்தாக்கள் என இடம் பிடித்துக்கொண்ட பெண் ஆளுமைகள் சிலரைப் பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அந்த வரிசையில் அண்மையில் தனது 75வது அகவையில் கால்பதித்து தமிழ் இலக்கிய உலகத்தினரால் பவள விழா நாயகியாகப் போற்றப்பட்டு மதிப்புரவு செய்யப்பட்ட பெண் ஆளுமையாகிய **சாதனைத்திலகம் கலாபூசணம் திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா** அவர்களை பற்றியே இந்தக்கட்டுரையில் பதிவுசெய்கிறேன்.

கோகிலா மகேந்திரன் அவர்கள் உண்மையிலேயே போற்றுதற்குரிய ஒரு மிகச் சிறந்த ஆளுமையாகவே நான் பார்க்கிறேன். இன்றைய தமிழ்ப் படைப்புலகத்தில் ஒன்று, இரண்டு வெளியீடுகளை தந்துவிட்டு அல்லது ஒரு சில ஆக்கங்களை மட்டும் பதிவிட்டதுமே பிரபல்மாகிவிடவும் விருதுகளை தம் வசப்படுத்தவும் எத்தனித்துக்கொண்டிருக்கும் சில படைப்பாளர்கள் மத்தியிலே சமூகம் சார்ந்து தனது பயணத்தை அர்பணித்து சமூகப்பற்றுடனான களப் பணியாளராக வலம்வந்தவர். பல்வேறு சாதனைகளை கடந்த தனது 75 வருடகால வாழ்க்கையில் சாதித்து காட்டியிருப்பவர் இன்னமும் சாதிக்க தயாராக செயற்பட்டுக் கொண்டிருப்பவர் அம்மையார் கோகிலா மகேந்திரன் என்றால் அது மிகையாகாது. இவரது சாதனைகள் ஒன்று இரண்டல்ல சுருக்கமாய் பதிவிட்டுச் செல்வதற்கு. அவை ஒரு பெரும் பட்டியலாக நீண்டுகொண்டே செல்கிறது. இவரது பவள விழாவையொட்டி இவரின் பன்முகப்பட்ட செயற்பாடுகளை வெவ்வேறு பிரிவுகளாக எழுத்தாளர் லெ. முருகபூபதி, எழுத்தாளர் சு. ஸ்ரீகந்தராசா, வளர் சஞ்சிகை ஆசிரியர் கிருஷ்ணானந்தன் மற்றும் பேராசிரியர் பிரவீணன் மகேந்திரராஜா ஆகிய வெவ்வேறு ஆளுமைகள் வழங்கியிருந்தார்கள். இந்த தொகுப்புகளை **'வீடியோஸ்பதி'** என்ற யூரியூப் சானலில்கேட்கலாம்.

## கலாபூசணம் கோகிலா மகேந்திரன்

எனக்கு கோகிலா மகேந்திரன் அம்மையாருடன் நீண்ட கால இலக்கிய படைப்புத்துறை சார்பான தொடர்புகள் இல்லை. ஆனால் எனது பணியின் நிமித்தம் சில சந்தர்ப்பங்களில் சந்தித்ததுண்டு. நான் சமூக செயற்பாட்டாளராக 35 வருடங்களுக்கும் மேலாக செயற்பட்டு வருபவன். எனது செயற்பாடுகளில் உளவியல் சார் ஆற்றுப்படுத்துகை செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தி அந்த செயற்பாடுகளுடன் பரீட்சையமான அனுபவம்வாய்ந்த பலருடன் தொடர்புகொண்டு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறேன். அப்போது என்னுடன் செயற்பட்டுக்கொண்டிருந்த உள சமூக ஆற்றுப்படுத்துகை செயற்பாட்டுக் குழாமிற்கான பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்கும் செயற்பாடுகளின் பொருட்டு அவரை அணுகி சில உதவிகளைப் பெற்றிருக்கிறேன். அந்த சந்தர்ப்பங்களில் அவரை சந்தித்த அனுபவம் மிகச் சிறப்பானது. மிகவும் சாந்தமான, மனம் மகிழக்கூடியவிதமான மற்றும் அமைதியான குணசுபாவங்களைக் கொண்டவர்.அம்மையார். இந்த செயற்பாடுகளின் பொருட்டு கிடைத்த வாய்ப்பை மிகவும் பெறுமதிமிக்க வாய்ப்புகளாக கருதுகிறேன். அது ஒரு புறம் இருக்க அவரைப்பற்றிய ஏனையவிடயங்களுக்குள் நகர்வோம்.

இவரது தமிழ் இலக்கிய வெளியிலான பயணம் பரந்து விரிந்த ஆலம் விருட்சம் போல் கிளைகள் பரப்பியதான விசாலமான பயணம் இந்தப் பயணத்தின் இவரது முதல் சுவடு **'மலர்களைப் போல் தங்கை'** என்ற குறுநாவலுடன் ஆரம்பிக்கிறது. ஆயினும் முதன் முதலாக அச்சுப்பதிப்பைப் பெற்று வெளியீடாகிய சிறுகதை **'அன்பிற்கு முன்னால்'** என்ற சிறுகதையாகும். இந்த சிறுகதை **'குயில்'** என்ற சஞ்சிகையில் 1972ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் மொத்தமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தனது சிறுகதைகளைக்கொண்டு ஆறு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவர் சாதாரணமாக கதாசிரியராக கதைகளை மட்டும் வெளியிட்டு வருபவராக இல்லாமல் வேறும் பல்வேறு படைப்புகளை தமிழ் சமூகத்திற்காகத் தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற துர்க்கை அம்மன் கோவில் கொண்டுள்ள ஊராகிய தெல்லிப்பளையின் விழிசிட்டி என்ற கிராமத்தில் செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் செல்லமுத்து அவர்களுக்கும் மகளாக 17ஆம் திகதி கார்த்திகை மாதம் 1950ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை சமய மேம்பாட்டு செயற்பாடுகளின்

பொருட்டு மேற்கொண்ட சமய எழுத்தாக்கங்களிற்காக சாகித்திய விருது பெற்றவர். தந்தை தெல்லிப்பளையின் பிரசித்திபெற்ற சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் அதிபராக பணிபுரிந்தவர். பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக்கற்ற கோகிலா மகேந்திரன் அவர்கள் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூாயில் உயர் கல்வியையும் பயின்றார். உயர்கல்வியில் உயிரியல் துறையை தேர்வுசெய்திருந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவி இவராவார். யாழ்ப்பாணம் பொலிகண்டியில் அமைந்துள்ள இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அறிவியல் ஆசிரியராக பணியை ஆரம்பித்த இவர் தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி போன்றவற்றிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றினார். அதைத்தொடர்ந்து வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் தனது பணியை மேற்கொண்டு ஓய்வுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அளவெட்டியூரின் அருணோதயாக்கல்லூரியின் அதிபராக இருந்த கிருஸ்ணர் மகேந்திரராஜாவை 1976ஆம் ஆண்டில் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தார்.

தமிழ் இலக்கியப் படைப்பாளராக தனது பணிகளுக்கு மத்தியிலும் செயற்பட்ட இவர் உளவளத்துறையிலும் ஈடுபாடுகாட்டி ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டார். அத்தோடு முக்கலைகளில் ஒன்றாகிய நாடகக் கலையிலும் கற்றுத் தேர்ந்ததோடு அதனைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். நாடகக் கலையின் ஈடுபாட்டால் 23 நாடகங்கள் இவரால் எழுதப்பட்டு நெறியாழ்கை செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி சில நாடகங்களில் பாத்திரமேற்று நடிப்புத் திறனையும் வெளிப்படுத்தியுள்ளார். இவரது நாடகங்களில் ஒன்றாகிய **'கேள்விகளின் முகம்'** நாடகம், **நாடக கலாவித்தகர்** என்ற பட்டத்தை வட இலங்கை சங்கீத சபையிடமிருந்து இவர் பெற்றுக்கொள்வதற்கு வித்திட்டது. இவர் எழுதிய நாடகங்களின் தொகுப்பாக **'குயில்கள்'** என்ற தலைப்பில் நாடகத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.



இவர் தனது இலக்கிய பயணத்தில் **விழி, விழிசைக்குயில், பசுந்தி, பதுமலாஞ்சனன்,** போன்ற புனை பெயர்களில் தனது படைப்புகளை எழுதி வெளியிட்டார். இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கதைகளில் தோர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைக்களைக்கொண்டு ஆறு சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவரதுசிறுகதை வெளியீடுகளில் **'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்', 'பிரசவங்கள்'** போன்ற இரண்டு தொகுப்புகளும் தேசிய சாகித்திய விருகளைப்பெற்ற சிறுகதைத் தொகுப்புகளாகும். **'மனித சொரூபங்கள்', 'முரண்பாடுகளின் அறுவடை', 'முகங்களும் மூடிகளும்', 'வரிக்குயில்'** போன்றவை இவரது ஏனைய சிறுகதைத் தொகுப்புகளாகும். **'தூவானம் கவனம்', 'துயிலும் ஒரு நாள் கலையும்', 'சந்தனச் சிதறல்கள்'** போன்றவை இவரது நாவல்களாக வெளிவந்த படைப்புகளாகும்.

இத்தனை சாதனைகளுக்கு சொந்தக்காரராகிய இவர் வானொலியையும் விட்டு வைக்கவில்லை. **'சைவ நற்சிந்தனை'** என்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய தொடரின் குரலிற்குச் சொந்தக்காரராகிய இவரது குரல் அப்போது மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது செயற்பாடுகளால் கவரப்பட்ட இலங்கை வானொலி **நவசக்தி, கலைக்கோலம், இளவேனில், இசையும் கதையும், பூவும்பொட்டும் மங்கையர் மஞ்சரி** போன்ற நிகழ்சிகளில் இவரையும் உள்வாங்கிக்கொண்டமை வரவேற்கத்தக்கதே.

உளவியல் சார் செயற்பாடுகளில் ஈடுபட்ட இவர் உளவியல் சார்ந்த சிறுவர் நூல்களையும் படைத்து வெளியிட்டுள்ளார். அவற்றில் **'சின்னச்சின்னப் பிள்ளைகள்', 'உள்ளக் கமலம்', சுனாமியில் சிதறிய சித்திங்கள்', 'முற்றத்தில் சிந்திய முத்துகள்', மகிழ்வுடன் வாழ்தல்', 'சிறுவர் உலகம்'**, போன்றவை குறிப்பிடக்கூடிய நூல்களாகும். அத்தோடு சிறுவர் உளவியல் சார்ந்த உளவியல் கைநூல்களின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் கலாபூசணம் கோகிலா மகேந்திரன் அவர்கள் செயற்பட்டுள்ளார் என அறியக்கூடியதாக இருக்கிறது. **'கற்றல்'** என்ற கல்வி உளவியல் பயிற்சிக் கைநூலின் ஆசிரியர்களுள் இவரும் ஒருவர் என்பது குறிப்பித்தக்கது. **'மல்லாகத்தின் வரலாறும் அதன் அபிவிருத்தியும்', 'கலையும் வாழ்வும்', 'விழிமுத்து', விழிசைச் சிவம் ஜனன நூற்றாண்டு மலர்'**, ஆகியவற்றின் தொகுப்பாசிரியராகவும் இவர் இருந்தார் என்பது மற்றொரு சிறப்பான விடயமாகும். அது மட்டுமன்றி இவர் ஆசிரியராக இருந்து வெளியீடு செய்த **'விழிசைச் சிவம்', 'தங்கத் தலைவி'** ஆகியவை தனி மனித ஆளுமைகள் சார்பான நூல்களாகும்.

குறிப்பிட்ட அகவைகளை இவர் கடக்கும்போது இவரின் பொருட்டு **'சோலைக்குயில்', 'விழிசைக்குயில்', 'மாங்குயில்', 'பவளமல்லிகை'** போன்ற மலர்கள் முறையே 60, 65, 70, 75ஆவது அகவைகளில் வெளிவந்துள்ளமை இவர் வாழ்க்கைக் காலத்தில் இவரது வரலாற்றுப் பதிவுகளை செப்புவனவாக அமைந்துள்ளன. பவளமல்லிகை 21.12.2025அன்று இவரது பவளவிழா மலராக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரது நூல்களில் பரிசு பெற்றவை **'குயில்கள்'**, தேசிய இலக்கியப் பேரவையின் பரிசு பெற்றது. **'உள்ளம் பெருங்கோயில்'**, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் பரிசு பெற்றது. **'முகங்களும் மூடிகளும்'**, தேசிய இலக்கியப் பேரவையின் பரிசு பெற்றது. அடுத்து **'நேர்கொண்ட பார்வை'** என்ற நூல் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் பரிசினைப் பெற்றது.

இவை தவிர்ந்து விருது பெற்ற இவரது படைப்புகள்:

**வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்** - அரசு இலக்கிய விருது மற்றும் வட மாகாண இலக்கிய விருது போன்றவற்றைப்பெற்றது.

**பிரசவங்கள்** - சாகித்திய இலக்கிய விருது பெற்றது.

**மனமெனும் தோணி, குடும்பம் ஒரு கதம்பம்** ஆகிய இரு நூல்களும் வடக்கு மாகாண இலக்கிய விருதை பெற்றவை.


சாகித்திய விருது 1998

இவற்றைவிட பொதுவான பல விருதுகளை தமிழ் இலக்கித்துறைக்காக இவர் ஆற்றிய சிறந்த செயற்பாடுகள் மற்றும் இவரது படைப்புகளின்பொருட்டும் பெற்றுக்கொண்டார். அத்தோடு பல பட்டங்களையும் பெற்றுக்கொண்டார். **இவர் பெற்றுக்கொண்ட பட்டங்களாவன:** இலக்கிய வித்தகர் இந்து சமய தமிழ் கலாசார இராஜாங்க அமைச்சால் வழங்கப்பட்டது. மேலும் கலைச்சுடர் யாழ்ப்பாணம் வலி வடக்கு பிரதேச செயலகத்திடமும், கலபூசணம் பட்டத்தை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடமிருந்தும், சமூக திலகம் பட்டத்தை யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையத்திடமிருந்தும், திருமுறை நெறிச் செல்வர் பட்டத்தை திருவாவடுதுறை ஆதீனத்திடமிருந்தும், கலைப்பிரவாகம் பட்டத்தை வட இலங்கைச் சங்கீத சபையிடமிருந்தும், செம்புலத் திருமகள் பட்டத்தை யாழ்ப்பாணம் சுண்ணாகம் சிவன் சிறுவர் கழகத்திடமிருந்தும், கலா வித்தகர் பட்டத்தை வட இலங்கைச் சங்கீத சபையிடமிருந்தும் பெற்றுக்கொண்டார்.

**இவர் பெற்றுக்கொண்ட ஏனைய விருதுகள் வருமாறு:**

கொடகே தேசிய எழுத்தாளர் விருதை 2009 ஆம் ஆண்டு பெற்றார்

தமிழியல் விருதை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்திடமிருந்து 2010ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திடமிருந்து முதலமைச்சர் விருதை 2014இல் பெற்றார்

மூத்த நடாக எழுத்தாளர் விருது றோயல் கல்லூரி தமிழ் மன்றத்தால் 2015இல் வழங்கப்பட்டது

ரூபராணி ஜோசப் நினைவு இலக்கிய விருது கண்டி மக்கள் கலை இலக்கிய மன்றத்தால் 2017ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

சிவத்தமிழ் விருது, சிவத் தமிழ்ச்செல்வி அறநிதியச் சபையால் 2020இல் வழங்கப்பட்டது

மகாஜனா பழைய மாணவர் தாய்ச் சங்கத்தால், மகாஜனா விருது 2019இல் வழங்கப்பட்டது.

அரச கேசரி விருது, யாழ் மாநகர சபை இயல் துறையால் 2023ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

இரா. உதயணன் இலக்கிய நிறுவனத்தால் 2023ஆம் ஆண்டு வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.

தமிழ் வித்தகர் விருதை சைவப் புலவர் செல்லத்துரை அறக்கட்டளையிடமிருந்து 2024ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.

இவை மட்டுமன்றி மேலும் பல விருதுகளை பெற்றுக்கொண்டவர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவரது படைப்புகளின் பட்டியல் மிக நீளமானது. ஆகவே அவற்றை இங்கு பதிவிடுவதற்கு ஒதுக்கப்பட்ட பங்கங்கள் போதாது. ஆகவே மற்றொரு பதிவில் அவற்றை வேறாக தர முயல்கிறேன். இத்தனை சாதனைகளை ஒரு பெண்ணாக தமிழ் இலக்கியத்தில் புரிந்த இவர் அண்மையில் இவரது 75ஆவது அகவை நிறைவின்போது மிகப்பிரமாண்டமாக மதிப்பளிக்கப்பட்டு 75ஆவது ஆண்டு பவளவிழா நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு பவளவிழா மலர் ஒன்றும் வெளியீடு செய்துவைக்கப்பட்டது. இலக்கிய ஆர்வலர்கள், தமிழ் பற்றாளர்கள், இயல் இசை நாடகம் போன்ற முத்தமிழ் செயற்பாடுகளிலும் ஈடுபடும் ஆளுமைகள், மற்றும் ஏனைய சாதனைகளைப்புரியும் சாதனையாளர்கள் அனைவரும் வாழும்போதே மதிப்பளிக்கப்படவேண்டியவர்கள் என்பது எனது கருத்து. அந்த வகையில் பலதுறை ஆளுமை பல பட்டங்களை தன்னகம் வைத்திருக்கும் இலக்கிய வித்தகர், கலா வித்தகர், சமூக திலகம் கோகிலா மகேந்திரன் அவர்கள் மிகச்சிறந்த முறையில் மதிப்பளிக்கப்பட்டமையில் அகமகிழ்வதோடு மேலும் பல சாதனைகளை தமிழ் உலகில் வாழும்காலம் வரை நிகழ்த்த நானும் இறை ஆசிவேண்டி அம்மையாரை வாழ்த்தி நிறைவுசெய்கிறேன். **(- - நரேஸ் -)**

# தை பிறந்தால்

## தைத்திருநாள் சிறப்புக் கவிதை

*– ந .இரவிச்சந்திரன் – பழனி*



மாற்றங்கள் வரலாம்
முன்னேற்றங்கள் வரலாம்
அறுவடை
தானியங்களால் களஞ்சியம் நிறையலாம்
அவரவர் உழைப்புக்கு ஏற்ப
அட்சயப்பாத்திரம் கிடைக்கலாம்
ஆரோக்ய
பெருவாழ்வு அமையலாம்
எண்ணிய ஈடேறலாம்
ஏழ்மை.நிலை மாறலாம்
புன்னகை பூக்கலாம்
புத்தெழில் பிறக்கலாம்
ஆன்மீகம் பெருகலாம்
அமைதியே நிலவலாம்
அன்புசால்
தோழமை கொண்ட
நட்பு வட்டம் பெருகலாம்
தங்கத்தின் விலையை கேட்டும்
பெட்டகத்தில் பார்த்தும் ரசிக்கலாம்.
மண்மகளுக்கு
மகுடம் சூட்டலாம்.
மஞ்சள்/ கரும்பு /
வாழை/ புதுநெல்/
பயிர்கள் யாவும்
விளையக் கண்டு மனம் மகிழலாம்.
போகியின் பெயர் சொல்லி.
பழையன கழியலாம்.
புதுவரவாம்
தை திருநாளில்.
பொலிவாய் மகிழ்வாய்
புது வாழ்க்கை அமையலாம்
எல்லாம் நலமாக
என்றும் நலமாக
நினைத்தவை நிறைவேற
கனவு மெய்பட
இறைவனை வேண்டலாம்
மாத மாதம் ரூ. 3000
கிடைக்குமா பார்க்கலாம்..?
(தமிழகத்தில் அரசு வழங்கிய பொங்கல் பரிசு)
தேர்தல் கால போனசும்
இனி
கிடைத்தாலும் கிடைக்கலாம்
ஆயிரம் இருந்தாலும்
அவரவர் உழைப்புதான்
அவரவர்க்கு சோறிடும்
தை பிறந்தால்.
மட்டுமல்ல.
எது பிறந்தாலும்
எப்போது பிறந்தாலும்
எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவேயன்றி வேறொன்று
அறியோம் பரா பரமே.
என யாவரும் வேண்டலாம்
அனைவர்க்கும்
இனிய தை திருநாள்
நல் வாழ்த்துகள்.

# கனடா நாதவீணா மன்றத்தின் ஆண்டுவிழா – 2025

## சுலோச்சனா அருண்

**க**னடாவில் நாதவீணா மன்றத்தின் 19 வது ஆண்டு நிறைவுவிழா சென்ற வாரம் மிகச் சிறப்பாக ரொறன்ரோவில் உள்ள தமிழ் இசைக்கலா மன்றத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு விழாவில் ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான குரு அரவிந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். மங்கல விளக்கேற்றி, தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா தேசியப் பண் இசைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

வீணை ஆசிரியர் திருமதி குகனேஸ்வரி சத்திய மூர்த்தி கனடாவில் கடந்த 19 வருடங்களாக நாதவீணா மன்றத்தின் அதிபராக இருந்து வீணை இசையைக் கற்பித்து வருகின்றார். இவர் இசைக்கலைமணி பட்டத்தையும், வடஇலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரத்தை முடித்து சங்கீதகலாவித்தகர் பட்டத்தையும் வீணையிசை யில் பெற்றவர். இவரிடம் வீணை இசை கற்ற 8 மாணவர்கள் இதுவரை கனடாவில் அரங்கேற்றம் முடித்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்வில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றித் தமது திறமையை வெளிக்காட்டியிருந்தனர். மொழிக்கலப்பில்லாமல் தமிழ் பாடல்களை வீணையில் இசை மீட்டமுடியும் என்பதை ஆசிரியர் தனது மாணவர்கள் மூலம் வெளிப்படுத்தியிருந்தார். அது மட்டுமல்ல, முருகனைப் போற்றும் பக்திப் பாடல்களும் இந்த நிகழ்வில் இடம் பெற்றிருந்ததால், பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில்,

நாத வீணா மன்றத்தின் தாரக மந்திரமாக **‘ஒரு மைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து.’** என்ற திருக்குறள் இருக்கின்றது. குருவான ஆசிரியரிடம் இருந்து பெற்ற கல்வி தொடர்ந்து பல தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதைத்தான் திரு வள்ளுவர் இங்கே அழகாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், இந்த மாணவர்களில் ஒருவருமே இனி வரும் காலங்களில் ஆசிரியர் களாக மாறா விட்டால், என்ன நடக்கும்? மிகவும் கஸ்டப்பட்டுப் பயின்ற இந்தக் கலை இவர்களுடன் முடிந்துவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், எனவே உங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்தும் இத் துறையில் ஈடுபடுவதற்கு ஆதரியுங்கள், என்னிடம் கல்வி கற்ற சில மாணவர்களை மேடையில் பார்க்கும் போது எனக்குப் பெருமை யாக இருக்கிறது என்று அங்கு கூடியிருந்த பெற்றோர்களுக்கு எடுத்துரைத்தார்.



அவர் மேலும் குறிப்பிடும் போது எங்கள் பாரம்பரிய இசைக்கருவி பற்றிப் பல படலகளில் குறிப்பிடப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். ஆரண்ய காண்டத்தில் **'உற்றவன் காண் தகும் நீண்ட வீணைக்கொடிப் பற்றி ஒடித்து உயர் வானவர் ஆசி கொண்டான்'** என்று கம்பரும், சம்பூர்ண ராமாயணம் திரைப்படத்திற்காக மருதகாசி **'ஆனந்தகான அமுத மழையே பொழிந்து, மனம் தனை உருக வழி செய்த வீணைக்கொடியுடைய வேந்தனே!'** என்று இராவணனைப் பாராட்டுவதையும், 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் **'மாசில் வீணையும்'** என்றும், **'எம்மிறை நல்வீணை வாசிக்குமே'** என்று சம்பந்தரும் பாடியிருப்பதையும் நினைவூட்டினார். மேலும் அவர் தனதுரையில்,

**'வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள் வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்'** என்றும் **'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ'** என்றும் புதுமைக்கவி பாரதியார் வீணை பற்றிக் குறிப்பிட்டதையும், புரட்சிக்கவி பாரதிதாசனோ ஒருபடி மேலே சென்று. **'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?'** என்று கேட்டதையும் குறிப்பிட்டார்.



முற்காலத்தில் தமிழர்கள் பாவித்த **'செங்கோட்டி யாழே'** பின்னாளில் வீணையாக மாறியதாக **'பாணர் கைவழி'** என்ற ஆபிரகாம் பண்டிதரின் மூன்றாவது மகனான வரகுணபாண்டியன் எழுதிய நூலில் மிக விளக்கமாக சொல்லப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினார். சங்க இலக்கியத்தில் திருக்குறள் காலம் வரை யாழ் பற்றியே குறிப்பிடப் பட்டிருந்ததையும், அதன் பின் சிலப்பதிகாரத்தில்தான் யாழ் என்ற சொல்லுக்குப் பதிலாக வீணை என்ற சொல் பாவிக்கப்பட்டதையும், யாழ் என்பதும் வீணை என்பதும் அடிப்படையில் ஒரே கருவியைக் குறிப்பதாகவும், எங்கள் விபுலானந்த சுவாமிகளும் யாழ் பற்றி ஆய்வு செய்து யாழ்நூலை எழுதியிருப்பதையும், இது போன்ற நிகழ்வுகள் எங்கள் மொழியும், பண்பாடும் இந்த மண்ணில் தொடர்ந்தும் நிலைத்து நிற்க வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.


இசை மற்றும் நடன ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்ட நாதவீணா மன்றத்தின் இந்த நிகழ்வை ஆசிரியை சிவலோக நாயகி கெங்கேஸ்வரராஜா மிகவும் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்.



*தெரு விளக்கின் ஒளி*

*பிரகாசமாய் ஒளிர்கிறது*

*மாணவன் கல்வி*



*வீதிகளில் பாரவூர்திகள்*

*உணவைக் காவிச்*

*செல்கின்றன*

*சேமிப்பதற்காக எறும்புகள்*


**- து. நரேஸ் -**

*காதலியின் கடிதங்களை*

*அடிக்கடி*

*படித்துக்கொண்டிருக்கிறான்*

*பாடசாலைப் புத்தகத்துள்*




*ஆற்று நீரில்*

*முட்டி*

*மோதிக்கொண்டிருக்கிறது*

*தெருவிளக்கின் ஒளி*



# ஹைக்கூ கவிகள்

**உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளிவரவேண்டும் என விரும்புவோர்**

**உங்கள் படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான ஆய்வுரைகள் 'இரவி' சஞ்சிகையில் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப iravi.magazine@gmail.com என்ற எமது**

**மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

**கவிதை**

# சொல்வது எல்லாம்...



– ஏ. எஸ்.சுந்தரராஜன் –

தொடர்ந்த
நாளின் பெரும்பகுதியை
செய்தொழிலின்
அழுத்தப்பணிகள்
ஆக்கிரமிக்கும் போது
நாளை விடுமுறையாய்
இருக்கக்கூடாதா

செயலுக்கு பின்
முடிவு சாதகமாக
இருக்காது என்று
தெரிந்த பின்
காத்திருப்பு காலங்களில்
ஏதாவது அதிசயம்
நடக்காதா

வாக்குவாதம்
உச்சம் தொடங்குகையில்
உறவும்
நட்பும்
பகைமையாகும் முன்
வேறு நிகழ்வுகள்
நடந்து முற்றுப்பெறாதா

புரிந்து கொள்ள வேண்டிய
செய்ய வேண்டியவை
பற்றி நீள விளக்கங்கள்
கொடுக்கையில்
கேட்பவர்
கவனகுவிப்பும்
சிந்தனை சிதறல்
இல்லாமல் இருப்பரா

என எண்ணுவது
மனித மனங்கள்

சொல்வது எல்லாம்
வாழ்வியல்
யதார்த்தம்

ஏ. எஸ்.சுந்தரராஜன்
மானாமதுரை

# மௌனமே பேசு...!



**– மாலினி அரவிந்தன் –**
(பீல்பிரதேச கல்விச்சபை, கனடா)

ஜன்னல் காட்சிகள் ரசிப்பதற்கு மிகவும் அழகானவை என்பதை எங்க புதிய வீட்டு ஜன்னலை முதல் நாள் திறந்து பார்த்த போதுதான் எனக்குத் தெரிந்தது. வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இயற்கையை தினமும் ரசிக்க வேண்டும் என்றால், ஜன்னல்கள் காட்சிகள் அற்புதமானவை. வெளி உலகைப் பார்ப்பதற்கு எப்பொழுதும், முக்கியமாக எங்களைப் போன்ற பெண்களுக்கு உதவியாக இந்த ஜன்னல்கள்தான் இருந்திருக்கின்றன.



பள்ளிப்படிப்பு காரணமாக பள்ளிக்குக் கிட்டவாக புதிதாக ஒரு காணி வாங்கி ஆசையாசையாய் நாங்கள் ஒரு கல்வீடு கட்டிக் குடிபுகுந்தோம். எனது அறை ஜன்னலுக்குள்ளால் அப்படித்தான் பள்ளிப்பருவத்தில் அதிகாலை நேரத்தில் செவ்வானத்தையும், ஒன்றை ஒன்று துரத்திப் பிடித்து ஒன்றாகக் கலக்கும் கருமேகக் கூட்டங்களையும், அணிலாடும் முன்றங்களையும் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்.

அடுத்த வீட்டு மாமரமும் அதில் குலைகுலையாய் காய்த்துத் தொங்கும் மாங்காய்களும், அவற்றை ருசி பார்க்கக் கொப்புகள் தாவும் அணில்களும், குருவிகளும் அவ்வப்போது ஜன்னலுக்கூடாகக் கண்ணில் பட்டுத் தெறிப்பதுண்டு. இந்தக் காட்சியைப் பார்க்கும் போதெல்லாம், **'மரம் பழுத்தால் வௌ-வாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை'** என்ற ஔவையாரின் பாடல் அடிக்கடி ஞாபகம் வரும். சுதந்திரமாய்க் கீச்சுக்குரலிசைக்கும் பறவைகளின் இருப்பிடமாய் அந்த மாமரம் இருந்தது.

இதைவிட பக்கத்து வீட்டுக் காணியில் மாமரத்திற்குச் சற்றுத் தள்ளி உள்ள குடிசையில் ஒரு குடும்பம் குடியிருப்பதையும் இந்த ஜன்னலுக்கூடாகத்தான் முதன் முதலில் பார்த்தேன். இயற்கையை ரசித்த எனக்கு அங்கு தினமும் பார்க்கும் காட்சிகள் வித்தியாசமாக இருந்தன. நடுத்தர வயதுடைய கணவன், மனைவி மற்றும் மூன்று பெண் பிள்ளைகள், அவர்களின் உருவத்தை வைத்து வயது எட்டு, பத்து, பன்னிரண்டாய் இருக்கலாம் என்று மனசு கணக்குப் போட்டது.

அவர்கள் அனேகமாக மாமரநிழலில் இருந்துதான் படிப்பார்கள், தங்களுக்குள் கதை சொல்லி விளையா டுவார்கள். பெரியக்கா, சின்னக்கா என்று சின்னப்பெண் இவர்களை அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன். கணவன் குடிகாரனாக இருக்கலாம், காலையில் எழுந்து கணவனும், மனைவியும் வேலைக்குப் போக, பிள்ளைகள் பள்ளிக்கு நடந்து போவார்கள். மாலை நேரங்களில் அவன் வேலையால் வந்ததும் பெரிதாகச் சத்தம் போடுவதும் பின் அடங்கிப் போவதுமாய் இருக்கும். அந்தச் சத்தம்தான் சில நேரங்களில் என்னை ஜன்னலுகூடாக எட்டிப் பார்க்க வைப்பதுண்டு.

ஒருநாள் ஜன்னலுக்கூடாக நான் அடுத்த வீட்டைப் பார்ப்பதைக் கண்ட அம்மாவிடம் நான் ஏச்சு வாங்க வேண்டி வந்தது.

'அவன் குடிகாரன், கண்டான் என்றால் கூடாத பாஷையில திட்டுவான். உனக்கென்ன அங்க விடுப்பு பாக்கக்கிடக்கு' என்று கண்டிப்பாகச் சொன்ன அம்மா ஜன்னல் திரையை இழுத்து மூடிவிட்டுச் சென்றாள்.

அவர்கள் படித்த பாடசாலையில்தான் நான் உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். சைக்கிள் இருந்ததால் அதில்தான் நான் அருகே இருந்த பாடசாலைக்குச் செல்வேன். பாடசாலையால் திரும்பி வரும்போது சினேகிதிகளுடன் கதைத்துக்கொண்டு வருவதால் நானும் சயிக்கிளைத் தள்ளிக் கொண்டு அவர்களுடன் நடந்து வருவேன்.

சில சமயங்களில் இவர்களும் எங்களுடனேயே நடந்து வருவார்கள். பெரியக்கா முகத்தில் ஒருநாளும் நான் சிரிப்பைக் கண்டதில்லை. சின்னக்கா கலகலப்பாகச் சிரித்துப் பேசுவாள்.

'நீங்க கேம்ஸ் ஒன்றும் விளையாடுறதில்லையா?' என்று கேட்டேன்.

'ஆசைதானக்கா, ஆனால் லேட்டாய் போனால் மாமி ஏசுவா' என்றாள் சின்னக்கா.

'மாமியா, யாரைச் சொல்றாய்?' என்றேன்.

'எங்க வீட்ல இருக்கிற மாமியைத்தான் சொல்றன்'

'நீங்க மாமியோடவா இருக்கிறீங்க, அவங்க உங்க அப்பா, அம்மா இல்லையா?'

'இல்லயே, அவங்க எங்கட மாமா, மாமிதான்.'

'மாமா என்றால்.. அம்மாவோட தம்பியா?'

'ஓமக்கா, அவர் அம்மாவோட தம்பிதான், எங்களைப் படிப்பிக்கிறன் என்று சொல்லி இங்கை கூட்டிக் கொண்டு வந்து வெச்சிருக்கிறார், ஆனால் எனக்கு இங்கை இருக்கப் பிடிக்கவே இல்லை.' என்றாள் சின்னக்கா.

'ஏன்?' நான் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் சட்டென்று கதையை மாற்றினாள்.

'உங்களுக்கு மாங்காய் சாப்பிடப் பிடிக்குமாக்கா?' என்றாள்

'சாப்பிடுவேன், ஆனால் புளிக்குமே'

'இருங்க நான் கொண்டு வர்றேன், உப்பும் மிளகும் சேர்த்து அரைத்து, தொட்டுச் சாப்பிட்டால் புளிக்காது'' என்று சொன்னவள் படலையைத் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள், அவளைத் தொடர்ந்து சின்னவளும் உள்ளே ஓடினாள்.

பெரியக்கா மட்டும் என்னோட அவங்க வீட்டு வாசல்ல நின்றாள். நான் சயிக்களைப் பிடித்தபடி நின்றேன். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளுக்குக் கதை கொடுத்துப் பார்த்தேன்.

'என்ன சுஜா, பேசாமல் நிக்கிறீங்க?' என்றேன்.

'ஒன்றுமில்லை..!' என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

'கதைக்க மாட்டீங்களா?' என்று கேட்ட என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

'எனக்குக் கதைக்க விருப்மில்லையக்கா' என்று சலித்துக் கொண்டாள்.

'என்னோடயா?' என்றேன்.

'இல்லையக்கா, யார்கூடவும்' என்றாள்.

'அதுதான் ஏன் என்று கேட்கிறேன்?'

'நான் என்ன சொன்னாலும் யாரும் கேட்கப் போறதில்லை, எங்க அம்மாவே என்னைத் திட்றா, ஏசுறா, மனசில இருக்கிறதை நான் யாரிட்ட போய்ச்சொல்றது..!' என்றவள் விம்மினாள்.

'பரவாயில்லை, நான் கேட்கிறேன் சொல்லு' என்று அவளது கையைப்பற்றி ஆசுவாசப் படுத்தினேன்.

'சாப்பாட்டுக்கடை குசினியிலைதான் மாமி வேலைசெய்யிறா, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாமி வேலைக்கு போயிடுவா, மாமா மதியம் சாப்பிட வருவார், நான்தான் அவருக்கு சாப்பாடு போட்டுக் கொடுப்பன், ஒரு நாள் குடிச்சிட்டு வந்தார், சாப்பிடேக்கை என்னைய ஒரு மாதிரிப் பார்த்தார், அப்புறம் சாப்பிட்ட கோப்பையை நான் எடுக்கப்போக என்னை இழுத்துக் கட்டிப்புடிச்சு.. கொஞ்சப் பார்த்தார்' அவள் மேலே சொல்ல முடியாமல் விம்மினாள்.

அவள் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாகவும், நம்பமுடியாமலும் இருந்தது. ஆனாலும் மனசில இருக்கிறதைக் கொட்டட்டும் என்று நான் பேசாமல் இருந்தேன்.

'நான் அவரைப் பிடிச்சுத் தள்ளீட்டு வெளியே ஓடி வந்திட்டன். அதுக்கு அப்புறம் அவர் தனிய இருந்தால் குடிசைக்க போகவே பயமாயிருக்கக்கா'

'இதைப்பற்றி நீ மாமீட்ட சொன்னியா?'

'மாமீட்டயா..? எப்படியக்கா சொல்றது, மாமா சரியில்லை என்று சொன்னா நம்புவாங்களா? என்னைக் கட்டிவெச்சு அடிக்கமாட்டாங்க..?'

அவள் சொல்வதும் சரிதான், எப்படியும் ஒருவரும் நம்பமாட்டார்கள். அவளைத்தான் ஏசுவார்கள்.

'போனகிழமை நான் படிக்கணும் என்று சொல்லிச் சுஜியைத்தான் சாப்பாடு போட்டுக் குடுக்கச் சொன்னேன். அவள்தான் சாப்பாடு போட்டுக் கொடுத்தாள்.'

இந்த நேரம் பார்த்து சுஜி மாங்காயும், உப்புத்தூளும் கொண்டு அங்கே வந்தாள். பெரியக்கா சொன்னது அவளுக்கும் கேட்டிருக்க வேண்டும்.

'நான் இனிமேல் சாப்பாடு போடப் போகமாட்டன், மாமா குடிச்சிட்டு வந்திருக்கிறார் போல, வெறியில என்னைப் பிடிச்சிழுத்து 'என்ர மருமகளே' எண்டு சொல்லிக் கொஞ்சினாரக்கா, அம்மாடி வாய் நாத்தம் தாங்கமுடியலை, எனக்கு வாந்தி வர்றமாதிரி இருந்திச்சு.' என்றாள்.

சுஜி சொன்னதைக் கேட்டதும் ஒரு கணம் ஆடிப்போனேன். வேலியே பயிரை மேயுமா? இப்பதான் பெரியக்கா முறையிட்டாள், அதற்குள் சின்னக்காவுமா?



சுஜி அந்த விடயத்தைப் பெரிதாக எடுத்ததாகத் தெரியவில்லை.

அவருடைய தப்பான தொடுகையை அவளால் புரிந்து கொள்ள முடியாத வயதாயிருக்கலாம், மாமன் பாசத்தோடு அணைப்பதாக நினைத்திருக்கலாம், இத்தனைக்கும் மாமனுடைய வாய் நாற்றத்தைத்தான் அவள் கவனித்திருக்கிறாள்.

பெரியக்காவின் மௌனத்தின் காரணம் என்னவென்று எனக்குச் சட்டென்று புரிஞ்சு போச்சு. எல்லாமே எல்லை மீறிப் போவதைப் பெரியக்கா உணர்ந்திருக்க வேண்டும். அவள் கேட்டது போல, இதை யாரிட்ட போய்ச்சொல்ல?

'சுஜா, உங்க ஊருக்குப் போகேக்க பயப்படாமல் அம்மாட்டை இதைச் சொல்லு' என்றேன்.

'மாமாவை குறை சொன்னால் அம்மா தோலை உரிச்சுப் போடுவா' என்றாள்.

'உண்மைதான் யாருமே நம்ப மாட்டார்கள். அந்தத் துணிவுதான் இப்படியானவர்களைத் தொடர்ந்தும் தப்புச் செய்ய வைக்கின்றது. நான்கூட முதல்ல நம்பலை, சுஜியும் சொன்னதற்கு அப்புறம்தான் நம்பினேன்.'

நான் அவளுக்கு ஏதாவது வழி சொல்வேன் என்று சுஜா எதிர்பார்த்து நிற்பது புரிந்தது.

'சுஜா, உனக்கு இதெல்லாம் புரியக்கூடிய வயசு, ஆனால் சுஜியைப்பற்றி யோசித்துப் பார்த்தியா, ஏதாவது தப்பாய் நடந்தால் உன்னோட தங்கச்சியின்ர வாழ்க்கையே போச்சு, புரியுதா?'

சுஜா யோசித்தபடியே நின்று என்னைப் பார்த்தாள்.

'என்னை என்ன செய்யச் சொல்றீங்கக்கா?'

'பயப்படாமல் அம்மாகிட்ட சொல்லு, முதல்ல கத்திச் சத்தம் போட்டாலும் அம்மா புரிசுஞ்சுக்குவா, வேறவழியில்லை' என்றேன்.

'பயமாயிருக்கக்கா, இப்படி எல்லாம் நடந்தது என்று சொன்னா அம்மா நம்புவாவா?'

'ஊருக்குப் போகும்வரையும் சமாளித்துக் கொள், எதையுமே காட்டிக் கொள்ளாதை. பயப்படாமல் அம்மாட்ட சொல்லு, நீங்க இரண்டு பேரும் சொன்னா அவா நம்புவா' என்று சொல்லிவிட்டு நான் புறப்பட்டேன்.


அவர்கள் சொன்னதெல்லாம் மனசை அரித்துக் கொண்டே இருந்தது.

விடுமுறை முடிந்து பாடசாலை ஆரம்பமாகி இருந்தது. அந்த விடுமுறைக்குத் தாயிடம் சென்றவர்கள் ஏனோ திரும்பி வரவில்லை. என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒருவேளை தாயிடம் நடந்ததைச் சொல்லியிருக்கலாம். அவர்களுடைய படிப்பை நான் குழப்பிவிட்டேனோ என்று மனச்சாட்சி எனக்குள் உறுத்திக் கொண்டே இருந்தது. ஆனாலும் எல்லாம் அவர்களுடைய நன்மைக்கே என்று என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்.

# காலமே பதில் சொல்லு.....

கவிதை



நயினை அரா

காலமே பதில் சொல்லு.....
மண்திட்டி அடுக்கடுக்கே
அயராது வாழ்ந்தவர்கள்
மலைச்சாரல் குடில்களினில்
கட்டுண்டு போனவர்கள்
உச்சி மலைவெளியில்
உயிர் ஒடித்து வாழ்ந்தவர்கள்
பிச்சைத் தினக்கூலி கேட்டழுது
நொந்தவர்கள்
அச்சத்தில் ஆண்டுபல அவலமாய்
தம்வாழ்வை
எச்சில் இலைக்காக எப்பொழுதும்
தொலைத்ததில்லை......
கொம்பனிகள் களித்திருக்க
கோடிபணம் கவர்ந்திழுக்க
தம்கதிரை ஆயுள் பலம் என்றே
தவங்கிடந்து
தம்பட்டம் அடித்த தம் தலைமைகளை
நம்பியெல்லா வாழ்ந்த இனம்
நடுத்தெருவில் நிற்கிறது......
திட்டங்கள் பலவந்தும்
தினமொருக்கால் கதையளந்தும்
நான்குதடி சுற்றிமட்சுவரு
லயத்தினிலே நான்கைந்து
தசாப்தங்கள் வாழ்ந்தோரே
வாசல்வர உனக்கு கும்பிட்டு
வாக்களித்தார்......
அவர் வானோக்கி வரும் சாவை
நீ நோக்க நேரமில்லை
ஊர் உறங்கும் போதல்லா
உரத்துமழை கொட்டியது.....
வங்கக்கடலுக்குள் வந்தபேர்
அழுத்தத்தால்
வாரிசுழன்றடித்த திட்வா புயலாலே
நாட்டின் எத்திசையும் நீர்மூழ்கிக்
போச்சிங்கு
தொட்டில்குழந்தைகளும்
அணைத்திருந்த மழலைகளும்
கட்டடங்கா வெள்ளத்தால்
கதைமுடிஞ்சு போச்சிங்கு.....
விண்ணிடிந்த போலங்கு
பெரும்பாறை கல்லுறுண்டு
மலைசரிய
மண்மீது இருந்த மிச்ச உயிர்களினை
மண்மூடிக் கொன்றதுவே....
முற்பிறப்பில் ஏது வினை
முழுவதுமே சுமக்கவென
இப்பிறப்பில் இடித்துரைக்க
இதுவாமோ விதி என்போம்.....
அத்தனையும் ஓர்பொழுது
அடித்தொதுக்கி சென்றபுயல்
இத்துணை துயரமதை
இவர்களுக்கா தரவேணும்.....
இன்னும்
சொத்தும் சுகத்தோடு
வாழ்ந்த குடி நிலத்தினையும்
சத்தம் சததியின்றி
சரித்தொதுக்கி போனதிங்கு...
ஏட்டிக்குபோட்டியென
புணர்வு வாழ்வு வந்தாலும்
மீட்புபடை வந்து நேயக்கரம்,
தந்தாலும்
கட்டுக் கட்டாக கயானா
நிறைந்தாலும்
காலமே நீ சொல்லு
கண்டிப்பாய் மீண்டுமோர்
பேரழிவு இம் மண்மீது
தாக்காது கருத்தாய் களம் தந்து
தற்காப்பு இடமொதுக்கி
நிலைபேறாய் வாழவிடு......

**- நயினை அரா -**



# ஹைக்கூ முற்றம் நிகழ்ச்சி

**பத்தி**

*– முருகேசன் –*

**"காட்சியழகும் சொற்செறிவுமே ஹைக்கூவின் சிறப்பு" 'ஹைக்கூ முற்றம்'** நிகழ்வில் கவிஞர்கள் பகிர்வு

சென்னை. டிசம்பர்.21. 'ஹைக்கூ முற்றம்' அமைப்பின் மாதாந்திர இலக்கிய நிகழ்வு, கோயம்பேடு எதிரேயுள்ள விக்டோரியா கார்டன் தரைத்தள அரங்கில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு கவிஞர் உ. முத்துக்குமாரசாமி தலைமையேற்றார். கவிஞர் கோசின்ரா அறிமுகம் செய்து உரையாற்றினார்.

**'ஹைக்கூவும் நானும்…'** எனும் தலைப்பில் கவிஞர் கா.பாபுசசிதரன் உரையாற்றுகையில், "ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ இன்று உலகின் திசையெங்கும் பரவியிருக்கிறது. 2015-ஆம் ஆண்டில் எனது அலுவலகப் பணி நிமித்தமாக நான் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, ஜப்பானியர்கள் ஹைக்கூ எனும் கவிதை வடிவம் மீது எவ்வளவு ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியந்து போனேன். 1984-இல் கவிஞர் அறிவுமதி எழுதிய **'புல்லின் நுனியில் பனித்துளி'** எனும் ஹைக்கூ கவிதை நூலைப் படித்த பின்னரே எனக்கும் ஹைக்கூ எழுதும் ஆர்வம் பிறந்தது. இன்றைக்கு தமிழில் ஹைக்கூ புரிந்தும், புரியாமலும் பலரும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். **காட்சியழகோடும் மொழிச் செறிவோடும் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளே சிறப்பான கவிதைகளாகப் பேசப்படும்**. காலங்கடந்தும் பேசப்படும். ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய புரிதலுக்கும் தெளிவுக்கும் இப்படியான சந்திப்புகளும் பகிர்வுகளுமே உதவி புரியும்" என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, தமிழ்க் கவிதையின் முன்னோடியும் 1985-ஆம் ஆண்டிலேயே 'சூரியப் பிறைகள்" எனும் ஹைக்கூ நூலினைப் படைத்த மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பங்கேற்ற கவிஞர்கள் பலரும் ஹைக்கூ கவிதைகளை வாசித்தனர். சிறந்த ஹைக்கூ கவிதைக்குப் புத்தகப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வை கவிஞர் மு.முருகேஷ் ஒருங்கிணைக்க, கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

நிகழ்வில், கவிஞர்கள் சக்திமான் அசோகன், ஞால.ரவிச்சந்திரன், புதுகை ஆதிரா, அன்புத்தோழி ஜெயஸ்ரீ, பாளை கோ.மாணிக்கம், அனுராதா செளரிராஜன், நயினார், பா.மகாலெட்சுமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

படக்குறிப்பு: சென்னையில் நடைபெற்ற **'ஹைக்கூ முற்றம்'** நிகழ்வில் சிறப்பு

அழைப்பாளர்களாகப் பங்கேற்ற கவிஞர்கள் கா.பாபுசசிதரன், உ.முத்துக்குமாரசாமி

ஆகியோருக்குப் புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன. அருகில், கவிஞர்கள் ஆழ்வார்குறிச்சி

ப.சொக்கலிங்கம், கோசின்ரா, மு.முருகேஷ் ,அகவலன் ஆகியோர் உள்ளனர்.

(இந்த நிகழ்வு மாதம்தோறும் ஒரு திகதியில் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது)



# கொலை செய்யும் காதல்



– காஞ்சி கிருபா –

உன் காதலில் கனிவில்லை

கருணைத்ததும்பி இருந்திருந்தால்

கத்தி எடுத்திருக்க மாட்டாய்

உன் காதலில்

உண்மையில்லை

இருந்திருந்தால்

மெய்யாக தொலைத்திருக்க மாட்டாய்

உன் காதலில்

மென்மையில்லை! இருந்திருந்தால்

வலிந்து காதல் செய்ய

வற்புறுத்தியிருக்க மாட்டாய்

உன் காதலில்

தாய்மை இல்லை!

இருந்திருந்தால்

கட்டிப்பிடித்து இருப்பாய்

வெட்டி சாய்த்திருக்கமாட்டாய்!

உன் காதலில்

நேர்மை இல்லை

இருந்திருந்தால்

வலைவீசி தோற்றுப் போன நீ

கொலை செய்து வீசி இருக்க மாட்டாய்!!

என்னை சிதைத்தவனே

சிறையில் எண்ணிப்பார்

கம்பிகளோடு

உன் காதலும் என்னவென்று....

– காஞ்சி கிருபா –

# அன்பு



ரா. பிரேம் சுரேஷ்

*வேடங்களின் வேடந்தாங்கலான*

*இன்றைய உலகில் அன்பு*

*அகதியாய்*

*அன்பு என்பது தேடப்படும்*

*தேவைகளாய் இன்று*

*அலைபேசியின் அறிவியலில்*

*அன்பு எண்களின் அடையாளங்களாய்*

*அன்புக்குரியவரின் முகங்கள்*

*பத்து இலக்க எண்களின் குறியீடாய்*

*உறவுகளின் அடையாளம் ஏதொவொரு*

*கடவுச்சொல்லின் ஞாபகங்களாய்*

*நாகரீக உலகில் அன்பின்*

*முகவரிகள் தொலைந்த கிழிசல்களாய்*

*அன்புக்கு அடிமை என்ற*

*சொற்கள் ஊமையின் மொழிகளாய்*

*அன்பு இன்று தற்கொலை செய்து*

*கொண்ட அநாதை பிணங்களாய்*

# மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்


**நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு**

**தமிழ், மொழியியல் முதுகலைமாணி**




**பொ**துவாக ஒரு மொழியைப் படிக்கக் தெரிந்தவர்கள் எழுதத் தெரிந்தவர்கள் எல்லோரும் கடிதம் எழுதுவார்கள். தனக்கு பலர் கடிதம் எழுதவேண்டும் என விரும்புபவர்கள் போல் தன் கடிதத்தைப் பலரும் படிக்க வேண்டும் என விரும்புபவர்கள் இருக்கிறார்கள்.

கடிதம் என்பது சாதாரண எழுத்து என்று பார்க்காமல் உள்ளத்தின் வெளிப்பாடான அன்பு, கருணை, பாசம், கோபம் என எல்லாவற்றையும் வெளிப்படுத்தும் ஓர் நிலை. பல குடும்பங்களில் கடிதம் தலைமுறை தலைமுறையாக பொக்கிசமாக வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் ஆடலரசி மாதவி கோவலனுக்கு இரண்டு இடங்களில் கடிதம் அனுப்பியுள்ளாள். இரண்டு கடிதங்களும் இருவேறுபட்ட உட்பொருளைக் காட்டி, பாத்திரப் பண்பை தெளிவாக விளக்கி நிற்கிறது.

தமிழில் முதன்முதலில் மடல், ஓலை, அஞ்சல் பற்றி சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் குறிப்பிடப்படுகிறது. **“தமிழில் முதல் கடிதம் எழுதிய பெண் மாதவி”** இந்திர விழாவின் போது கானல் வரி பாடி மகிழ்ந்திருந்து கொண்டிருந்த மாதவி மீது கோவலன் ஐயமுற்று கோபங் கொண்டு மாதவியை விட்டுப் பிரிந்து சென்றான்.

இளவேனிற் காலம் மாதவியால் கோவலனை பிரிந்திருக்க முடியவில்லை. கோவலனுக்கு மடல் அனுப்ப நினைத்தாள் மாதவி தாழையின் வெள்ளிய மடலில் பல மணம் கொண்ட பூக்களை சுற்றிவரப் பொதித்து செம்பஞ்சுக் குழம்பை மையாகவும் பித்திகை மொட்டினை எழுத்தாணியாகவும் கொண்டு திருமுகம் தீட்டினாள். **“உலகத்து உயிர்களை துணையோடு சேர்க்கும் இளவேனிற் காலம் வந்து விட்டது. மாலையில் தோன்றிய சந்திரனும் கோவலனின் பிரிவுத் துயரை மிகுவிக்கிறான் மலரம்புகளால் உயிரைக் கொல்லும் ஆட்சி தொடங்கிற்று அறிந்து கொள்க“** என தன் மனக்குமுறளை எழுதினாள். (வேனில் காதை 56-63)

அக்கடிதத்தினை தன் தோழியான வசந்தமாலையிடம் கொடுத்து அனுப்பினாள். கடிதத்தினை மாதவியிட மிருந்து பெற்றுக் கொண்ட வசந்தமாலை புகார் நகரின் கூலக்கடைத் தெருவிலிருந்த கோவலனிடம் கொடுத்தாள். ஆனால், அக்கணத்தே சினங்கொண்ட நெஞ்சில், மாதவி நிகழ்த்திய பல்வகைக் கூத்துக் களையும் நினைவிற் கொண்டு **“ஆடல் மகள் ஆதலின், அவளுக்கு அது பொருந்தும்”** எனக் கூறி மடலை வாங்க மறுத்துவிட்டான். கோவலனின் கடுஞ்சொல்லை வசந்தமாலை கூறக்கேட்ட மாதவி **“மாலை வராராயினும் காலை காண்குவம்”** எனக் கையறு செஞ்சோடு மலர்ப்படுக்கையின் மீது உள்ளம் பொருந்தாது கிடந்தாள்.

அறிவும், ஆடவும், பாடவும், அழகும் கொண்ட மாதவி இரண்டாவது கடிதத்தினை எழுதுகிறாள். இரண்டாவது கடிதத்தினை கோசிக முனிவனிடம் கொடுத்து அனுப்புகிறாள். கோசிக முனிவனும் நெடு-வழி நடந்து கோவலனைக் கண்டு மாதவியின் மனக்குமுறளைக் கூறி மாதவி கொடுத்து அனுப்பிய இரண்டாவது கடிதத்தினைக் கோவலனிடம் கொடுக்கிறார். கோசிகன் கொண்டு வந்த கடிதத்தில் மாதவியோடு வாழ்ந்த காலத்தில் அவள் பூசிய நெய் வாசம் கடிதத்தின் கூந்தல் முத்திரையில் கமழ்ந்ததால் கடிதத்தைக் கைவிடாது பற்றி கோவலன் படிக்கிறான். அதுதான் **“தமிழில் படிக்கப்பட்ட முதலாவது கடிதம்”**

"அடிகள் முன்னர் யான் வீழ்ந்தேன்,
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்.
குரவர்பணி அன்றியும், குலப்பிறப்பு ஆட்டியோடு,
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப்புரையோய் போற்றி."

(புறஞ்சேரியிறுத்த காதை 87-92)

அதாவது அடிகளின் திருவடிகளை வணங்குகிறேன். நான் எழுதியுள்ள கருத்தினை மனம் கொள்வீராக. பெற்றவர்களுக்கு பணிவிடை செய்யாது, அவர்களின் கட்டளையின்றி, உயர் குலக் கொடியாகிய கண்ணகி யோடு இரவில் நகரை விட்டுப் பிரிந்ததற்கு யான் செய்த பிழை யாதென எண்ணி என் மனம் வருந்துகிறது. எனது துன்பத்தைப் போக்குவீராக. பொய்யற்ற அறிவுடைய பெரியோய் உமைப்போற்றுகிறேன்." என மாதவி தனது இரண்டாவது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள். பற்றற்ற நிலையில் மாதவி எழுதிய கடிதத்தினை படித்துணர்ந்த கோவலன் மாதவி குற்றமற்றவள் இது என் குற்றமே எனக் கூறியதோடு தன் பெற்றோர்களிடம் அந்தக் கடிதத்தினை அனுப்பி வைத்தான்.

வசந்தமாலை கொண்டு வந்த முதல் கடிதத்தில் மாதவியின் முருகியல் உணர்வும் காதல் கிளர்ச்சியும் நிறைந்து காதலி காதலனுக்கு அனுப்பும் வகையில் அழகுற அமைந்திருந்தது. இரண்டாவது கடிதம் முற்றாக தெளிவு பெற்ற மாதவியின் மனநிலையைக் காட்டுகிறது. முதல் கடிதத்தில் காணப்பட்ட அகச்சார்பு எண்ணங்கள் எதுவும் இரண்டாவது கடிதத்தில் காணவில்லை. மாதவியின் மன மாற்றம், ஒவ்வொரு சொல் லிலும் பிரதிபலித்தன. இரண்டாவது கடிதம் ஒரு தந்தைக்கோ, தமையனுக்கோ அல்லது ஆசிரிய னுக்கோ எழுதும் கடிதம் போல சொல்லும், பொரு ளும் அமைந்திருந்தது என்று கூறுவார் மு. வரதரா ஜன்.

தன் காதலனாகிய கோவலனை முதன் முதலாக **"அடிகள்"** எனும் சொல்லால் விழித்து, இன்பம் பொதிந்த வாழ்க்கை நிலையினின்று, மாதவி நிலை யாமையை நோக்கி எண்ண வைத்ததைக் காட்டும் அதே நேரம் கோவலனோடு கலை வாழ்க்கையும் அவனுக்குப் பின்னர் அற வாழ்க்கையும் வாழ்ந்த வளாகிய மாதவி எப்போதும் உயர்ந்து நிற்கிறாள் என்பது மாதவியின் தெளிவான கருத்துகளை தாங்கிய இரண்டாவது கடிதம் எமக்கு சான்று பகிர்ந்து நிற்கிறது.



*பாலம்மாள் பொன்னுசாமி*

# நீதி பேசிய சிலம்பு

*நீதி பேசிய சிலம்பு வென்றது*
*போராட்டக் களத்தில்*
*கண்ணகியின் கண்ணீர்*
*ஓங்கி உரைத்தது சபையில்*
*எழுச்சியோடு*
*யானோ கள்வன் மன்னன் தடுமாறினான்*
*விளைவு நிலத்தில் சாய்ந்தான் உயிரற்று*
*உடனே இணையாளும் சாய்ந்து விட்டாள்*
*குற்ற உணர்வில் குலமே வீழ்ந்திட*
*கண்ணகியால் பற்றி எரிந்தது மாமதுரையே*

# ஏவுகணை நாயகன்..*

– சாந்தி குமாரி –



ஏவுகணை நாயகனே!

எங்கள் அப்துல் கலாம் ஐயா..

வீசும் காற்றும் உங்கள் புகழைப் பேசும்..

இந்த நாடே

உங்களால் பெருமை கொள்கிறது..

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள்..

அது உங்கள் கடமையை பாழாக்கி விடும்..

கல்வியைப் பற்றி கனவு காணுங்கள்..

அது உங்கள்

வாழ்க்கையை அழகாக்கும் என்று கூறியவரே..

அக்னி சிறகு என்னும்

வரலாற்றை எழுதிய நாயகனே..

ஆகாயத்தில் பறந்த ஏவுகணை நாயகனே..

வானியல் பற்றிய புத்தகங்களில்

விண்வெளி மண்டலங்களை அறிய வைத்தாய்..

தன்னம்பிக்கையை

மாணவர்களின் மத்தியில் விதைத்தவர்..

யாராக இருந்தாலும்

வானத்து உச்சியை எட்ட முடியும் என்று கூறியவரே..

நீங்கள் இன்னும்

இந்த பூமியில் வாழ்ந்து இருக்கணும்..

நீங்கள் இருந்து இருந்தால்

வானியலில் பெரும் மாற்றம் ஏற்பட்டு இருக்கும்..

மீண்டும் ஒரு பிறவி இருந்தால்

இம்மண்ணில் பிறந்து வாருங்கள் ஐயா..

# திருக்குறள் அதிகாரம் 23



**டாக்டர் புட்பா கிறிட்டி**

## (உலக திருக்குறள் சமூதாய மையத்தில் புட்பா கிறிட்டி அவர்களால் வாசிக்கப்பட்ட கட்டுரை)

ஈதல் என்றால் என்ன?

மிகவும் வறுமை நிலையில் இருக்கும், ஒருவருக்கு, எம்மிடம் இருப்பதைக் கொடுத்து இன்புறுவது ஈகை. அதே போன்று பசியால் வாடும் ஒருவருக்கு உணவளித்து மகிழ்வது, எதுவும் இல்லாத ஏழைக்குத் தம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொடுத்து, அவரை வாழ்விப்பதும் ஈகைச் செயல் தான்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"**

என புகழ் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார். அதாவது ஒருவன் புகழுடன் வாழ்வதற்கு, ஈகை செய்யும் அறமும் முக்கியம் எனக் காட்டியுள்ளார்.

ஈத்துவக்கும் குணத்தினால் கடையேழு வள்ளல்களும் புகழ் பெற்றனர்.

1. **பேகன் மயிலுக்குப் போர்வை தந்தான்.**
2. **பாரி முல்லைக் கொடிக்குத் தன் தேரைத் தந்தான்**
3. **மலையமான் திருமுடிக்காரி தன் குதிரைகளையும் செல்வங்களையும் வாரி வழங்கினான்.**
4. **நள்ளி தன்னை அண்டி வந்தவர்க்கு தன்னை யாரென்று அடையாளம் காட்டாமல் வாரி வழங்கினான்**
5. **விற்போரில் வல்லவனான ஓரி, தன் நாட்டையே மலைக் கவிஞர்களுக்குத் தந்தான்**
6. **ஆய் என்னும் வள்ளல் நாகம் வழங்கிய அரிய ஆடையை சிவபெருமானுக்குத் தந்தான்.**
7. **அதியமான், நீண்ட நாள் வாழ வைக்கும் நெல்லிக்கனியைத் தானுண்ணாமல், ஔவைக்குத் தந்தான்.**

ஈகையின் இலக்கணம், ஈகையின் முறை, சிறப்பு, பயன், மற்றும் ஈயாமையின் குற்றத்தை இந்த அதிகாரம் விளக்குகின்றது

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றேல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்த"** (குறள். 221)

ஏழைகளுக்குத் தருவது தான் ஈகை இது தவிர்த்துப் பிறர்க்குச் செய்வது பலனை எதிர்பார்த்துச் செய்வது எனப் பொருள் சொல்கிறது இந்தக் குறள். நாம் நம் வீடுகளில் விருந்து கொடுப்போம். விருந்தினர், வருவார் கள், உண்பார்கள். நன்றி சொல்லிப் போய் விடுவார்கள். இரண்டு வாரம் கழித்து, அவர்கள் வீட்டிலிருந்து எமக்கு அழைப்பு வரும். எங்கள் வீட்டுக்கு வாருங்கள். உண்டு மகிழலாம் என்பார்கள். நாமும் போய் இருந்து, மகிழ்ந்து கொண்டாடி உண்டு மகிழ்வோம். பிள்ளைகள் எல்லோரும் இருந்து களித்து மகிழ்வர். நேரம் வர நாம் வீட்டுக்கு வந்து விடுவோம். இங்கே நமக்கு ஒரு மனத்திருப்தி, நாம் ஒரு விருந்துக் குடும்பத்தினர்க்கு உணவு கொடுத்தோம் அதே போன்று அந்தக் குடும்பம் எம்மை அழைத்து, எமக்கு உணவு தந்தார்கள். இது ஈகை அல்ல என்று கூறுகிறார் வள்ளுவர்.

**"எத்துணை யாயினும் ஈத்தல் நன்றுஎன**
**மறுமை நோக்கிற்றோ அன்றே பிறர்**
**வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே"** (புறம் 141)

என்று வையாவிக் கோப்பெரும் பேகனின் கைவண்மையைப் புகழ்ந்துரைக்கின்றார் பரணர். இப்பாடல் நமக்கு இருவகை ஈகையைச் சுட்டிக்காட்டுகின்றது. ஒன்று பிறர் வறுமை நோக்கிய ஈகை. மற்றது தம் மறுமை நோக்கிய ஈகை.

என் சின்ன வயதில் இறந்த என் பேரன் பேத்தி போன்றவர்களுக்கு படையல் செய்தால், அதை முக்கியமாக வறியவர்கட்கு கொடுப்போம். ஏழை வயதான இரக்கும் மக்களை, அழைத்து வந்து, அவர்களுக்கு குளிக்க நீர் கொடுத்து, உடுபுடவை கொடுத்து, தேனீர் கொடுத்து, பின்னர், அவர்களுக்குச் சூடாக உணவும் தந்து, பொதியாக கட்டியும் கொடுத்துவிடுவோம். அவர்கள், குளித்துப் புத்தாடை அணிந்ததுமே, முகத்தில் பொலிவு, உடலும் அழகுறும். இன்பம் ததும்பும், உண்ணும் அழகை அருகில் இருந்து பார்க்க பெருமிதமாக இருக்கும். கொஞ்சம் களைப்பாறிய பின்னர், பொதி கட்டி, அவர்கள் கையில் கொடுத்ததும், பெரும் பணக்காரர் போன்ற தோறணையுடன் நன்றி கூறி நடந்து செல்லும் அழகைக் கண்டால், நாம் பிறந்த பயனை அடைந்து விட்ட பெருமிதம் நமக்குள் பிறக்கும்.

**"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**

**இல்லெனினும் ஈதலே நன்று."** (குறள். 222)

நல்லது என்றாலும், பிறரிடமிருந்து பொருளைப் பெற்றுக் கொள்வது தீது. கொடை கொடுப்பதனால், மேலுலகம் கிட்டாது என்றாலும், கொடுத்து மகிழ்வது சிறப்பு என்பது இதன் கருத்து.

**"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்**

**உள்ளஇடம் போல் பெரிதுவந்து - மெல்லக்**

**கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு**

**அடையலாம் ஆண்டைக் கதவு "** - 91 எனக் கூறுகிறது நாலடியார்

பொருள் இல்லாத போதும், தம்மால் இயன்றளவு பொருள் உள்ளது போல், மகிழ்ந்து இயல்பாகக் கொடுக்கும் மக்களுக்கு உலகக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். இது போலவே அன்னை தெரேசா, பிறருக்காகச் சென்று கையேந்திய போது பலரும் அவர்களுக்கு அள்ளிக் கொடுத்தனர். இன்று பில்கேட்ஸ் தனக்குக் கிட்டிய பெருஞ்செல்வத்தை, பல தொண்டு நிறுவனங்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்குகிறார். அவரின் குழந்தைகட்கு என சேர்த்து வைக்காது, பிறர் வாழ் உதவும் மனப்பக்குவம் அவரை என்றும் வாழ்வைக்கும்.

இன்று நாம் காண்கிறோம், திருமண வீட்டுக் கொண்டாட்டங்களில், மற்றும் விழாக்களில், மக்கள் உணவை விரயம் செய்வார்கள். மிஞ்சிய உணவைக் கொட்டி விடுவார்கள்... ஆனால், அதனையும் ஒரு பணியாக சிலர் ஏற்று, அந்த மண்டபங்களில் சென்று, அவற்றைச் சேகரித்து, பசித்தவர்க்கு உணவு கொடுக்கும் பண்பு , மிகச் சிறந்த ஈகைப் பண்பு என்பேன்.

**"இலனெனும் எவ்வம் உரையாமை ஈதல்**

**குலனுடையான் கண்ணே யுள"** (குறள். 223)

ஏழை என ஒருவன் தன்னைக் காட்டிக்கொள்ளாமல், பிறர்க்குக்கொடுக்கும் தன்மை உடையவன் நல்ல குடியிற் பிறந்த உயர்ந்த பண்பாளன். இதற்கு நான் இஸ்லாமிய சகோதரர்களை உதாரணமாகக் காண்கிறேன். இருப்பவன் தன்னை வருத்தி, நோன்பிருந்து இல்லாதாவனுக்குத் தருகிறான். அதுபோல், அவர்களின் நோன்பு, இல்லாதவனின் துயரையும் ஒருவன் அறிந்து கொள்ள ஏதுவாகிறது. வாடிய பயிர் கண்டு வாடிய வள்ளலார் ஏழையின் பசிக்காகவே அன்னசத்திரம் அமைத்தார்.

இதற்கு பைபிளிலும் ஒரு கதை உண்டு. ஓர் ஏழைப்பெண், தன்னிடமிருந்து இரண்டு செப்புக்காசுகளைக் காணிக்கை தருகிறாள். அதனைக் கண்ட யேசு, அங்கிருந்த பணக்காரர்களிடம், உங்கள் எல்லாரையும் விட இவளே ஈகையில் சிறந்தவள். நீங்கள், உங்கள் 10ல் ஒரு பங்கைத் தான் காணிக்கை கொடுத்தீர்கள். அவளோ தன்னிடமிருந்ததை அப்படியே கொடுத்து விட்டாள். என்றார். உன்னிடம் இருப்பதை முழுமை யாகக்கொடுத்து, பிறர் மகிழ்வதில் இன்பம் காண்பது திருப்தி தரும்.

பௌத்த விகாரைகளில் கூட, வறிய மக்களுக்கென அன்ன சத்திரம் அமைத்து உணவளித்து மகிழ்கிறார்கள். நான் கடந்த 2018ம் ஆண்டு, மலேசியாவில் அகதியாகத் தங்கியிருந்த என் மாமாவின் மகனிடம் பேசி, அங்கு சென்று இறங்கினேன். அங்கிருந்த ஒரு பௌத்த விகாரைக்குச் சென்றேன். என் மாமாவின் மகன், மனைவி, போன்றோர், தொண்டர்களாக, விகாரையில் பணி செய்தனர். சுமார் 500 அகதிகளுக்கு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில், உணவு, சமைத்து தானம் வழங்கினார்கள். மனிதம் வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தேன்.

ஒரு இளைஞன், அனாதை விடுதியில் இருந்து படித்து, தன் பி.எஸ்.சி முடித்து, அந்த விடுதியை விட்டு வெளியே வருகிறான். அவனுக்கு தங்க இடம் இருக்கவில்லை. அன்று இரவை மரினாக் கடற்கரையில் கழிக்கிறான். தன் தலைக்கு, தனது பெட்டியை அணைவு வைத்துப் படுத்தவன், விடிந்த போது அவன்

பெட்டி தொலைந்து போயிருந்தது. அதில் அவனின் ஓரிரு உடுபுடவைகள், அவனது கல்விச் சான்றிதழ்கள் அனைத்தும் தொலைந்தன. தெருவில் பிச்சை எடுத்து தன் வயிற்றைக் கழுவுகிறான். பின்னர் பஸ்ஸில் செங்கல்பட்டு, வந்து அங்கும் பிச்சை எடுக்கிறான். கொஞ்சம் பணம் புரட்டியவன், ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கிறான். ஒரு பழைய சைக்கிளை வாங்குகிறான், தேனீர் தயாரித்து விற்கிறான். அதில் வந்த லாபத்தில், கொஞ்சம் பாத்திரங்கள் வாங்கி, அத்துடன் சமையல் சாமான்கள் வாங்கி, தானே சமைத்து, அங்குள்ள வறியவர்க்குக் கொடுத்து அமைதி காண்கிறான். இச் செய்தி ஊடங்கங்கள் மூலம் வெளிவர, பலர் அவனுக்கு உதவுகின்றனர். இன்று அவன் இதனை தொடர்ந்து செய்து வருகிறான். ஆக ஏழை, அவன், தன் ஏழ்மையை மறைத்து, பிறர் பணியுடன் ஈகையும் செய்து வாழ்கிறான்.

**"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**

**இன்முகங் காணும் அளவு"** (குறள். 224)

ஈதல் பண்புடையவர்க்கு தம்மை நாடி வரும் இரப்பவரின் மலர்ந்த முகம் காணும் வரை அவருக்காக இரங்குவது துன்பமாகவே தெரியும்.

**"இம்மி யரிசித் துணையலும் வைகலும்**

**நும்மின் இயைவ கொடுத்துண்மின் -உம்மைக்**

**கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து**

**அடாஅ அடுப்பி னவர்."** நாலடியாரும் ஒரு பாடலில் கூறுகின்றது.

ஒரு சிறிய அரிசியின் அளவாவது நாள்தோறும் உங்களால் இயன்ற அளவு பிறர்க்குக் கொடுத்துப் பின் உண்ணுங்கள். ஏனென்றால் ஆழமான கடல் சூழ்ந்த இவ்வுலகில், சமைத்தல் இல்லாத அடுப்பினையுடைய வறியவர்களை, முற்பிறப்பில் பிறருக்கு இவர்கள் ஒன்றும் தாராதவர்கள் என சான்றோர் உரைப்பர் என்கிறது நாலடியார்.

நான் பாடசாலை விடுமுறை காலங்களில் பரந்தனுக்கு என் ஆச்சி அப்பையாவிடம் வந்து விடுவேன். அப்போது அங்கு அறுவடை காலம் நடக்கும். கண்டி, அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து வேலையாட்கள் வந்து அருவி வெட்டுவார்கள். அவர்கள் அருவியை அள்ளிய மறுநாள், என் ஆச்சி, ஒரு பெட்டியையும் சாக்கையும், எடுத்துக் கொண்டு கிளம்புவார். எங்கே என்றால் கதிர் பொறுக்க என்பார். நானும் கூடச் செல்வேன். இந்த வேலையாட்கள், கதிர் அள்ளும்போது, சிந்திய கதிர்கள், அங்கொன்று இங்கொன்றாகக் கிடக்கும். அவற்றை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுப்போம். அதனை முதலில் பெட்டியில் போட்டு, பெட்டி நிறைந்ததும், சாக்கில் போட்டு, தூக்க முடியாது, இருவரும் தூக்கி வருவோம். சிலவேளைகளில், வேலையாட்கள், ஒன்றிரண்டு என நெல் உப்பட்டிகளை, அறுத்த கதிர்களைத் தவற விட்டிருப்பார்கள். இவ்வாறு சேர்த்த நெல்லை, என் ஆச்சி, தன் கையால் உருவி, அல்லது காலால், மிதித்து, எடுத்து, தூற்றி, அவித்து, காயவைத்து, புழுங்கல் அரிசியாக்கி, வைத்திருப்பார். வீடு தேடி வரும் வறியவர்க்கு, தாம் உண்ணும் உணவில் கொடுத்து, பின் அவர்கள் செல்லும் போது இந்த அரிசியில் கொத்துக் கணக்கில் அளந்து கொடுத்து அனுப்புவார்.

இப்படி ஏழை மக்களுக்காக உழைத்த அந்த அன்னையின் இறுதி நாட்களில், அவருக்கு இறைவன், அருளினான். அவர் கணவர் அருகில் இருத்தி, ஒரு குழந்தையைப் போல் குளிப்பாட்டி, உணவூட்டி, தலை வாரி, அன்புகாட்ட, நானும் அவருடன் கூட உதவினேன். என் கண்முன்னாலேயே அந்த தாய் தன் இறுதி மூர்ச்சை அடக்கினார். ஆக பிறர் இன்பம் கண்டு வாழ்ந்த என் ஆச்சிக்கு நல்ல மரணம் கிட்டியது அவர் செய்த அறம் என நான் நம்புகிறேன்.

**"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**

**மாற்றுவார் ஆற்றலின் பின்"** (குறள். 225)

பசித்திருப்பவன், தான் நோன்பு இருப்பதை விட, பசித்த ஒருவனுக்கு உணவு அளித்து அவன் பசியை மாற்றுவதே சிறந்ததாகும்.

என் மகள் தன் பல்கலைக் கழக நாட்களில், பகுதி நேர வேலை செய்து, தன் பாடசாலைக் கடன்களைக் கட்டிப் படித்தாள். அவள் பல மைல் தூரம் சென்று ஒரு கோப்பிக் கடையில் வேலை செய்தாள். **'Star Buck'** என்னும் அக்கடை வடஅமெரிக்க முழுவதும் பிரபல்யமானது. இரவு வேலை முடிக்கும் போது, மீதமுள்ள உணவில், ஒரு பார்சலை எடுத்து வரலாம். அப்படி எடுத்து வந்து, இரவு வீடு வந்ததும் உண்ணலாம். மீதியை மறுநாள் உண்ணலாம் என எடுத்து வருவார். அவள் வரும் வழியில், அந்த இருளில், நான்கு விளக்குச் சந்தியில் நின்று இரந்து நிற்கும் ஒருவர், கைநீட்டி, தன் வயிற்றைக்

காட்டி உணவு கேட்டிருக்கவே, இவர், தன்னை, தன் நிலையை, தன் பசியை உணராது, வண்டியின் யன்னல் கண்ணாடியைத் திறந்து, அந்த 25.00- டொலர்கள் மதிப்புள்ள உணவை அவருக்குக் கொடுத்து விட்டு, என்னிடம் வந்து சொல்வார்.

இது எனக்குப் பயத்தைத் தர, நான் திட்டுவேன். ஏன் யன்னல் திறந்து உணவு கொடுத்தீர்கள்? அவன் கெட்டவனாக இருந்து, துவக்கைக் காட்டி, உங்களை உங்கள் வாகனத்தை எடுத்துக்கொண்டு, கடத்திக் கொன்றுவிட்டால், நாங்கள் என்ன செய்வது என்று? ஆனால், இளங்கன்று பயமறியாது என்பதற்கொப்ப அவர் சொன்னார்

"அந்த இருட்டில் நின்று பசி என்று தானே கேட்கிறார். அவருக்கு பசிக்கு உணவு கொடுப்பதைத் தான் நான் நினைத்தேன். எனது உயிரைப் பற்றி அப்போது எனக்கு நினைவு வரவில்லை" என்றாள்

நத்தார் புதுவருட காலங்களில், பரிசுகள் வாங்கும் போது, பெரியவர்களின் கையுறை, தொப்பி, கழுத்துக்கு சுற்றும் துணி என்பன வாங்கி, தன் வாகனத்தில் வைத்திருந்து, வீதியில் நின்று இரப்போர்க்குத் தருவாள். இதுவும் மனிதத்தின் மீது கொண்ட அக்கறை தான்.

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**

**பெற்றான் பொருள்வைப் பழி"** (குறள். 226)

ஏழையின் கடும்பசியைப் போக்க வேண்டும். அதுதான் பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்கென பிற்காலத்துக்கெனச் சேர்த்து வைக்கும் இடமாகும்.

**"பெற்ற நாள் பெற்ற நாள் பெற்றதனுள் ஆற்றுவதொன்று.**

**இற்றை நாள் ஈத்துண்டு இனிது ஒழுகல்-சுற்றும்**

**இதனில் இலேசுடை காணோம் அதனை**

**முதல் நின்று இடைதெரியும் கால்."** அறநெறிச்சாரம் நூல் கூறுவது.

அதாவது பொருட்செல்வத்தைப் பெற்ற போதும், இன்றே இல்லை என்று வந்தவர்க்குக் கொடுத்து வாழ்வதில்தான் இனிய இல்லற மகிழ்ச்சி உள்ளது எங்கிறது பாடல். இன்னமும் இதுவே மறுமையில் சொத்து என்று சொல்கிறது

**"அத்தமும் வாழ்வும், அகத்துமட்டே விழிஅம்பு ஒழுக**

**மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு**

**கைத்தலம் மேல்வைத்து அழும்மைந்தரும் சுடுகாடுமட்டே**

**பற்றித் தொடரும் புண்ணிய பாவமுமே"** எனப் பட்டினத்தாரும் பாடினார்.

என் கணவருக்கு முதலில் 2015 ம் ஆண்டு டிசம்ப 7ம் நாள், முதல் இருதய சத்திரசிகிச்சை நடந்தது. அன்று மாலை என்னை, வைத்தியசாலை நிர்வாகம் அழைத்துச் சொன்னது. உன் கணவரின் சத்திரசிகிச்சை முடிந்தது என்று.

நானும் பிள்ளைகளும் சென்றோம். அவர் கண் விழிக்கவில்லை. சுமார் 15 மணி நேரம் காத்திருந்து விட்டு வீடு வந்தோம். மறுநாள் அவர் கண் விழித்திருந்தார். ஞாபக மறதி வந்திருந்தது. என்னை, குழந்தைகளை யாரென்று கேட்டார். கதறி அழுதோம். வைத்தியர்கள், தாதிகள் ஆறுதல் சொன்னார்கள். பின்னர், அவருக்கு நினைவு திரும்புவதற்கு பல பயிற்சிகள் கொடுத்தார்கள். மூன்று நாட்கள், முடிந்தன. என் குழந்தைகள் இருவருக்கும் பல்கலைக்கழக பரீட்சை காலம். அவர்களால் படிக்க முடியவில்லை. பரீட்சை எழுதப் போகவில்லை. தந்தையின் அருகிலிருந்து அழுது கொண்டு நின்றார்கள். அழுது வடிக்க வேண்டிய நான் என் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன். **"அப்பா. தமிழ் மக்கள் வாழவேண்டும் என நன்மை செய்பவர். அவருக்கு நிச்சயம் நினைவு வரும். கவலைப்படவேண்டாம்"** என்று.

என் கணவருக்கு ஒரு பழக்கம் உண்டு. யாராவது தமிழர்கள், வியாபாரம் தொடங்கினால், அவரை வளர்க்க வேண்டும் என்று அவர்களிடம் சென்று பொருட்கள் வாங்குவார். இது போல, வீதியில், பனிக்குளிரில், யாராவது வாகனம் பழுதாகி நின்றால், உடனே சென்று, தன்னிடமுள்ள பொருட்களைப் பயன்படுத்தி, அவர்கள் வாகனம் இயங்க உதவுவார்.

என்னை இங்குள்ள பல வானொலி நிலையங்களுக்கும் தானே அழைத்துச் சென்று நிகழ்ச்சிகள் தயாரிக்க, செய்தி வாசிக்கச் செய்தார். கனேடிய ஊடகங்களில் என்னை வருமானம் இல்லாது பணியாற்ற வைத்தவர். அப்படி நல்லுள்ளம் கொண்ட அவர், 5ம் நாள் தன் நினைவுக்கு வந்தார். என் மகள் அவர் அருகில்

இருந்து, இது பென்சில், இது பேனை, இது கத்தரி, இது தோடம்பழம் எனச்சொல்லிக் கொடுத்து, அவரது அறிவை மீட்டு வந்தாள். ஆக அவர் பிறர் வாழச் செய்த நன்மைகள் அவரை மீட்டு எமக்குத் தந்தது.

மீண்டும் 2018ல் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். காலை 5.00 மணிக்கு எழுந்து சமைத்து என் குழந்தைகட்கு வைத்து விட்டு, நான் எனக்கும் என் கணவருக்கும் வேறு வேறு உணவு கட்டி எடுத்துக்கொண்டு வேலைக்குச் சென்று, அங்கிருந்து, 2 பஸ், 2 இரயிலில் சென்று, அரை மைல் தூரம் நடந்து. வைத்தியசாலை சென்று இரவு 11 மணி வரை அவர் அருகில் இருந்து, அவரைப் படுக்க வைத்து விட்டு, இரவு 12.30 மணிக்கு வீடு வந்து குளித்து, உணவுண்டு, தூங்கி, மீண்டும் மறுநாள் அதே பணி செய்ய எனக்கு வல்லமை தந்த இறைவல்லமையும் என் கணவரின், என் குடும்பத்தின் ஈகைத் தனமும் தான்.

**“பாத்தூன் மரீஇ யவனைப் பசியென்னும்**

**தீப்பிணி தீண்டல் அரிது”** (குறள். 44)

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகிர்ந்து உண்ணும் கொடையாளனைப் பசி என்னும் கொடிய நோய் தீண்டாது. இந்தக் குறளுக்கு ஒப்ப இன்னொரு குறளைச் சுற்றந்தாழல் என்னும் அதிகாரத்தில் காணலாம்.

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**

**அன்னநீ ரார்க்கே உள”** (குறள். 527)

காக்கை தனக்குக் கிட்டிய உணவை மறைத்து வைக்காமல், அதனை தன் சுற்றத்தோடு சேர்ந்து உண்ணும். இப்படியே இது போன்ற குணம் கொண்டவரைச் எல்லாச் செல்வமும் சேரும் என 527வது குறளில் கூறுகின்றார் வள்ளுவவர்.

முன்பெல்லாம் எமது வீடுகளில் வீட்டிலே சோறு சமைக்கும் போது, என் ஆச்சி, ஒரு கைபிடி அரிசியை, எடுத்து ஒரு பானையில் போட்டு மூடி விடுவார்கள். இது பிடியரிசி எனச் சொல்வார்கள். இந்த அரிசியை எந்த நேரத்திலும் எடுக்க மாட்டார்கள். வீட்டுக்கு பொருள் வேண்டி வரும் ஏழைகட்கு, இதனை முடிச்சாக கட்டிக் கொடுத்து விடுவார்கள் என் ஆச்சி. இதையே என் தாயாரும் செய்வார்கள்.

**“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”** எங்கிறது மணிமேகலை

பசியோடு வந்தவர் யாராயினும். பேதம் பார்க்காது, யாரென ஆராயாது, பசி போக்குவதே ஜீவகாருண்யம் என்பது தருமசாலை நிறுவிய வடலூர் வள்ளலாரின் திருவாக்கு.

நான் இலங்கையில் இருந்த போது, எங்கள் வீட்டுக்கு ஒருவர் இரந்து வருவார். அவருக்கு கொஞ்சம் மூளையில் பேதமை நிலை கண்டிருந்தது. ஆக அவர் வரும்போது, வீதிகளில் நாய்கள் விரட்டும். அழுது கொண்டு கையில் தடியால் அவற்றை விரட்டியபடி வந்து பசிக்குது என்பார்.

என் தாயார், என் அண்ணாமாரிடம் சொல்லி, அவரைக் குளிப்பாட்டி, நல்ல ஆடை அணிவித்து, உண்ணக் கொடுப்பார். எங்களோடு இருக்கச் சொன்னால் மாட்டேன் என்பார். போகும்போதும் கூட அவருக்கு வேண்டும் உணவைப் பார்சல் கட்டி, என் அண்ணாவிடம் சொல்லி. அவரைச் சைக்கிளில் கொண்டு அவர் வழமை யாகப் படுத்துறங்கும் அந்த சந்தைக் கட்டிடத்தில் விட்டு வரச் சொல்வார். என் அம்மா, அந்த மனிதரை ஆஸ்துமா வந்து 19 வயதில் இறந்து போன தன் தம்பியாகக் காண்பதாகச் சொல்வார். ஒன்றில் இன்னொன்றைக் கண்டும் இரங்கும் மனம் அனைவர்க்கும் இருந்தால், மனிதம் வாழும். உலகம் செழிக்கும்.

**“ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**

**வைத்திழக்கும் வன்க ணவர்.”** (குறள். 228)

தாம் சேர்த்த செல்வத்தைக் காப்பாற்றிப் பிரருக்குத் கொடுக்காமல், சேமித்து, அதை இழந்துவிடும் கொடிய-வர்கள் கொடுத்து உண்ணும் அம்மகிழ்ச்சியை அறியமாட்டார்களா?

நம்மவர்கள் வீட்டில், அதிகம் சமைப்பார்கள். ஆனால் சாப்பிட முடியாத மிகுதியை, நாளை சாப்பிடலாம் என எடுத்துக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விடுவார்கள். சிலவேளை அந்த உணவை மறந்தும் விடுவார்கள். மறுநாள் வேறு உணவைக் கடையில் வாங்கி உண்பார்கள். இந்த உணவு, குளிர்சாதனப் பெட்டியில் இருந்து, கெட்டு விட, அதனை எடுத்து குப்பையில் கொட்டி விடுவார்கள்.

**(அடுத்த இதழில் தொடரும்)**

கவிதை

# எழுத்தறிவின் மேன்மை

*கவியமுது சு.பிரபாகரன்,*

எண்ணும் எழுத்தும் கண்ணென தகுமே

எழுத்தறிவே என்றும் உலகில் முதன்மையே!

புதுமைகள் மண்ணில் திறமாய் விளைந்திட

புலமையில் சிறந்து திறமையால் உயர்வோம்!

தனிப்பட்ட வளர்ச்சி சமூக வளர்ச்சிகளின்

தனிப்பெரும் ஆயுதமாய் கல்வியே உயர்வு!

செல்லும் இடமெல்லாம் சிறந்திடும் கல்வி

செழிப்பாய் வளத்தை நல்கிடும் அதுவே!

அடித்தட்டு மக்களின் அறியாமை களைந்து

ஆகாயமளவு உயர்ந்திட வழிகளை தந்திடுமதுவே!

கிராமங்கள், நகரங்கள் பாகுபாடு இல்லாமல்

கட்டாயமாக கல்வியை கற்றே உயர்வோம்!

ஏடுகள் எடுத்து எளிதாய்க் கற்போம்

எழுத்தறிவைக்கொண்டு ஏழ்மையைக்களைவோம்!

அகத்தின் இருளை அடியோடு களைய

அருள்தரும் படிப்பை ஆனந்தமாய் ஏற்போம்!

அறிவைத் தீட்டி அறியாமை அழித்து

அவனியில் அருட்பெரும் சுடராய் ஒளிர்வோம்!

## கவிதை



- துளசி -

*நெருங்கி வருவதற்கு ஏதுவாக எதுவும் இல்லை*
*என் கண்களில் இருந்து சில துளிகள் சிந்திதுகிறேன்*
*காற்றில் கரைந்து*
*உன் சுவாசத்தில் செருமானால்*
*என்னை நினைந்தொரு*
*பெருமூச்சுவிட்டு நகர்ந்துவிடு....*
*முதல் ஒருமிடறு தேநீருடனான நிசி மட்டும்...*



# *.....விதி.....*

– ந. இரவிச்சந்திரன் – பழனி

நான் எழுதிய கவிதையை
நீங்கள் படிப்பது.....
கடவுளின் அனுகிரகம் இன்றி
இங்கே எதுவும் நடப்பதில்லை

ஏதாவது நடந்தது என்றால்
அது உங்கள் பார்வையில்
நன்மையாகவும் படலாம்
தீமையாகவும் படலாம்

தீங்கு நடந்தால்
விதி என்போம்.
எது நடந்தாலும்
அதை பொறுத்துக்
கொள்ளுங்கள்..

அறியாமையால் நடக்கலாம்...
சிலது
அகம் பாவத்தால் நடக்கலாம்.

நற்காலியில் அமர்ந்து
யோசிப்பதாலோ...
மொட்டை மாடியில் இருந்து
நிலவை பார்ப்பதாலோ..
கவலைப்படுவதாலோ

மாற்றம் நிகழ போவதில்லை
நிகழ்வது நிகழ்ந்தே தீரும்
உங்களின் மன உறுதியை
சோதிக்கவே
நிகழ்ந்தாக எண்ணிக்
கொள்ளுங்கள்

களங்கமற்ற
நல்நோக்கம் கொண்ட
வார்த்தைகளே
சில நேரம்
தவறாக புரிந்து கொள்ளபடும் போது .
..அதை ...

விதி என்பதா
சதி..என்பதா
என ஆராயாமல்..
ஆண்டவன் மீது
பாரத்தை போட்டு
அடுத்த வேலையை பாருங்கள்..

நிகழ் காலத்தில்
வாழுங்கள் ..
விதி என்று எதுவுமில்லை
வீதிகள் வேண்டுமானல்
நிறைய உண்டு

வாழ்க்கையில் நேரிடும் அனுபவங்களை
அதன் விதத்திலேயே ஏற்றுக் கொள்ளுங்கள்..

நீங்களாகவே அதற்கு
_________என பெயர்வைக்காதீர்

தன்னம்பிக்கையோடு
எதிர்கொள்ளுங்கள்
வெற்றி உறுதியாகும்.
மாற்றம் தானே வரும்

எந்த செயலை நீ
எவ்வளவு திறமையாக செய்கிறாயோ
அதற்கு தகுந்தபடியே.
விளைவுகள் வரும்..

அரக்கனை மணந்த
மண்டோதரியும் அழுதாள்..
அவதார புருஷனை மணந்த
சீதையும் அழுதாள்

விதிக்கு கிடையாது விதி விலக்கு
நீ அதை விலக்கு
வீணாக அதற்க்கும்
____ எனும் பெயர் எதற்கு...?..

# நீதி வெல்லும்



## ஒரு பக்கச்சிறுகதை

முகில் தினகரன்

இன்று நீதிமன்றத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆங்காங்கே மீடியாக் கேமராக்கள் மினுக்கின. “இன்றுதான் தீர்ப்பு” என்கிற பதற்றம் எல்லோர் முகத்திலும் தெரிந்தது.

நாற்காலியில் தலை குனிந்து அமர்ந்திருந்தான் ரவி. அவன் ஒரு சாதாரண டிரைவர். அவன் மீது ஒரு குழந்தைக் கொலை வழக்கு.

அரசு வக்கீல் உரக்க சொன்னார், “கடைசியாக குழந்தையுடன் காணப்பட்டவர் இவரே.”

தொடர்ந்து சாட்சிகள் பேசினார்கள். ரவி குடும்பத்தாரின் ஓயாத அழுகுரல்கள்.

நீதிபதியின் மேஜையில் ஆவணங்கள். ஆதாரங்கள். ரவி அமைதியாய் அமர்ந்திருந்தான். கைகள் மட்டும் தான் லேசாய் நடுங்கிக் கொண்டிருந்தன.

நீதிபதி தீர்ப்பை அறிவித்தார். “சாட்சிகளின் அடிப்படையில், குற்றம் நிரூபிக்கப்பட்டதால் இவருக்கு ஆயுள் தண்டனை”

நீதிமன்றம் ஒரு நொடியில் சத்தமாயிற்று.

ரவி தலையை உயர்த்தினான். நீதிபதியை அர்த்தபுஷ்டியுடன் பார்த்து வணங்கினான். அவனை அழைத்துச் சென்றார்கள்.

அன்று இரவு. நீதிபதியின் வீட்டில் அமைதி இல்லை. அவரது மகன் வினோத் பதட்டமாக நடந்து கொண்டிருந்தான்.

“அப்பா…” என்றான் குரல் உடைந்து.

“என்ன வினோத்...”

“வந்து... உண்மையிலேயே அந்தக் குழந்தையை கொன்னது நான்தான்!... நான் செய்த குற்றத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ள அந்த டிரைவரை கன்வின்ஸ் பண்ணி.. பெரிய தொகை கொடுத்து குற்றத்தை ஒப்புக்க வெச்சேன்!... நீங்களும் அவனுக்கு சட்டப்படி ஆயுள் தண்டனை குடுத்திட்டீங்க... ரொம்ப நன்றிங்கப்பா” என்றான் வினோத்.

நீதிபதியின் முகம் வெளிறியது. திரும்பி டிவியை பார்த்தார்.

“குழந்தை கொலை வழக்கில் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது.”

நிதானமாய் நாற்காலியில் சாய்ந்தார். கண்களில் நீர் இல்லை. நெஞ்சு மட்டும் கனத்தது.

பிறகு மெதுவாக சொன்னார், ”ஒரு நிரபராதிக்கு அங்கே ஆயுள் தண்டனை குடுத்தேன்… ஒரு குற்றவாளிக்கு இங்கே மரண தண்டனை குடுக்கப் போறேன்”

“அப்பா...நீங்க என்ன சொல்றீங்க?” வினோத் அலற, தன் மடியிலிருந்த துப்பாக்கியை எடுத்து வினோத்தை நோக்கி....

“டுமீல்”

(முற்றும்)

# இயற்கைச்சீற்றம்



- அனுராதா சௌரிராஜன் - சென்னை

*அளவோடு இருந்தால்*
*அமிர்தமே எதுவும்! இதுவும்*
*ஆலகாலம் தாங்கிய*
*ஆண்டவன் தாண்டவமோ?*

*காத்திருந்த நிலத்தின்*
*நெற்றியில் முதல் காதல்*
*முத்தமாய் மழைத்துளி! பின்*
*மொத்தமாய் மரண சத்தங்கள்!*

*நீரில்லா நிலமிருக்கா?*
*நிலமில்லா நீரிருக்க*
*களம் காணும் இடமெலாம்*
*உளம் உருக்கும் ஓலங்கள்!*

*வடிகால் இன்றி*
*வடியாத வெள்ளமும்*
*பிடிமானம் இன்றியே*
*குடித்தன உயிர்கள்!*

*இலவசமாய் இயற்கையும்*
*பெரு விசையாய் பொழிய*
*பாழாகிப் போயின*
*விவசாயப் பயிர்கள்!*

*இலங்கையின் வரைபடம்*
*எங்கே எனத் தேடும்படி*
*பங்கமாய் பெய்தே*
*பிணங்கள் புதைக்குழியிலே!*

*குளிர்ந்த புல்வெளிகள்*
*காணும் இடம் இனி*
*கனிந்த காதல் பாடல்களின்*
*களிப்புக் காணொலியிலா?*

*சூரியன் சந்திரன்*
*காற்று நீர் என்ற*
*சுற்றுப்புற சூழல் ஈந்த*
*இயற்கை படைப்புகள்!*

*இலவசமாய் அனுபவித்து*
*இதமாய்ப் பேணாவிடில்*
*என் மேல் என்ன பிழை*
*என்கிறதா இந்த மழை!*



## கவிதை

– தி. ஸ்ரீராமன் –

# முண்டாசு முற்காணி!

முண்டாசு முற்காணி

“பா” ரதம் ஓட்டிய பாரதியே (எம்)..!

பாட்டனாய் வழி நடத்திய சாரதியே..!

பாவிகளைக் கண்டால் பயந்திடாதே என்று..!

பாப்பாக்களுக்குப் போதித்த பாடமது நன்று..!

தாரமென வந்தவள் தகைமைச் செல்லம்மா..!

ஆரணங்கு அவளையும் பாடினார் செல்லமா..!

ஊரறிய உலகறிய உள்ளங்கவர் கண்ணம்மா..!

சீரழகுக் காதலியென செப்பினார் உவமையாக..!

கண்படப் போகுதென்று புனைபெயரில் அழைத்தாரோ..!

உண்மைக் காதலியின் உருவ வனப்பினையே..!

வண்ணக் கவிதையாக வடித்துப் பொதுவுடையாக்காது..!

பண்ணிலே பெயரினை மாற்றியே களித்தாரோ..!!

பெண்ணியம் பேசினான் பெருமையுடன் பைந்தமிழில்..!

உண்மையில் ஏற்றினான் பெண்மையை உயர்தரத்தில்..!

ஏட்டைத் தொடுவது பாபமென்றவர் மாய்ந்துவிட்டாரென..!

பாட்டெழுதிப் பெண்களின் விடுதலையை முழங்கினான்..!

எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்றும் கும்மியடித்தான்..!

மாதர் தம்மை இழிவு செய்வதை மடமை என்றே சாடியவன்..!

காதலனைக் கைபிடித்தே அவன் காரியங்களில் கைகொடுக்கச் சொன்னான்..!

மாதரைத் தமது.அறங்களைப் பேணியே மாட்சிமை காணவும் அறிவுறுத்தி நின்றான்..!

வேதத்தைக் கைகளில் ஏந்திய தாயவளை

ஆயுதமும் தாங்கியவளென நினைவுறுத்தினான்..!விடுதலைக் கும்மியை விழைவுடன் பாடியவன்..!

கெடுமதியின்றி கேண்மையையே என்றும் நாடியவன்..!

கண்ணியம் தவறாத பெண்ணியப் புலவன்..!

முண்டாசு முற்காணி நம் மனங்களின் காதலன்..!!



# சொற்களற்ற மயானம்

வைத்திய கலாநிதி ஜலீலா முஸம்மில் – ஏறாவூர்

*சொற்களற்ற மௌனம்*
*மயானம் ஆகிறது சில நேரம்*
*சொற்களற்ற மௌனம்*
*நிம்மதியும் அமைதியும் தருகிறது பல நேரம்*

*சொற்களற்ற மௌனவெள்ளத்தில்*
*சொல்ல வேண்டிய*
*பதில்கள் எதிர்நீச்சல் போடுகின்றன*
*சொற்களல்லா மௌனநேரங்களில் இரக்கமும்*
*நெருக்கமும் வெளிப்படத்தான் செய்கின்றன*

*பேச்சறு நிலையில் சில உறவுகள் அறுந்து*
*உயிருக்குப் போராடும்*
*பேச்சறு நிலையில் அன்புத்தளை அற்புத*
*முடிச்சுகளையும் போடும்*

*இரைச்சலும் குழப்பமும் உணர்வுகளைக்*
*கத்திரித்துத் துண்டாக்கி விடுகின்றன*
*கூச்சலுக்கு கூச்சப்படுபவர்கள்*
*மௌனத்தின் சக்தி அறிந்து*
*வெற்றி பெறுபவர்கள்*

*உணர்வுகள் இணையும் பாலமாயும்*
*உள்ளங்களைக் கிழிக்கும்*
*பலமான ஆயுதமுமாய்*
*இந்த அடர்மௌனம்*
*ஆழ்மனதின் சுடராகவும்*
*ஒளிரும்*
*அசுரத்தனத்தின் இடமாகவும்*
*அதிரும்*

*மௌனத்தைக் கெட்டியாக பிடித்து வைத்துக்*
*கொண்டிருக்கும் நிலை எப்போதும் நல்லதல்ல*
*மௌனம் உடைப்பது நல்லது*
*சூழ்நிலைக்கேற்ப*
*சொல்லி விடுவதும் நல்லது*

*மௌனம் சம்மதம் என்று சொன்னவர்கள் யார்?*
*அம்மௌனத்திலிருக்கும் எதிர்ப்புக்குரலை அவர்கள்*
*அறியவில்லையா?*
*மௌனம் மென்மையானதென*
*யாவரும் நினைக்கக்கூடும்*
*ஆனால் அது மகாவலிமை மிக்கது...!!*

## மட்டக்களப்பின் இயற்கை வனப்பு பற்றி - விபுலானந்த அடிகளார் -

மட்டக்களப்பிலே 30 மைல்கள் நீண்ட வாவி ஒன்று உள்ளது. இது கடலோடு கலக்கும் வடகோடி அமிர்தகழி என்னும் புண்ணியப்பழம்பதிக்கு அணிமையானது. அழகிய தெற்குக் கோடிக்கு அணிமையாக மேற்குக் கரையிலே மண்டூர் என்னும் புண்ணியப்பழம்பதி உள்ளது. வாவியின் மேற்குக் கரை முழுவதும் மருதத்தண்பனையாகும். கிழக்குக்கரையில் உள்ள ஊர்கள் தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண்ணுக்கும் மனதுக்கும் உவகை தருவன. புலியன் என்னும் வேடர் குலத்தலைவன் அரசு புரிநதவிடமாதலின் முன்னாளிலே **'புலியன் தீவு'** என வழங்கப்பெற்றதும் இந்நாளிலே மொழிச் சிதைவினாலே **'புளியந்தீவு'** என வழங்கப்படுவதும் மூன்று மைல் சுற்றளவுடையதுமான அழகிய நகரம் ஒன்று காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம்போல மட்டக்களப்பு வாவியின் நடுவண் அமைந்துள்ளது. இந்நகர் மட்டக்களப்புப் பிரிவுக்குத் தலை நகர-மாகும்.



# இறைவா வரம் தருவாயோ

கவிதை

- வாசுகி பிரபாகரன் -

இறைவா! எந்தன்.....
கண்களில் உந்தன்
வடிவழகைக் காணக்
கருணை ஒளி வீசி மலர்வாயே
எண்ணங்களில் உதிரும்
மணிச்சொற்கள்
வண்ணமுற நாளும் திகழ்வாயே
நாவில் தீந்தமிழின்
தேனூறித் தித்திக்க
இனிதே சந்தநடை போடுவாயே
காதில் அருளோசை
கனிய நின்னருகில்
எனை வா என்றழைத்திடுவாயே
உள்ளப் பூங்காவில்
சிறகடித்து விளையாடும்
பூஞ்சிட்டாய் பறந்து வருவாயே
இதயக்கோயிலில்
நிறைகுடமாய் வீற்றிருக்கும்
இறைவா!
தரிசனம் அளிப்பாயே
கைகளால் நின்றன்
மலரடிகளைப் பற்றிட
இக்கணம்
அருள்மழை பொழிவாயே
கால்களில் ஜதிலயமிட
பொற்கழல்கள் அடிதனில்
நடனமிடவே
ஒரு வரம் தருவாயே!!



# இளையவன் சிவா கவிதைகள்

1.

தனக்கான

எல்லா கதவடைப்புகளிலும்

சாவிகளை

என் வசம் தருபவள்

தாழ்ப்பாளில் தொங்கும் காமத்தை

இளைப்பாற வைக்கும்

வித்தைகளில் உயர்ந்து நிற்கிறாள்

காதல் இல்லறத்தில்.

2.

வரம் வேண்டி

உயர்ந்த கரங்களோ கோடி

தவமெனத்

தன்னையே ஒப்படைத்து

விடுதலையை நாடி

தேசமெங்கும் நிலைபெற்றிட

ஓடிய கால்களுக்கு

ஓய்வும் நிம்மதியுமற்றே

விடுதலை கொடுத்த விடை

துப்பாக்கிச்சூடென்ற பரிசுதானே

எல்லோரும் புன்னகைக்க

தன்னுயிர் ஈந்தவன்

எப்போதும்

சிரித்தே கிடக்கிறான்

மனிதனின் கரங்களில்

தவழும் பணத்தில்.

# கோமாளிகள்

சென்ற இதழின் தொடர்ச்சி.....

**'கோமாளிகள்'** திரைப்படம் இலங்கை வானொலியில் அந்தக்காலப்பகுதியில் ஒலிபரப் பப்பட்டுவந்த மக்கள் மனங்களில் இடம்பிடித்து மிகவும் பிரபல்யமாகியிருந்த 'கோமாளிகளின் கும்மாளம்' என்ற நிகழ்ச்சியை மீள் உருவாக்கம் செய்து திரைப்பட வடிவத்துக்கு கொண்டுவந்து எடுக்கப்பட்ட படமாகவே கருதப்படுகிறது. இந்தத் திரைப்படத்தின் கதையை திரைக்கதை வடிவமாக எழுதி உருவாக்கி வழங்கியவர் **எஸ். இராமதாஸ்** அவர்கள். இவர் இந்தத்திரைப்படத்தின் பிரதான பாத்திரமேற்று நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. திரைப்படத்தில் அவர் ஏற்றிருந்த அந்தப் பிரதான பாத்திரம்தான் மரிக்கார். இதனால் திரைப்படம் வெளிவந்தபின்னர் இவர் மரிக்கார் இராமதாஸ் என்று அழைக்கப்பட்டார்.

கதாசிரியருமாகிய இராமதாஸ் அவர்களிடம் கூற, அவரும் அதனை ஏற்றுக் கொண்டு திரைக்கதையை எழுத ஒப்புக்கொண்டார். இராமதாசிடம் இதைப்பற்றி பேசி அவர் திரைக்கதை எழுத சம்மதித்ததுமே இந்த திரைப்படத்தை தயாரிப்பதற்கு எம். மொஹமட் அவர்களே முன்வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோமாளிகள் திரைப்படம் எடுப்பதற்கான தீர்மானத் தைத்தொடர்ந்து அப்படத்தை இயக்குவதற்கு சிங்கள சினிமா பக்கம் ஈடுபாட்டுடன் இருந்த தோடு இயக்குனராகவும் செயற்பட்டுவந்த இராம நாதன் என்பவர் நியமிக்கப்பட்டு அவரே இத்திரைப் படத்தை இயக்கியுமிருந்தார். கோமாளிகள் திரைப்படத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய சுவாரஸ்யம் மிக்கதும் ஆச்சரியப்படத்தக்கதுமான முக்கியமான விடயம் ஒன்று உண்டு. அதனை இங்கு கண்டிப்பாகக்

## ஈழத்தில் வெளிவந்த தமிழ்த்திரைப்படங்கள் ஒரு தேடல்

**- தமிழ்ப்பாணன் -**

வர்த்தகராகிய **எம். மொஹமட்** அவர்களே இந்த திரைப்படத்தை தயாரித்திருந்தார். இவர் அந்தக் காலப்பகுதியில் வானொலியில் ஒலிபரப்பாகி வந்த **'கோமாளிகளின் கும்மாளம்'** என்ற நிகழ்ச்சியை வானொலியில் கேட்டபொழுது கவரப்பட்டு அந்த நிகழ்ச்சியை தவறவிடாது கேட்டுவந்த நிலையில் இதை ஒரு திரைப்படமாக வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற உந்துதலுக்கு உட்படுகிறார். இந்த விடயத்தை அவர் திரைப்படத்தின் நடிகரும்



(புகைப்படம்: திரைப்படத்தில் இராமதாஸ் பி. எச். அப்துல் ஹமீட் இருவரும் சந்திக்கும் ஒரு காட்சி மைகறோசொப்ட் கோ பைலட் AI உதவியுடன்)

குறிப்பிட்டே ஆகவேண்டும். இந்தத் திரைப்படத்தில் **'மரிக்கார்'** என்ற பிரதான பாத்திரமேற்று ஒரு முஸ்லிம் மதத்தைச்சேர்ந்தவராக நடித்த நடிகர் **எஸ். இராமதாஸ்** அவர்கள் உண்மையிலேயே பிராமண வம்சாவழியைச் சேர்ந்தவர். அவரது இயற்பெயர் இராமதாஸ் சத்திய வாகீஸ்வர ஐயர் என்பதே, என்ற விடயம் திரைப்படம் வெளிவந்து நீண்ட நாட்களுக்குப் பின்னரே பலருக்குத் தெரியவந்தது.

அதேபோலவே மற்றொரு அதிசயமும் இந்தத் திரைப்படத்தில் நிகழ்ந்திருந்தது. தற்போது உலகப் பிரபல்யம் வாய்ந்த அறிவிப்பாளராக வலம் வந்து கொண்டிருக்கும் **'லலிதாவின் பாட்டுக்கு பாட்டு'** பிரபலம் **பி. எச். அப்துல் ஹமீட்** அவர்களை அறியாதவர்கள் யாருமே இருக்கமுடியாது. அத்தனை பிரபல்யம் வாய்ந்த அவர் அப்போது இந்தத் திரைப்படத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்திருந்தார். அந்தப்பாத்திரம்தான் ஆச்சரியமானது. ஒரு இந்து முஸ்லிமாக நடிக்க ஒரு முஸ்லிமாகிய பி. எச். அப்துல் ஹமீட் அவர்கள் ஒரு இந்து பிரமணராக நடித்திருந்தார். (பிற்காலத்தில் அதாவது 1995இல் வெளிவந்த பம்பாய் திரைப்படத்தில் இதேமாதிரியான ஒரு சூழல் இந்து முஸ்லிமாகவும் முஸ்லிம் இந்துவாகவும் நடித்த சூழல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது)

இராமதாஸ் அவர்கள் கொழும்பின் முஸ்லிம் மக்கள் பேசும் கொழும்பு வட்டார வழக்கு முஸ்லிம் பாசையை மிகச்சிறப்பாக பேசி மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்தார் இந்த திரைப்படத்தில் பி. எச். அப்துல் ஹமீட் அவர்களுடைய நடிப்பு மிகச் சிறப்பாக கவே இருந்தது. இவருடைய நடிப்பு வியட்நாம் வீடு திரைப்படத்தில் சிவாஜி கணேசன் அவர்களுடைய நடிப்பை தழுவியதாக தத்ருபமாக ஒரு பிராமணர் பாத்திரமாகவே தன்னைச்செதுக்கி நடித்திருந்தார்.

**'மரிக்கார்'** என்று அழைக்கப்பட்ட இந்த திரைப்படத்தின் பிரதான பாத்திரமாகிய நடிகர் மரிக்கார் இராமதாஸ் அவர்கள் அவரது 69வது வயதில் 2016ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி இவ்வுலகை விட்டு உயிர் நீத்தார் என்பதும் இங்கு பதிவு செய்யப்படவேண்டிய செய்தியே. இவர் பிறந்தது இந்தியாவின் தமிழ் நாட்டில், வாழ்ந்தது இலங்கையில் அதே வேளை இவர் இயற்கையெய்தியதும் தமிழ் நாட்டில். இறுதிச் சடங்குகள் 2016 ஆடி 14ஆம் திகதி பெசன் நகர், தமிழ்நாட்டில் இடம்பெற்றது.

இந்த திரைப்படத்தில் இவர்கள் இருவருடன் ரி. இராஜகோபால், எஸ். செல்வசேகரன், கே. சந்திர சேகரன், சில்லையூர் செல்வராஜன், கமலினி செல்வராஜன், கே. ஏ. ஜவாஹர், சுப்புலெட்சுமி, ஆனந்தராணி ராஜரட்ணம், செல்வராணி, செல்வம், பெர்ணான்டோ, முபாரக், ஏப்ரகாம், முஸ்தபா, மற்றும் கமலஸ்ரீ ஆகியோர் நடித்திருந்தனர்.

பாடல்களை சில்லையூர் செல்வராஜன், பவுசில், அமீர், கவிஞர் சாது ஆகியோர் எழுதியிருந்தார்கள். மொஹிதீன் பேக் (சிங்கள திரைப்படங்களில் மட்டும் பாடி வந்த இவரது முதல் தமிழ் பாடல் இந்த திரைப்படத்தில்தான் பாடப்பட்டது), வீ. முத்தழகு, கலாவதி சின்னசாமி, கனகாம்பாள் சதாசிவம், சுஜாத்தா அத்தநாயக்க ஆகியோர் பாடல்களை பாடியிருந்தார்கள். பாடல் ஒவ்வொன்றும் சிறப்பாக அமைந்திருந்தன. தணிகாசலம் என்ற வீட்டின் உரிமையாளரின் பிறந்த தினத்தின் போது இடம்பெற்ற பாடல் மட்டும் **'பட்டிக்காடா பட்டணமா'** என்ற இந்திய தமிழ்த் திரைப்படத்தில் வரும், **அடி என்னடி ராக்கம்மா...** என்ற பாடலின் மெட்டில் பாடல் வரிகள் மாற்றியமைக்கப்பட்டு பாடப்பட்டிருந்தமை சுட்டு தற்குரியது.

இந்தத்திரைப்படத்தின் முக்கியமான ஏனைய விடயங்களாகிய ஒளிப்பதிவை யோண் ஜே. யோகராஜாவும், இசையமைப்பை கண்ணன் - நேசம் (இரட்டையர்கள்) ஆகியோரும், படத் தொகுப்பை எஸ். இராமநாதன் அவர்களும் மேற்கொண்டிருந்தார்கள். நாற்பத்தைந்தே நாட்களில் எடுத்து முடிக்கப்பட்ட இந்த திரைப்படமானது 1976ஆம் ஆண்டு ஐப்பசி 22ஆம் திகதி திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. கொழும்பு பிளாசா, செல்லமஹால், யாழ்ப்பாணம் வின்சர் திரையரங்கு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் திரையிடப்பட்டு ஒவ்வொரு திரையரங்கிலும் 50 நாட்களை கடந்து ஓடியது.

இந்து, இஸ்லாம், கிறீஸ்தவம் ஆகிய மூன்று மதங்களையும் சார்ந்த குடும்பங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற சிறந்த நோக்கோடு ஒன்றாக சேர்ந்து கட்டி, கூடிவாழ்ந்த வீடு, பொருளாதார நிமையில் ஏற்பட்ட வீழ்ச்சிகாரணமாக இவர்களுடைய வீடு ஏலத்துக்கு வந்தது. அந்த வீட்டை தணிகாசலம் என்பவர் ஏலத்துக்கு வந்தபோது வாங்கியிருந்தார். அவர் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த அந்த மூன்று குடும்பங்களையும் தொடர்ந்து அங்கேயே வாழ அனுமதித்திருந்தார். அவர் தனது இறப்பிற்கு பிறகு அந்த வீட்டை நன்நடத்தையின் அடிப்படையில் ஒருவருக்கு வழங்குவதாக அறிவித்திருந்தார். அந்த மாளிகை தமக்கு சொந்தமாகிவிட வேண்டும் என்று அனைத்து குடும்பங்களும் போட்டிபோட்டுக்கொண்டு தமது நன்நடத்தையை நிரூபிக்க பல்வேறு வகைகளில் முயற்சிக்கிறார்கள். கடைசியாக என்ன நடந்தது என்பதே திரைப்படக்கதைச் சுருக்கம். அந்தக் காலப்பகுதியில் வெளிவந்த தென் இந்தியத் திரைப் படங்களுக்கு நிகராக இத்திரைப்படம் எடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப் படத்தில் காட்சியமைப்புகள், காட்சி வடிவமைப்பு, தொகுப்பு, இசையமைப்பு, பாடல்கள் போன்ற யாவுமே குறிப்பிடக்கூடிய அளவுக்கு சிறப்பாகவே அமையப் பெற்றிருக்கின்றன. ஜவாகர் அவர்கள் தணிகாசலமாக சிறப்பாக நடித்திருந்தார். அதே போலவே சுப்புலட்சுமி காசி நாதன், செல்வசேகரன், கமலினி செல்வராசா, சில் லையூர் செல்வராசா ஆகியோரும் நடிப்பில் பிரமிப்பையூட்டியிருந்தார்கள் என்றே கூறவேண்டும். மொத்தத்தில் இந்தத்திரைப்படம் கோமாளிகள் என்ற பெயரில் சிரிக்க வைப்பதற்காக எடுக்கப்பட்ட நகைச்சுவைப்படம் என்று, பார்ப்பதற்கு முன்னர் எண்ணத் தோன்றும். ஆனால் பார்த்த பின்னர்தான் புரியும் சிரிப்பதற்கல்ல சிந்திப்பதற்காக எடுக்கப்பட்ட பல சிறப்பான கருத்தை வெளிப்படுத்தும் சிறப்பான திரைப் படமே இதுவென்று. அத்துணை தத்ரூபமாக சகல விடயங்களும் சிறப்பாகக் கையாளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தத் திரைப்படம் இதற்கு முன்னர் வெளிவந்த இலங்கையின் தமிழ் திரைப்படங்கள் அனைத்தையும் விட அந்தக் காலப் பகுதியில் அதிக நாட்கள் ஓடிய படமாக அப்போது பதிவு செய்யப் பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. அத்தோடு இது பொருளாதார ரீதியில் வெற்றியளித்த ஒரு படமாகவும் குறிப் பிடப்படுகிறது.

## தொடரும்

# கவிதை

## நதியாகிப் போகிறோம்



மலை உச்சியின்
மார்பிலிருந்து
அமுதமாய் கசிந்து
வழிந்தோடுகிறது அந்த நதி
வனவிலங்குகளின்
வாழ்வாதாரம் செழிக்க
காடு மேடு கடும்பாறையென -வருடி
நீந்தி பாய்கிறது அந்த நதி
சமவெளியிலிருக்கும்
வயல்களும் தோப்புகளும்
உயிர் மூச்சு விட்டு
உறிஞ்சி குடிக்க வசதியாக
வளைந்து நெளிந்து
உலாவுகிறது அந்த நதி
வழிமறித்து நிற்கும்
வல்லாதிக்கத் தடுப்பணைகளிடம்
சில இடங்களில் முட்டுகிறது
சில இடங்களில் மோதுகிறது
சில இடங்களில்
புது வழி அமைத்துக்கொண்டு
புத்துணர்வோடு பாய்கிறது அந்த நதி
எல்லாம் அடைக்கப்பட்டு
நெறிக்கப்பட்டு
ஒடுக்கப்படுமிடத்தில்
மூச்சு முட்டி
திமிரி எழுந்து
பெருவெள்ளமாய்
அத்தனையையும் அடித்துச் சென்று
ஆக்ரோசமாக கர்ஜித்து
ஓடுகிறது அந்த நதி
கடையானி கழண்ட
காலச்சக்கரத்தின் நீதியில்
நதியாகிப் போகிறோம் நாங்கள்.

**- வெறுத்தா -**

# நேரிசை வெண்பா – மரபுக் கவிகள்


## போதையில்லாச் சமூகம்



போதையினை நீக்கிப் புனிதச் சமுதாயம்
மேதையர்தம் நோக்கில் மிளிர்கவே - தீதகன்ற
நன்னெறியைக் காக்கும் நலமாம் அதனால்யாஞ்
சொன்னபொருள் ஏற்பீர் துணை!

– கீதா அருண்ராஜ் –

போதையின் பாதையில் போகாதே மானுடா
வாதைகள் வந்து வருத்தினால்-கோதைகள்
கூறும் கொடுஞ்சொல்லால் கொண்டவன் நெஞ்சமும்
மாறும் மணவாழ்வில் மாண்பு



-- கண்ணன் நடராசன் –



போதையைக் கொண்டு புரண்டுமே வீதியில்
ரோதைபோல் சுற்றியே ரோசமின்றிப் - பேதையாய்
வாதையில் நோயினால் வாழ்வினில் சாவாதுக்
கோதையைக் காப்பாற்றிக் கொள்

– கவிஞர் இரா. கி –

நன்னெறிகள் காட்டாத நாட்டினிலே என்றென்றும்
துன்பமிகு போதை துலங்கிடும் - இன்பம
தில்லா தொழிந்திடும் இல்லமெலாம் கண்ணீரில்
கல்லாமை தோற்றும் கலி



-- கோவி கேசவன் –

# நேரிசை வெண்பா – மரபுக் கவிகள்

## போதையில்லாச் சமூகம்



*வேண்டோம் மதுவை, விலக்குவோம் போதைதனை*

*பூண்டொழிக்கச் செய்வோம் புகழ்ச்சமூகம் -- ஈண்டுலகில்*

*காப்போம் நலத்தைக் கருத்தினிலே ஒன்றிடுவோம்*

*ஆப்போம் புதுவாழ் வறம்.*

-- கோவிந்தசாமி ஜயாசாமி --

*ஆடிக் குடித்திட்டே ஆயிரமாய் வீண்விரயம்*

*தேடிக் கடைக்குள்ளே தின்று - வாடிக்*

*குடும்பத்தைக் காக்கா குறைபடிந்த வாழ்க்கை*

*படும்பாடே கூற்றிதனைப் பார்*



-- கண்ணன் பாரதி --



*பேதமை நீக்கிடும் பேராண்மை மாந்தரால்*

*வேதனை வாரா வியனுலகில் -- போதையில்லா*

*நற்சமூகம் நன்மையே செய்திடும் நாள்தோறும்*

*அற்பச் செயலை அகற்று.*

-- ப. முருகன் யோகீஸவரர் --

*அறிவை இழப்பாய் அனைத்தும் இழந்தே*

*திரிவாய்த் தெருவில் இழிவாய் - அறிந்திடு*

*போதையைப் போக்கிப் புனிதமாய். ஆகிடவே*

*வாதனை. விட்டு விலகு*



-- சரஸ்வதி ராசேந்திரன் --

# நேரிசை வெண்பா – மரபுக் கவிகள்

## போதையில்லாச் சமூகம்



நாக விடமதை நன்னீராய்க் கொள்வீரோ?

தேகம் அழிக்கவே தேடிநிதம் --சாகின்ற

பேதையரே! போதையின் பாதையில் போகாதீர்!

வாதைகள் வாட்டும் வதைத்து

– கி. சிவக்குமார் –

போதைப் பொருளைப் புறந்தள்ளி விட்டவர்க்கு

வாதை இலாத வளமான - பாதை

அமையும், மிகுந்த அமைதி நிலவும்

சுமையிலா வாழ்வைத் தரும்



-- தனராஜ் பாப்பணன் –



குடியைக் கெடுக்கும் குடியை விடுவீர்

மடியினை நீக்கி மகிழ்வீர் - விடியலும்

வாழ்வினில் தோன்றும் வளமை பெருகிடும்

தாழ்வுமே நீங்கும் தகர்ந்து.

-- க. சண்முக சிதம்பரம் –

மதுவினால் நாசமாகும் மாந்தரே கேளீர்

புதுவழியைக் கண்டே புகுவீர்-- எதுவும்

புரிந்தே நடந்திடப் பூரிக்கும் வாழ்வும்

பிரிந்தவர் கூடுவர் பின்பு



-- பி. பட்டாபிராமன் –

# புண்ணிய யாத்திரை

## சிறுகதை

ஒருவாரமா அந்த ஊருலதான் திரிஞ்சிக்கிட்டு இருந்துச்சு அந்தப்பாட்டி

அது பேசுற பாசையும் புரியல அதோட ஊரும் தெரியல ஆருக்கும் கிழிஞ்சிபோன சேலை சட்டை அதுக்கு மேல ஒருசால்வ, கண்ணுல கண்ணாடி, கைல ஒரு கிண்ணம், ஒரு கம்பு இம்புட்டுத்தான் அதோட சொத்து. அது வடநாட்டு யாத்திரீகர்கள் வார ஊரு.

“அப்ப அப்ப குஜராத், மகாராஸ்ட்ரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்கள்ள இருந்து வருவாக புண்ணிய யாத்திரைன்னு. அப்ப இதுமதிரி செலபேர அவங்களா விட்டுட்டுபோறாங்களா இல்ல தச்செயலா இது நடக்குதுதான்னு தெரியல அதுமாதிரிதான் இந்தப்பாட்டிய விட்டுட்டுப்போயிருப்பாக”ன்னு அங்க கடை வைச்சிருந்தவரு சொன்னாரு




அதுபாட்டுக்கு கை நீட்டி வார காசுல என்னத்தையாவது வாங்கித்திங்கும் இல்ல ஆரா வது போடுறதத்திங்கும் அப்புறமா பஸ் ஸ்டாண்டுல படுத்துக்கும்

இப்புடித்தான் போய்க்கிட்டு இருந்துச்சு. அம்மு அதை பாக்குறவர அம்மு ஆறாவது படிக்கிறா அவகொஞ்சம் வித்தியாசமானவ

இதுமாதிரி யாரையாவது பாத்தா வீட்டுல இருந்து எதையாவது கேட்டு வாங்கிட்டு வந்து போடுவா. அவங்க வீட்டுலயும் அவளுக்கு ஒத்துழப்பாக.

அன்னிக்கி டீச்சர் வகுப்புல சொன்னாங்க “உயிர்களிடத்தில் அன்புவேண்டும், அன்பு நிறைய உடையவர்கள் பெரியோர்”னு சொல்லிக்குடுத்தாக.

அப்ப அவ டீச்சர்கிட்ட சொன்னா. “அப்ப பாட்டிகள் கிட்டயும் அன்பு வேணும்தான”ன்னா. அவங்க புரியாமக்கேட்டங்க “என்னம்மா சொல்ற?”ன்னு

அப்பச்சொன்னா “நான் வரும் வழில ஒரு பாட்டியப்பாத்தேன் அது மேலயும் அன்பு செலுத்தனும்தான”ன்னா அவங்க “ஆமா”ன்னாக. “அப்ப அதுக்கு ஏதாவது பண்ணலாமே”ன்னா “என்னபண்ணலாம்? சொல்லு”ன்னாக டீச்சர்

அம்மு சொன்னா “எல்லா பசங்களும் ஒரு நாள் வீட்டுல குடுக்குற சில்லறைய சேத்து, மொத்தமா அந்தப் பாட்டிக்குக் குடுக்கலாமே”ன்னா.

டீச்சர் “நல்ல யோசனைதான் யார் யார் அதுமாதிரி தாறீங்க?”ன்னு கைதூக்குங்கன்னு சொன்னவன்ன எல்லாரும் கைதூக்குனாக, “சரி நாளைக்கி எல்லாரும் வீட்டுல குடுக்குறதக்கொண்டுவாங்க. யாரு அதிகமாக்குடுக்குறாகளோ அவங்களுக்கு ஒரு சர்ப்பிரைஸ் பரிசு இருக்கு”ன்னாக

வீட்டுக்கு வந்த அம்மு இதெல்லாம் அம்மாகிட்டயும் அப்பாகிட்டயும் சொன்னா அவங்க “குட் கேர்ள்” ன்னு பாராட்டுனாக

“அப்பா நீங்க எவ்வளவு தருவீங்க?”ன்னா

அவரு சொன்னாரு “பத்து ரூவா போதுமா?”ன்னு

அம்மு சொன்னா “அதிகமாக்குடுக்குறவுகளுக்கு சர்ப்பிரைஸ் கிப்டு இருக்குனு”, “அத நாந்தான் வாங்கனும்”ன்னா

“சரி அம்பது ரூவா தாறேன்”னாரு

அவளுக்குச் சந்தோசமாப் போச்சு. ராத்திரி கனவுல டீச்சர் அவளுக்கு தலையில ஒரு கிரீடம் வைக்கிற மாதிரி-யெல்லாம் கனவு வந்துச்சு. காலையில அப்பாக்கிட்ட ஞாபகமா ரூவாய வாங்கி பள்ளிக்கொடத்துக்கு எடுத்துட்டுப்போனா. அந்த டீச்சர் பீரியடும் வந்துச்சு. இவ ஞாபகப்படுத்துனா

அவங்களும் “ஆமாந்னு சொல்லி, ஒவொருத்தரா கொண்டாந்தாக ஒரு ரூவாயில இருந்து அஞ்சு ரூவா வரை ஒவ்வொருத்தராக் குடுத்தாக அப்ப முருகன் சும்மா ஒக்காந்துருந்தான்.

“ஏண்டா நீ எதுவும் கொண்டாரலயா?”ன்னு டீச்சர் கேட்டாக

அவன் சொன்னான் “எங்கவீட்டுல கேட்டேன் நாமலே அந்த நெலமையிலதான் இருக்கோம் கைல காசு இல்லன்னு சொல்லிடுச்சு எங்க அம்மா”ன்னான்

டீச்சர் “பரவாயில்ல அம்மு நீ எவ்வளவு கொண்டாந்த?”ன்னு கேட்டாக

அவ பெருமையா எடுத்துக்குடுத்தா. அம்பது ரூவாய.

டீச்சர் சொன்னாங்க “எல்லோரும் அம்முவுக்கு கைதட்டுங்க”ன்னு அம்முவுக்கு ஒரே சந்தோசம்

இப்ப பணத்த எண்ணுனாக 356 ரூவா வந்துச்சு



டீச்சர்சொன்னாங்க “இதுகூட நானும் பணம்போட்டு 500 ரூவாயாக் குடுப்போம்”ன்னாக “சாயங்காலம் பள்ளிக்குடம் முடிஞ்சதும் எல்லாருமாப்போய் குடுக்கலாம்”ன்னு முடிவு பண்ணுனாக

அதுமாதிரியே போயி பாட்டியத் தேடிக்குடுத்தாக. பாட்டி கையெடுத்துக்கும்புட்டுச்சு

இப்ப முருகன் சொன்னான் “நான் காசு எதுவும் குடுக்க முடியல, ஆனா மத்தியானம் நான் சாப்புட அம்மா சப்பாத்தி குடுத்துவிட்டுச்சு, அத அந்தப்பாட்டிக்கு குடுக்குறேன்”னான்

எல்லாப்பசங்களும் விழுந்து விழுந்து சிரிச்சாங்க “இந்தகாஞ்ச சப்பாத்திய யாராவது குடுப்பாகளா நீயே திண்ணுடா”ன்னு கேலி பண்ணுனாக

ஆனா பாட்டி அதவாங்கி ஆவலா சாப்புட்டுச்சு அது கண்ணுல தண்ணி வந்துருச்சு என்னமோ சொல்லிட்டுக்

கையெடுத்துக்கும்புட்டுச்சு

எல்லார் கண்ணும் கலங்கிடுச்சு

அப்ப டீச்சர் சொன்னாங்க “இப்பசர்ப்பிரைஸ் கிப்ட் யாருக்கு?ன்னு சொல்லப்போறேன்”னு

எல்லாரும் “அம்மு அம்மு”ன்னு கத்துனாக

ஆனா டீச்சர் “அது முருகனுக்குத்தான்”ன்னாக அம்முவுக்கு அழுகையா வந்துச்சு,

டீச்சர் சொன்னாக “நீங்க எல்லாரும் உங்களுக்குப்போக மீதி இருந்ததக் குடுத்தீக, ஆனா முருகன் தான் பட்டினியா இருந்துட்டு தன்னோட சாப்பாட மத்தவங்களுக்குக்குடுத்தான் அதுதான் சிறந்த தானம்”ன்னாக

முருகன் கண்ணுல தண்ணிவந்துருச்சு

அம்மு கண்ணுலயும் தண்ணிவந்துச்சு “பரவாயில்ல முருகன் தான் உண்மையிலயே அதுக்கு உரியவன்”ன்னு கைகுடுத்துச்சு

அதைப்பாத்துட்டு டீச்சர் சொன்னாங்க “எல்லாரும் ஒருதடவ அம்முக்கும் கைதட்டுங்க….ஏன்னா இந்த ஐடியாவசொன்னதே அவதான், அதுனால அவளுக்கு என்னோட பரிசா இந்த பேனாவத்தாறேன்” னு சொல்லிக்குடுத்தாங்க அது அம்முவுக்கு ஒலகத்துலயே பெரிய பரிசாத்தெரிஞ்சிச்சு

அப்ப அம்முவோட அப்பா வந்தாரு “இந்தப்பாட்டிய முதியோர் இல்லத்துல சேக்க ஏற்பாடுபண்ணிடேன், இனிமே அவங்களுக்கு எல்லாம் கெடைக்கும், அதுக்கான பணம் கட்டிட்டேன்”னாரு இப்ப டீச்சர் கண்ணும் கலங்கிருச்சு

அப்ப அவரு தான் சின்னவயசா இருக்கும்போதே இறந்துபோன தன்னோட அம்மா நெனப்புல அவரோட கண்ணும் கலங்கிடுச்சு.

தொல்காப்பியர் காலத்து காதல் பற்றிக் குறிப்பிடுமுன் தொல்காப்பியம் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்வது சிறப்பாகும். தொல்காப்பியர் காலத்திற்குப் பின் தோன்றிய முப்பால் கொண்ட திருக்குறளை மக்கள் அறிந்து கொண்ட அளவிற்கு தொல்காப்பியத்தைப் பற்றி இதுவரை மக்கள் அறிந்து கொண்டது குறைவாகவே இருக்கின்றது. தொன்மையான மொழி எங்கள் தமிழ் என்று நாங்கள் கொண்டாடுவதற்குத் தொல்காப்பியம் போன்ற நூல்களே இப்போது எமக்குச் சான்றாக இருக்கின்றன. தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்து, தமிழரின் தொன்மையை எடுத்துச் சொல்லும் நூல்தான் தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியத்திற்கு முன் இதுபோன்ற பல நூல்கள் தமிழில் தோன்றியிருந்தாலும், அவை எமக்கு இதுவரை கிடைக்கவில்லை. 1610 நூற்பாக்களைக் கொண்ட தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பகுப்புக்களையும், அவற்றின் உட்பிரிவாக ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்களையும் தந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தைப் பின்பற்றியே தமிழில் சில இலக்கண நூல்களும் உருவாகின எனலாம்.

தொல்காப்பியம் போலவே திருக்குறளும் எங்கள் மொழிக்கு வளம் சேர்த்தது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தொல்காப்பியம் திருக்குறளைவிடக் காலத்தால் முந்தியது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் காலவித்தியாசம் இந்த இரண்டு நூல்களுக்கும் இடையே இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த இரண்டு நூல்களையும் எடுத்துப் பார்த்தால், ஒரு இனத்தின் சிறப்பான வாழ்வியலுக்குத் தேவையான பண்புகளை எடுத்துச் சொல்பனவாகவும் இவை இருக்கின்றன. தொன்மையான இந்த இரண்டு நூல்களும் அன்றய சமூகத்திற்குத் தேவையான ‘அறம் பொருள் இன்பம்’ என்ற மூன்று பிரிவுகளைத் தம்முள் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. எல்லாவற்றையும் போதிக்கும் எங்கள் சமூகம், ‘இன்பத்துப்பால்’ பள்ளிமாணவர்களுக்குத் தேவையில்லை என்று அதை ஒதுக்கியே வைத்திருந்தது.



# தொல்காப்பியக் காதல் - அன்றும் இன்றும்!

– குரு அரவிந்தன் –

காலத்தால் வாழ்வியல் நிலையில் சில மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. காலத்திற்கு ஏற்ப மக்கள் எதற்கு முதலிடம் கொடுத்திருப்பார்கள் என்பதை, அக்காலத்தில் எழுந்த இலக்கிய ஆவணங்கள் எடுத்துக் காட்டும். சங்க இலக்கியங்களில் இருந்தும் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். தொல்காப்பியர் காலத்தில் இன்பம், பொருள், அறன் என்ற வரிசையிலேதான் இவை இடம் பெற்றிருந்தன. ஆனால் திருவள்ளுவர் காலத்தில் இதுவே அறம் பொருள் இன்பம் என்று மாற்றம் அடைந்திருந்தது. அறமும், இன்பமும் முன்பின் தள்ளப்பட, பொருள் எப்பொழுதும் இரண்டாம் இடத்திலேயே இருந்திருக்கிறது. இந்த ஒழுங்கு மாற்றத்தை நாங்கள் வேறு கோணத்தில் எடுத்துப் பார்த்தால், ஒரு விழாவிற்குச் சென்றோமேயானால் அந்த விழாவின் பிரதம உரையாளரின் உரை கடைசியாகத்தான் இடம் பெறுவதை அவதானித்திருப்பீர்கள். பார்வையாளர்களும் அதற்காகவே காத்திருப்பார்கள். அதேபோலத்தான் தொல்காப்பியரும், திருவள்ளுவரும் எது தமது காலத்திற்கு முக்கியம் என்று கருதினார்களோ, காலத்தின் தேவை கருதி அதைக் கடைசி அதிகாரமாகவும் வைத்திருக்கலாம் என்றும் நாங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் வரும் களவியல், கற்பியல் என்ற இயல்களில் வாழ்வியல் முறைகள், நெறிமுறைகள், பண்புகள், இயல்புகள் மட்டுமல்ல, காதலைப் பற்றிய குறிப்புக்களும் நிறைய இருக்கின்றன. இதைத்தான் கைகோள் என்று தமிழ் இலக்கியம் குறிப்பிடுகின்றது. திருமணத்திற்கு முன் தலைவனும் தலைவியும் இன்ப உணர்வு ஏற்பட்டு பெற்றோருக்குத் தெரியாமல் ஒருவரை ஒருவர் விரும்பும் காலத்தைக் ‘களவியல்’ என்றும், திருமணத்திற்குப் பின்னான அவர்கள் காலத்தைக் ‘கற்பியல்’ என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியரின் காலம் ஆணாதிக்க காலம் என்பதால், கற்பியலில் தலைவனின் கூற்றே அதிகமாக இடம் பெற்றுள்ளது.

களவியலில் தொல்காப்பியர் 51 நூற்பாக்களைத் தந்திருக்கின்றார். காதலர்களான ஆணுக்கும்

பெண்ணுக்கும் அறிவு, ஆற்றல், புகழ், கொடை, ஆராய்தல், நல்லொழுக்கம், நட்பு, பழிபாவம் அஞ்சுதல், கொள்கை, துணிவு போன்ற குணங்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடும் தொல்காப்பியர் இதில் பெண்களுக்கு மேலதிகமாக அச்சம், மடம், நாணம் இருக்க வேண்டும் என்று அக்காலச் சமூகத்தின் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கின்றார்.



ஆணும், பெண்ணும் பருவவயதில் ஒருவரை ஒருவர் விரும்புவது இயற்கை என்பதால், அக்காலத்திலும் அந்தக் களவு நெறியைச் சமூகம் தவறானதாகக் கருதவில்லை. காதலையும், காமத்தையும் சமீப காலங்களில்தான் நாங்கள் பிரித்துப் பார்க்கத் தொடங்கியிருந்தோம். காதல் என்பதை உள்ளத்தை மையப்படுத்தியதாகவும், காமம் என்பதை உடலை மையப்படுத்தியதாகவும் பொருள்படக் குறிப்பிடுவதுதான் தற்போது பாவனையில் இருந்து வருகின்றது. ஆனால் தொல்காப்பியம், திருக்குறள் மற்றும் அனேகமான சங்க இலக்கியங்களில் ‘காமம்’ என்ற சொல்லையே காதலுக்கும் புலவர்கள் பாவித்திருக்கின்றார்கள். தற்காலத்தில் காமம் என்ற சொல் ‘வேறொருவர் உடல்மீது கொண்ட வெறி’ என்ற பொருள்பட எடுத்துக் கொள்ளப்பட்டதால், கவிஞர்கள், எழுத்தாளர்கள் கூடியவரை காமம் என்ற சொல்லைத் தவிர்த்து காதல் என்ற சொல்லையே பாவிக்க முற்பட்டிருக்கின்றனர்.

காதல் என்றால் என்ன? அது எப்படி உருவாகிறது, அவர்கள் ஒன்று சேர்வதற்கும் பிரிவதற்கும் அவர்களின் ஊழ்வினைதான் காரணமென்று தொல்காப்பியர் அந்தக் கருத்தையே முன்னிறுத்துகின்றார். ஆணும் பெண்ணும் ஒன்று சேரக்கூடியதற்கான காரணங்களாக, நல்லூழின் காரணமாக ஒத்த பிறப்பு, குடி, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு என்னும் பத்துப் பண்புகளைத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகின்றார்.

**நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்**
**கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்** (தொல்.களவியல்-5)

இத்தகைய பண்புகைக் கொண்ட ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ஏற்படும் ஈர்ப்பால், காதல் வயப்படுவர் என்று குறிப்பிடும் தொல்காப்பியர், தொடக்கத்தில் காதலர்களின் கண்கள்தான் பேசும் என்கிறார். இக்காலத்திலும் காதல் அனுபவம் உள்ளவர்களுக்குக் கண்கள் பேசுவது புரியும். இன்று ‘கண்களின் வார்த்தைகள் புரியாதோ கண்ணும் கண்ணும் பேசியது உன்னால் அன்றோ, என்பது போன்ற அர்த்தத்தில் பல சினிமாப் படல்கள் வெளிவந்திருப்பதற்கும் பிள்ளையார் சுழி போட்டவர் தொல்காப்பியரே!

காதலனைக் கண்டதும் காதலிக்கு ஏற்படும் மெய்ப்பாடுகள் பற்றியும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். காதலன் தன்னைப் பார்ப்பதை விரும்புவது, தன் தலைமுடியை அடிக்கடி சரிசெய்து கொள்வது, தான் அணிந்திருக்கும் அணிகலன்களைத் திருத்திக் கொள்வது, காதலன் கொடுப்பதை மறுக்காமல் வாங்கிக் கொள்வது, மறைவில் நின்று அவனைப் பார்த்து மகிழ்வது, வேறு வழியில்லாமல் அவனை ஏற்றுக் கொள்வதாகக் கூறுவது போன்ற செய்கைகளைக் காதலி செய்வாள் என்று குறிப்பிடுகின்றார்.

காதல் (காமம்) என்பது எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியானதாகத்தான் இருந்திருக்கின்றது. இப்பொழுதும் இப்படியான நிகழ்வுகள் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால் காலப்போக்கில் தொழில் நுட்பவசதிகள் வந்ததால், காதலுக்குத் துணை போகும் முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் தோழியையும், செவிலித்தாயையும், பறவைகள் மிருகங்களையும் தூதுவிட நம்பியிருந்த காதலர்கள், காலமாற்றத்தால் ஒருகட்டத்தில் அஞ்சல் மூலம் தபால்காரனை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று அதையும் கடந்து நவீன தொழில் நுட்பசாதனங்களைக் காதலர்கள் நம்பியிருக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. காதலிக்கும் முறையும் முகநூல்காதல், ஆன்லைன் காதல், தொலைபேசிக்காதல், மெய்நிகர் காதல் என்று காதல் புதிய பல உருவங்களைப் பெற்றுவிட்டது. இதனால் இருவருக்கிடையிலான காதல் என்பது குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் நின்றுவிடாமல், ஒருவரை ஒருவர் சந்திக்காமலே பரந்துபட்டு வளரத் தொடங்கிவிட்டது. இந்த மாற்றங்கள் காலமாற்றத்தால் ஏற்பட்டதே தவிர, அன்று காமம் என்று சொல்லப்பட்ட காதலில் மாற்றங்கள் ஏற்படவில்லை. காதலனுக்கும், காதலிக்கும் ஈர்ப்பு ஏற்படுவதில் எந்த மாற்றமும் இல்லை. பெற்றோருக்குத் தெரியாமல் களவாக ஒருவரை ஒருவர் முதலில் விரும்பத் தொடங்கும்போது, அன்றும் இன்றும் அவர்களுக்குள் ஒரே மாதிரியான மாற்றங்கள்தான்

ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அன்று காதல் வசப்பட்ட ஒருவரின் நிலை எப்படி இருந்தது என்று தொல்காப்பியம் தெளிவாக எடுத்துச் சொல்லும் போது அதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**

**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**

**நோக்குவ எல்லாம் அவையே போறல்**

**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**

**சிறப்புடை மரபின் அவை களவு எனமொழிப**

**(தொல். பொருள். களவு. நூற்பா 9)**

வேட்கை என்பது இருவரும் ஒன்றுசேர்ந்து இன்பம் அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பம், ஒருதலை உள்ளுதல் என்பது அதை நிறைவேற்ற திடமான உறுதியோடு காதலர் இருத்தல், மெலிதல் என்பது



காதலர் நினைவாகவே இருப்பதால், தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாது இளைத்துப் போதல், ஆக்கம் செப்பல் என்பது ஒருவரை ஒருவர் சந்தித்து இன்பம் அனுபவிக்க என்னென்ன செய்யலாம் என்று திட்டம் போட்டுத் தங்களுக்குள் சொல்லிக் கொள்ளல், நாணும்வரை இறத்தல் என்பது வழமையாகச் செய்வதற்கு வெட்கப்படும் ஒரு செய்கையைக் காதலருக்காகச் செய்யத் துணிவது, நோக்குவதெல்லாம் அவையே போறல் என்பது காதல் வசப்பட்டவர்கள் யாரைப்பார்த்தாலும் காதலர் போலவே அவர்களுக்குத் தோற்றம் தருவது, மறத்தல் என்பது தனது குடும்பத் தகுதியையும் மறந்து, வழமையாகச் செய்யும் காரியங்களைக்கூட மறந்து போவது, மயக்கம் என்பது தினசரிக் கடமைகளைக்கூடச் செய்யாது, காதலர் நினைவா-கவே ஒருவகை மயக்க நிலையில் இருத்தல், சாக்காடு என்பது உண்மையான காதலுக்காக, காதல் தோல்வியில் போய்விட்டால் எதையும் செய்யத் துணிவது என்பன போன்ற உணர்வுகளோடு காதல் வசப்பட்டவர்கள் இருப்பார்கள் என்று தொல்காப்பியர் காதலர்களைப் பற்றி அன்று சொல்லி வைத்தார். காதலர்களைப் பொறுத்தவரையில் இன்றுவரையும் இவற்றில் எந்த மாற்றமும் ஏற்பட்டதாகத் தெர-ியவில்லை, இதே மனநிலையில்தான் இன்றய காதலர்களும் இருக்கிறார்கள்.

திருவள்ளுவரும் காமம் என்ற சொல்லைத்தான் திருக்குறளில் காதலுக்குப் பயன்படுத்தி இருக்கின்றார். ஆகவே பழைய இலக்கியங்களில் காதல் என்ற வார்த்தைக்குப் பதிலாகக் காமம் என்ற சொல் பயன்பாட்டில் இருந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**

**செவ்வி தலைப் படுவார்** (குறள்: 1289)

'காமம் மலரைவிட மென்மையானது. சிலரே அந்த உண்மையைப் புரிந்து அதன் பயனைப் பெற்றுக் கொள்வார்கள்' என்று இந்தக் குறள் மூலம் திருவள்ளுவர் எடுத்துக் காட்டுவது காதல் மென்மையானது என்பதைத்தான். எனவே திருவள்ளுவர் காலத்திலும் காதல் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

தொல்காப்பியம் கூறும், இன்பம், பொருள், அறம் என்ற இந்த மூன்றையும் ஐந்திணை ஒழுக்கங்களாகத் தமிழர்கள் காலாகாலமாய்க் கடைப்பிடித்து வந்தாலும், இன்று பனியும், பனி சூழ்ந்த பகுதிகளில் புலம்பெயர்ந்து வாழும் ஆறாம் நிலத்திணை தமிழர்களும் தொல்காப்பியர் காலக் களவொழுக்கத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவது, இடமும் காலமும் மாறினாலும், இந்த மரபு அன்றும் இன்றும் தமிழர் வாழ்வியல் சார்ந்ததாகவே இருக்கின்றது. உணர்ச்சிவழிக் காதலைத் தவிர்த்து அறிவுவழிக் காதலை மேற்கொண்டால் குடும்பம் சிறப்பாக அமையும் என்பதையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆகவே புலம்பெயர்ந்து பனியும் பனிசூழ்ந்த பிரதேசத்தில் வாழும் ஆறாம் நிலத்திணைத் தமிழருக்கும் தொல்காப்பியரின் களவியல் சாலப்பொருந்தும்.



கொ.பெ.பி.அய்யா.

## தொடர் நவீனம்

### அத்தியாயம் 6

ஆச்சிக்கு எங்கள் நட்பின் மீது ஒரு விதமான பயம் கலந்த சந்தேகம் உருவாகத் தொடங்கி விட்டது. ஆரம்பத்தில் எங்களுக்குள் இருந்தது நட்பா காதலா என எங்களுக்கு அடையாளம் கண்டுபிடிக்கத் தெரிந் திருக்கக் கூடிய அளவிற்கு அறிவு முதிர்ச்சி இல்லை. எங்கள் இருவரின் உறவினர்களின் வீணான சந்தேகக் கட்டுப்பாடு கெடுபிடிகளால்தான் எங்களுடைய உறவில் என்ன இருந்தது. எது இல்லாதிருந்தது என்பதை எங்களை யோசிக்க வைத்தது. அந்தத் தேடல்தான் நட்பைத் தாண்டி காதல் எனும் இன்னும் ஆழமான புனிதமான உயிரில் கலந்த சொந்தமாக உணரச்செய்தது.

# கரிசல் மண்ணில் ஒரு காவியம்



இதில் கமலாவின் குடும்பம்தான் அதிகமான எதிர்ப்பைக் காட்டியது. கமலா ஒரு பெண் எனும் பயம் மட்டும் அவர்களிடம் மேலோங்கி இருந்திருக்குமானால் அது ஒரு இயல்பான அச்சம் அல்லது அக்கறை எனச்சொல்லலாம். ஆனால் அந்தக் காரணம் இரண்டாம் பட்சம்தான். அவர்கள் முதன்மையாக எடை போட்டுப்பார்த்தது என்னுடைய சாதியையும் பொருளாதாரச் சூழலையும்தான். எல்லாவகையிலும் நான் அந்தக் குடும்பத்தைவிடத் தாழ்ந் தவன் என்பதுதான் கமலாவின் குடும்பத்தாரிடம் அதிகமான கவலையாக இருந்தது. இந்த வித்தியாசம் ஒரு வேளை சமரசம் ஆகி இருக்குமானால் அன்று எங்கள் நெருக்கத்தில் எந்தப் பிரச்சனையும் இருந்திருக்காது என்பதே என் நம்பிக்கை.


ஆகவே எங்களின் கள்ளமில்லா அன்பை அது பிஞ்சாக இருக்கும் போதே நறுக்கி விடவேண்டும் என அவள் வீட்டில் ஆச்சியின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் கூடி ஒரு முடிவை எட்டியது.

அதாவது ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடித்து என் குடும்பத்தை வம்புக்கு இழுத்து வாய்ச்சண்டைகள் உருவாக்கத் திட்டம் தீட்டினர்.

எங்கள் வீட்டில் நாங்கள் இரண்டு ஆடுகளும் நான்கு கோழிகளும் வளர்த்தோம். கிராமத்தில் ஏழைகளின் அவசரப் பொருளாதார உதவிகளுக்கு இந்த ஜீவன்கள் தான் உதவும். எங்கள் ஆடுகள் அவள் வீட்டின் சுவர் ஓரமாகத்தான் படுத்துக் கிடக்கும்.கோழிகளும் அவள் வீட்டு முற்றத்தில்தான் அடிக்கடி போய் அங்கு சிந்திக்கிடக்கும் அரிசி பயறுகளை கொத்தித் தின்னும். அந்தப் பொல்லாக்கிழவி இதைச்சரியான சாக்காகக் கண்டறிந்து என் அம்மாவோடு சண்டை இழுத்தாள்.

'அடியே முத்தம்மா ஓங்க ஆடு ரெண்டும் ஏங்க சொவர ஒரசி ஒரசி கரச்சி இடிச்சிரிச்சடி. நீதாங் கண்ட கண்ட பயகளோட சாவகாசம் வச்சிருக்க. ஓங்க வீடு இடிஞ்சாலும் அவனுக கட்டிக் குடுப்பானுக. எங்க சொவரு இடிஞ்சா எவண்டி கட்டிக் குடுப்பாங். வந்த பயலுக்கு கோழி அடிச்சிப்போட ஏங்க வீட்ல மேச்சிதாங்வளக்கனுமாக்கும்'' என என் தாயாரின் நடத்தையை களங்கப்படுத்தும் நோக்கில் கிழவியின் சண்டை என்னைக் குறி வைத்துத்தான் அவள் வார்த்தைகளை அள்ளி வீசினாள்.

காரணம் அந்த சண்டைக்குள் என்னை இழுக்கவேண்டும் என்பதற்காகவே என் தாயாரின் நடத்தையை உண்மைக்கு மாறாக இழித்துப் பேசினாள். பொதுவாக கிராமங்களில் சண்டை என்றாலே கணவனை இழந்த பெண்களை மிகவும் மட்டமாக வாய்கூசாமல் கேவலப்படுத்திப் பேசுவதுதான் இன்றும்



வழக்கமாக இருக்கிறது. ஒரு பெண் அவள் தன் கணவனை இளம் வயதில் இழந்து விட்டால் அது ஒரு சாபக்கேடுதான். பாவம் என் அம்மா. அப்படியே கூனிக்குறுகி விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள். அதைப்பார்த்து என் மனம் பொறுக்கவில்லை.

வேறு வழியில்லை. நானும் களத்தில் இறங்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. தாயைப் பழித்துப் பேசும் போது யார்தான் பொறுத்துக்கொள்ள முடியும். நானும் நேற்றுவரை ஆச்சி என்று அழைத்த மரியாதையான சொல்லை கொஞ்சம் மாற்றிப் பேசவைத்து விட்டாளே அந்தக் கூறு கெட்டக் கிழவி என எண்ணும்போது என் மனம் வேதனைப்படுகிறது.

ஆமாம் நானும் என் உச்சமான கோபத்தில் சொற்களைக் கொட்டிவிட்டேன்.

“ஏய் கிழவி! வார்த்தையைக் கொஞ்சம் அளந்து பேசு. உனக் குத்தான் பேசத் தெரியுமுன்னு பேசாத. அப்புறம் நாங் பேச ஆரம்பிச்சா ரொம்ப அசிங்கமாப் போயிரும். நீ பெரிய மனுசி பேசிட்டே. ஆனால் நாங் சின்னப்பய. நாங் பேசிட்டா ரொம்ப மானக்கேடா ஆயிரும்” என தொடக்கத்தில் வார்த்தைகளைப் பக்குவமாகத்தான் பேசினேன். ஆனால் கிழவியின் வேகம் கொஞ்சமும் குறையவே இல்லை. அவள் ஒரு முடிவோடுதான் சண்டையைத் துவக்கி இருக்கிறாள். ஆகவே அவள் தொட நினைக்கும் உச்சத்தைத் தொடாமல் விடுவதாகத் தெரியவில்லை.

ஏண்டா உங்க ஆத்தா ரொம்ப யோக்யமோடா! ஆத்தாளப் பேசுன ஒடன கோபம் பொத்துக்கிட்டு வருதோ! வயசான கெழவனுக்கு வாக்கப்பட்டு அவங் எப்பச்சாவான்னு காத்திருந்தா. அவங் எங்கடா செத்தாங் இவதானடா அவனக் கொன்னா. இப்போ இளவட்டப் பயகளாப் பாத்துப் பாத்துப் புடிக்கிறா. எவங் வாராங் எவங் போறான்னு எல்லாக் கூத்தையும் நாங்களும் பாத்துக்கிட்டுத்தான இருக்கோம். இந்தத் தேவடியா பொலப்புத் தெரியாதாக்கும்.” என மீண்டும் கொடுமையான கடுஞ் சுடு சொற்களை அள்ளி இறைத்தாள்.

என் பொறுமை என்னையும் மீறி அறிவை இழந்தது. ஆத்திரம் யோசிக்க மறந்தது. நான் என்ன செய்ய முயல்கிறேன் என்பது எனக்கேவிளங்கவில்லை.

கோபக் கொதிப்பில் குணம் மாறியது. புத்தி கெட்டு கோட்டியன் போல் வெறி உச்சி முட்டியது. வி'ம் ஆனது என் வெகுளித்தனம். என்னைக் கட்டுப்படுத்த இயலாத எனக்குள் ஒரு மிருகத்தனம். சிந்தை தொலைத்தேன். அப்போது என்ன நடந்தது என்று இப்போது நினைத்தாலும் புரியாத புதிராகவே உள்ளது.

அய்யய்யோ அளவிட முடியாத அப்படியொரு வேகம்! அவ்வளவு பெரிய கல்லை நான் எப்படித்தான் ஒரு அட்டைக்கல்லை தூக்குவது போல் அலக்காகத் தூக்கினேனோ தெரியவில்லை. ஆச்சரியமான விளைவுதான் அது. யாரும் எதிர் பார்க்காத துயரம். அப்படியே அந்தக் கல்லை கிழவியின் மீது ஒரே போடாகப் போட்டுவிட்டேன்.

“அட சண்டாளா! என்னையக் கொன்னுட்டயே”ன்னு பாவம்! கிழவி தரையில் சாய்ந்தாள்”



**நம்ப மாட்டீர்கள்.**

**எலான் மஸ்கை**

**என் மாணவர்களே எனக்கு**

**அறிமுகப்படுத்தினார்கள்.**

**அதைவிட நம்ப மாட்டீர்கள்.**

**சன்னி லியோன் பெயரையும்**

**அவர்கள் தான் அறிமுகப்படுத்தினார்கள்.**

**எங்கள் வகுப்பறையில்**

**கற்பதும் கற்றுக் கொடுப்பதும்**

**சேர்ந்தே சென்றிருக்கிறது.**

**மாணவர்களை**

**பேச அனுமதிக்கும்பொழுது**

**ஆசிரியர்கள்**

**என்போல் அடக்கியே வாசிப்பார்கள்.**

**– கவிஞர் நிழலி -**

வந்தவன்

கொன்றவன் ஆயினும்

வரவேற்று

உணவிடும் பண்பினில்

சிறந்ததையா

என் தமிழ்ச்சாதி

**- வாகீசன் -**

“மலரின் நிழலில் நின்று,

கண்கள் பேசும் காதல்...

தொல்காப்பியத்தின் பாவம்,

இன்றும் உயிரோடு...”

**- நரேஸ் -**

# முதுமை

"ஏன் தாத்தா சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் சங்கர்.

"ஒன்றுமில்லை சங்கர். இன்றைக்கு உனக்கு எக்ஸா மில்லையா," பதிலளித்தார் சந்திரசேகர்.

"சும்மா சொல்லுங்க தாத்தா. நான் வெளியே வரும்போதே நீங்கள் ஏதோ நினைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தீர்கள்".


"சங்கர், உனக்கும், வயதும் காலமும் வரும் போது தெரியும். எங்கே இன்னும் ஸ்கூலுக்கு கிளம்பல!"

"இல்லை தாத்தா. அம்மா உடம்பிற்கு சரியில்லாமல் படுத்து விட்டாள். அப்பாவிற்கு ஏதோ ஆடிட்டிங் டயமாம். காலையிலே போயிட்டாங்க. ஆமா இப்படி காலையிலே பனியிலே வெளியே நாற்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டிருக்கீங்களே" என வினவினான் சங்கர்.

சங்கர் வரும் வரை தன் நெஞ்சுவலியை மறைத்து வைத்தவர் இப்போது பொறுக்க முடியாது என்ற நிலை வந்த போது நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

"ஐயையோ! தாத்தா என்னாச்சுது," என்றான் சங்கர்.

"ஒன்றுமில்லேப்பா." என்ற போது "ஏண்டா இன்னுமா டிபன் வாங்கக் கிளம்பலே" என்ற வார்த்தைகள் வேகமாக வெளியே வந்தன சங்கரின் அம்மாவிடமிருந்து.



- இரஜகை நிலவன் -

"அம்மா தாத்தாவிற்கு மறுபடியும் வலி வந்து விட்ட தம்மா" என்றான் சங்கர்.

"ஆமாம், அவருக்கு இப்படித்தான் ஓயாமல் வலி வரும். நேற்று தானே அப்பா கூட டாக்டரிடம் போய் முன்னூறு ரூபாய் தெண்டம் போட்டுட்டு வந்தாங்க. சும்மா மாத்திரையைத் தூக்கிப் போட்டுட்டு கூட்டிண்டு போ."

மருமகளின் பேச்சும் தொனியும் அந்த வலியிலும் சந்திரசேகருக்கு சிரிப்பைத் தந்தது. 'நான் மருமகள் தேர்ந்தெடுத்ததில் தவறி விட்டேனோ' என்று ஒரு கணம் தோன்றினாலும், 'இனி அதை நினைத்து பிரயோ ஜன மில்லை' என மெதுவாக எழுந்து சங்கரின் விரலைப் பிடித்துக்கொண்டு அருகிலிருந்த ஹோட்டலை நோக்கி நடந்தார்.

"ஏன் தாத்தா, அம்மா எப்போதும் உங்களை ஜாடை மாடையா திட்டறா?"

"சீ, அப்படி பேசக் கூடாது. தாத்தா செய்ய வேண்டிய வேலைகளை செய்தால் தான், உடல் சுறுசுறுப்பாக இருக்கும் என்று சொல்கிறாள்."

"தாத்தா சீக்கிரம் வாங்க. நான் ஸ்கூலுக்கு லேட்டாப் போனா டீச்சர் வேறே திட்டு வாங்க. சீக்கிரம் டிபன்

பண்ணிட்டு ஓடனும்.''

இருவரும் காலை டிபனை முடித்துக் கொண்டு, பார்சலும் வாங்கி விட்டு வர சந்திரசேகருக்கு நெஞ்சுவலி தாங்க முடியாமல் போக, அருகில் வந்த ஆட்டோவை நிறுத்தி சங்கரும் தாத்தாவும் ஏறிக் கொண்டார்கள்.

காலையில் நினைத்து சிரித்தது திரும்பவும் நினைவிற்கு வந்தது சந்திரசேகருக்கு.

தமிழரசியைக் காதலித்தது, அவளுக்காக வீட்டிலே சண்டையிட்டு சாப்பிடாமலே திரிந்தது... அம்மா தற்கொலை செய்து கொள்ளப் போவதாக மிரட்டியது.... பயப்படாமல் அவளையே கூட்டிக் கொண்டு மெட்ராஸ் வந்தது...

சென்னைப் பட்டணம் தன்னை ஆளாக்கிய பிறகு ஊரே மறந்து போனது. வைராக்கியமாக அம்மா அப்பாவுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டது.

ரொம்ப நாள் கழித்து ஊரிலுள்ள ஒரு நண்பன் மூலமாக அப்பா, அம்மா எல்லோரும் இறந்து போனது தெரிய வந்தது...

திரும்ப தன் ஊருக்குப் போக வேண்டும் என்று தோன்றாமலே போய் விட்டது.

தம்பி இருமுறை வந்து சொத்தை சரி பாதியாக எடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போனது...

நீயே ஆண்டு அனுபவித்துக் கொள் என்று சொன்னது...

இப்போது திடீரென்று பிள்ளையார்புரம் போக வேண்டும் போல ஆசை வந்தது. இரவு மகன் வேலையிலிருந்து வந்ததும் சொல்ல வேண்டும் என்று நினைத்தார்.

அடுத்த வாரம் கண்டிப்பாக ஊருக்குப் போக வேண்டும். தான் வாழ்ந்த வீடு... தமிழரசியின் வீடு... தெருக்கள்.... தமிழரசியை சந்தித்த இடங்கள்.. எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த போதே அதை கலைத்து விட்டான் பேரன் சங்கர்

“இப்போ வலி எப்படி இருக்குது, தாத்தா.'' என்றான் அவருடைய நெஞ்சைத் தடவியபடி.

“குறைந்து போச்சுடா. வீடு வந்துடுச்சு இறங்கு'' என்று சொல்லி விட்டு வலி தாங்க முடியாமல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு இறங்கினார்.

முன் அறை ஜன்னலின் ஓரத்தில் இருந்த மாத்திரையை எடுத்துப் போட்டுக் கொண்டு, நாற்காலியில் திரும்பவும் காற்றாட வந்து உட்கார்ந்தார்.

ஸ்கூலுக்குப் புறப்பட்ட சங்கர், “தாத்தா, நான் வர்றேன். இன்றைக்கு எங்க ஸ்கூல் ‘பேரன்ட்ஸ் டே’ எல்லோரும் வருவாங்க. நீங்களு ம் வர்றீங்களா தாத்தா?'' என்று கேட்டான்.

“இல்லேப்பா. நீ அப்பாவிடம் சொல்லி தாத்தாவிற்கு பிள்ளையார்புரம் போவதற்கு அடுத்த திங்கட்கிழமை ரயில் டிக்கட் ஒண்ணு எடுத்து வரச் சொல்றியா.''

“சரி தாத்தா. ஆமாம், உங்களுக்கு அந்த பிள்ளையார் புரத்திலே யார் இருக்கிறாங்க, தாத்தா.''

‘என் இளமைக்காலம்’ சொல்ல நினைத்தவர், இவனுக்கு விவரம் புரியாது என்று எண்ணி “நம்மோட சொந்தக்காரங்க எல்லாம் அங்கே இருக் கிறாங்கப்பா'' என்றார்.

“நானும் வரட்டுமா, தாத்தா.''

“உனக்கு ஸ்கூலுக்குப் போகனுமே.''

“சரி தாத்தா. நான் உங்களுக்கு ரயிலுக்கு டிக்கட் எடுத்துக் கொண்டு வரச் சொல்கிறேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் சங்கர்.

மறுபடியும் தன் இளமைக் கால வாழ்கைக்கு அவர் கனவுகள் தாவ சாயங்காலம் அவர் மகனும் பேரன் சங்கரும் அவருக்கு பிள்ளையார்புரம் டிக்கட்டோடு வந்த போது நாற்காலியிலிருந்து அவர் எழுந்திருக்கவேயில்லை.

# சில அடங்கல்கள்

*பாரிய அனர்த்தங்களுக்கு*
*மூன்று நான்கு*
*நாட்களுக்கு முன்னால்*
*புவியை மூடி இருக்கும்*
*கருமேகம் போல*
*அழுக்கத்துடன்*
*ஊமையாகிப்*
*பயணிக்கிறது*

*அது ஆழ்ந்து*
*அடங்கிக் கிடக்கிறது*
*அங்கு பேச்சும் இல்லை*
*மூச்சும் இல்லை*
*ஏன் தென்றல் கூட*
*தழுவிக் கொள்ளவில்லை...*



*கானகத்து மரங்கள்*
*எல்லாம்*
*அசைவின்றி*
*உறங்குகின்றன*
*இலைகளின் உதிர்வுகள்*
*ஓய்வெடுத்துக் காத்து*
*நிற்கின்றன...*
*அதன் இறப்பிற்கு*
*இத்தனை அவகாசம்....*

*இப்படித்தான்*
*உயிரோடு நான்*
*வாழ்ந்த சில நாட்களில்*
*என்னிதயம் அடங்கிக்*
*கொண்டிருந்தது*
*அழுத்தங்களோடு*
*அமாவாசை இருள் போல...*

**- சேஹு மொஹம்மது பெனாஸிரா -**

# எது வசந்தம்



- கீதா அருண் - சென்னை

இன்பத்தைச் சேர்க்கும்
இனிய வசந்தத்தை
நன்றாய்ப் படைக்கலாம்
நாளும் நாமே!
வான்முகில் கூட்டம்
கனிவுடன் வந்து
வானத்தின் நீர்முத்துக்கள்
வரிசையாய் நிலத்தில்விழ
மலர்கள் மலர்ந்து
மணம் பரப்பி
மலரின் மயக்கும்
மதுவினை உண்ண
தேடி வருகின்ற
தேனீக்கள் கூட்டம்
வாடிய பயிர்கள்
வளமான வசந்தமே!
நன்றி எதிர்பாராது
நன்மைகள் செய்தாலே
என்றும் இன்பமே
எழிலான வாழ்விலே
உதவி செய்தோரை
உள்ளத்தில் மறவாமலே
நிதமும் நன்றிகூறி
நினைத்தல் நன்மையே!
எள்ளளவு யாருக்கும்
தீங்கிழைக்கா எண்ணத்தால்
கொள்ளை இன்பம்
கொண்டு விடலாமே!
உயர்ந்தோர் நலமாய்
உரைக்கும் நல்மொழி
பயக்குறை யில்லா
பயனுள்ள நல்வழியே!
ஆவின் பாலை
அருந்தோடி வரும்கன்று
நாவின் சுவைக்கு
நன்கு சமைக்கும்
அன்னையின் கைவண்ணம்
அனைத்தும் அமுதமே
புன்னகை வீசும்
புது வசந்தமே!

# தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை

“ஏங்க...! ஏன் அங்க உட்க்காந்திருக்கீங்க....! மழை கொட்டுது.” என்றாள் மாரியம்மா.

“என்ன செய்ய? குடிசைக்கு கூட வாடகை கொடுக்க முடியாமல் இந்த குழாய்குள்ள குடும்பம் நடத்தறோம். சாப்பாட்டுக்கே வழி இல்லை. மழையில பொழப்புக்கும் வழி இல்லை” சலித்துக் கொண்டே பதில் சொன்னான் முருகன்.

“எல்லாம் ஒரு நாள் சரியாகும் கவலைப் படாதீங்க” என்றாள் மாரியம்மா.

”எங்க ... சரியாகி...என்னமோ.. போ..! மாறன் நேற்றைக்கு வந்தான். அவன் தலைவன் கிட்ட அடியாளா சேர சொல்லிக் கூப்பிட்டான். எல்லாத்துக்கும் “தலையாட்டியா’’ தப்பு செய்ய மனசு ஒத்துக்கலை. வேண்டாம்ணு சொல்லிட்டேன். அதான் இன்றைக்கு இந்த நிலைமை”

“பரவாயில்லை... நாளைக்கு மழை விட்டதும் உங்களை என் எஜமானி அம்மா கிட்ட கூட்டிட்டு போறேன். அவங்க ஏதாவது வேலை வாங்கித் தருவாங்க.”

“அம்மா....! பசிக்குது.”

பையன் பசியில் துடித்தான்.

“வீட்டு வேலை செய்யும் வீட்டில் கொஞ்சம் சாதம் கொடுத்திருக்காங்க.

“இருப்பா... தரேன்” சாதத்தை தண்ணீர் விட்டு உப்பு போட்டு பிசைந்து குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு குவளை கொடுத்தாள். அதையே அமிர்தமாக குழந்தைகள் குடித்து மகிழ்ந்தனர்.

மாரியம்மா, கணவனை உள்ளே வந்து உட்காரச் சொல்லி திரும்பவும் கூப்பிட்டாள்.

**சிறுகதை**

**– ருக்மணி வெங்கட்ராமன் –**



“பாவம்... அவருக்கும் பசிக்கும். நானாவது வேலை செய்யும் இடத்தில டீ தண்ணி குடிச்சேன்’’ என்று மனதில் நினைத்தாள்.

கண் மூடி கண் திறக்கும் நேரத்தில் அங்கு கொலை நடந்தேறியது. அந்த ஏரியாவில் இரண்டு பிரிவினர். இரண்டு அணியினருமே கொலை, கொள்ளை அனைத்திலும் ஈடுபடுபவர்கள். வெட்டப்பட்டவன் மாறனின் தலைவன். ஒரு நிமிடத்தில் வெட்டியவர்கள் மறைந்தனர். வெட்டப்பட்டவன் அணியினர் அங்கு வந்தனர். காவல் துறையும் வந்தது. அந்த கொலைக்கு ஒரே சாட்சி அங்கு உட்கார்ந்திருந்த முருகன்தான்.

மாரியம்மா “உள்ளே வாங்கணு தலைபாடா அடிச்சிகிட்டேனே... கேட்டீங்களா? இப்ப சிக்கலில் மாட்டிக்கிட்டீங்களே....!”

காவல் துறையினர் முருகனை சாட்சியாக சேர்த்தனர். வெட்டபட்டவன் கும்பல் “வீரன் தான் வெட்டினாணு சாட்சி சொல்லு. இல்லைனா உன்னை சாட்சி இல்லாம கொண்ணுடுவோம்” என்று மிரட்டினார்கள். தலை யாட்டி பொம்மையாக “சரி“ என்றான் முருகன்.

சிறிது நேரத்தில் வெட்டிய கும்பல் “சாட்சி சொன்ன ....! உன்னை இல்லாம ஆக்கிடுவோம்.” அதற்கும் தலையாட்டி பொம்மையா “ சரி “ தலை ஆட்டினான் முருகன்.

பசி ஒரு பக்கம். ரவுடிகள் பற்றிய பயம் வேறு. மாரியம்மா கணவனின் நிலை கண்டு, பரிதவித்தாள்.

துணியில் முடிந்து வைத்திருந்த பத்து ரூபாய் எடுத்து சென்று பன் வாங்கி வந்தாள். முருகனை சாப்பிடச் சொல்லி ஆறுதல் சொன்னாள்.

அடுத்த நாள் முருகன் தானே சிரித்தான். சிறிது நேரத்தில் அழுதான். பைத்தியமா துணியை கிழித்துக் கொண்டு அலைந்தான் .

அவன் நிலையைக் கண்டு என்ன செய்வதென்றே புரியாமல் தவித்தாள் மாரியம்மா.

இரண்டு அணியினரும் அவன் நிலைமையைப் பார்த்து விட்டு, கொலையைப் பார்த்ததால் முருகனுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று அவனை விட்டு விட்டனர்.

காவல் துறையும் பைத்தியம் சாட்சி செல்லாது என்று சென்று விட்டனர். அவனைக் "கூட்டி கொண்டு போ" என்று விரட்டினர். அதற்கும் தலையாட்டினாள் மாரியம்மா.

மாரியம்மா கணவனையும், குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பேருந்தில் தன் பால்ய சினேகிதி இருக்கும் கிராமத்திற்கு வந்து விட்டாள்.

தோழியிடம் நடந்ததை கூறினாள். "தன் அறிவுரைப்படி பைத்தியமா நடித்ததால் அந்த இடத்தை விட்டு தப்பித்து வந்ததை கூறினாள்."

"உண்மையை சொல்லாம வந்தது தான் வருத்தம்"

தொலைகாட்சியில் மேலூரில் நடந்த கொலையில் ஏற்பட்ட திருப்பத்தை அறிவித்தனர். அங்கு நடந்த கொலை எதிரில் இருந்த கடையின் காமிராவில் பதிந்திருந்தது. அதனால் வீரனை காவல்துறையினர் கைது செய்தனர். அதை கேட்டு மனது இலேசானது. உண்மை வென்றது.

அந்த சினேகிதி சொந்தமாக தேங்காய் நாரில் இருந்து மிதியடி செய்து விற்று வந்தாள்.

மாரியம்மாவும் முருகனும் அங்கு வேலையில் சேர்ந்தனர். உழைப்பினால் உயர்ந்தனர். இனி அவர்கள் தலையாட்டும் பொம்மைகள் இல்லை.

## கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்..... (தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்படும்போது பிழைகள் கண்டறியப்பட்டால் சுட்டிக்காடடுகிறேன். குழுமப்போட்டிகளில் தவறுகளை சுட்டிக்காட்டுவதற்கென நடுவர் செயற்படுகிறாரல்லவா.

**தமிழில் ஸ ஷ ஜ ஹ க்ஷ இந்த எழுத்துக்கள் தமிழ் லிபியில் உள்ளன. ஆனால் தனித் தமிழில் இவற்றை உபயோகிப்பதை பல தமிழர்கள் வெறுக்கிறார்களே. அப்போது அவை அதை உருவாக்கியவர்களின் தவறா.**

**றமணி. எஸ்**

பாவலருக்கு வணக்கம். தங்கள் கேள்வி சிறந்த கேள்வி. என்னை நெடுக்கடிக்குள் தள்ளிவிடக்கூடிய கேள்வியும்கூட.இது மிகுந்த ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய கேள்வி. இது பற்றி தமிழ் இலக்கணத்தினை ஆய்வு செய்யும், இலக்கணத்துறை வளர்ச்சியில் ஈடுபடும் பாண்டித்தியம் பெற்றவர்கள்தான் தெளிவாக தங்கள் கருத்துகளையும் தீர்வுகளையும் முன்வைப்பது பொருத்தமாகும். இவை பயன்பாட்டில் உள்ளன பயன்படுத்துவதும் விடுவதும் உங்கள் விருப்பமல்லவா? அதேவேளை தமிழ் இலக்கணத்தின் பிரகாரம் தமிழில் உயிர் எழுத்துகள் 12 (அ - ஔ), மெய்யெழுத்துகள் 18 (க் - ன்), ஆயத எழுத்து 1 மற்றும் உயிரும் மெய்யும் கலந்து பிறக்கும் உயிர் மெய்யெழுத்துகள் 216. ஆக மொத்தம் தமிழ் எழுத்துகள் 247 மட்டுமே என்பதை நினைவில் கொள்க. ஏனைய அனைத்தும் தமிழ் எழுத்துகள் அல்லவே. அதேபோர் இந்த எழுத்துகள் பயன்படுத்தப்பட்டு உருவாகும் சொற்களும் தமிழ் நொற்களாக எடுத்துக்கொள்ளப்பட முடியாதவைகளே.

இந்த விடயத்தில் அந்த எழுத்துகளின் ஓசை வடிவம் தமிழ் எழுத்துகளில் எந்த எழுத்தில் உள்ளது என்பதை ஆராட்சியாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அல்லது இவற்றுக்கு ஈடாக மாற்று எழுத்துகளை உருவாக்கி தமிழ் அரிச்சுவடியில் இணைக்கவேண்டும் அதுவரை இதற்கு சரியான தீர்வு இல்லை நண்பரே. இந்த எழுத்துகளை பயன்படுத்தாதீர்கள் என்று சிலர் போராட்டம் நடாத்துகிறார்கள், போராடுவதற்கு மேலும் பலர் தயாராக இருந்தாலும் மாற்றுத் தீர்வு என்னவென்பதை முதலில் முன்வைக்கவேண்டும். அதன் பின்னர் அனைவரும் ஒன்று சேர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும். இது எனது தனிப்பட்ட கருத்தே அன்றி அனைத்து தமிழ் சமூகத்தின் கருத்தல்ல. நன்றி. வாழ்த்துகிறேன் பாவலரே.

**உங்கள் கேள்விகளை எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். யாழ். கீரனார் அவற்றுக்குப் பதிலளிக்கிறார்.**

**கேள்வி 5 : புதுக்கவிதை எழுதுவதற்கும் இலக்கணம்.... விதிமுறைகள் உண்டா அறிய தந்தால் நன்று**

**கவி சந்திரா**

வணக்கம் பாவலரே. பல அறிமுகக் கவிஞர்களிடம் இருக்கக்கூடிய கேள்வி. மரபுக் கவிகளுக்கு இலக்கண விதிமுறைகள், வாய்பாடுகள் உண்டு. புதுக்கவிதை எழுதுவதற்கென்று இலக்கண விதிமுறைகளோ வாய்பாடுகளோ இருப்பதாக நான் அறியவில்லை. ஆழமான கருத்துகளை அல்லது சொல்ல வரும் சேதியை இலகு நடையில் குறைந்த சொற்களுக்குள் அழகிய கவிநயத்துடன் படைத்தால் அதுவே சிறந்த புதுக்கவிதைதானே. அடிப்படை இலக்கண அறிவு இருப்பது இலக்கணத்தவறுகள் இன்றி எழுதுவதற்கு அவசியமே.

**கேள்வி 6 : எனக்கு என்று பாணி கொண்டு எளிய பாணியில் யதார்த்தவார்த்தைகளில் புதுக்கவிதை எழுதி வருகிறேன். முக நூல் குழுமப்போட்டிகளில் சான்றிதழ் கிடைப்பது அவ்வப்போது மின் இதழ்களில் கவிதைகள் எனது படைப்புகள் வந்தாலும் அங்கீகாரம் சொல்லிக்கொள்ளும் படி இல்லை என மனச்சோர்வு வருகிறது. தங்களின் ஆலோசனை சொல்லுங்கள்**

**A. S. சுந்தரராஜன்**

**மானாமதுரை**

வணக்கம் பாவலரே. உங்கள் ஆதங்கம் புரிகிறது. என்னைப்பொறுத்தவரை உங்களுடைய படைப்பு வாசகர்களை சென்றடைந்து அவர்கள் தங்கள் பின்னூட்டத்தை வழங்குகிறார்கள் என்றால் அதுவே அங்கீகாரம்தானே. நீங்கள் முகநூல் பக்கத்தை சரியாக பயன்படுத்தினால், உங்கள் படைப்பை பலரிடம் கொண்டு சேர்க்கவும் மேலும் பயிற்சிபெறவும் முடியும். ஏனைய கவிஞர்களின் கவிதைகளை படித்து எமது குறைபாடுகளை

# கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...

உங்கள் கேள்விகளுக்கு 'கீர்' பதிலளிக்கிறார்

சரிசெய்துகொள்வதற்கும் சிறந்த இடம். நீங்கள் தற்போது ஒரு கவிதைப் புத்தகத்தை வெளியிட்டிருப்பதை அறிகிறேன், அது என்னிடமும் மேலும் பல கவி இரசிகர்களின் கைகளில் கிடைத்திருக்கும். சில திறனாய்வுகளையும் நான் படித்தேன் அவையெல்லாம் உங்களுக்கு கிடைத்த அங்கீகாரம்தானே. தொடர்ந்து வெளியீடுகளை செய்யுங்கள். உங்கள் வெளியீடுகளை போட்டிகளிலும் பங்குபெறச் செய்யுங்கள். வாழ்த்துகிறேன்.

**கேள்வி 7 : மரபுவழி கவிதை எழுத பயிற்சி ஏதும் உள்ளதா?**

**பாலம்மாள் பொன்னுசாமி**

வணக்கம் பாவலரே. மரபு இலக்கண பயிற்சி பல இடங்களில் நடக்கிறதே. முகநூல் குழுமத்தில் பயணிக்கும் சாரா பாஸ் என்ற பெயருடைய பாவலர், தமிழேணிக் கலை மன்றம் போன்று பலர் பயிற்றுவிக்கிறார்கள், யாழிசைக் கவித்தடாகம் குழுமத்தின் நிறுவுநர் உடுவிலூர்க்கலா அவர்களும் மேலும் சிலரும் அண்மையில் ஒரு பாவலரிடம் பயின்று பட்டமளிப்பு நிகழ்வும் இலங்கையில் நடந்ததே. தொடர்புகளை பெற்றுத் தர முயல்கிறேன். வாழ்த்துகிறேன் பாவலரே.

**கேள்வி 8 : நான் அனுப்பித்த கவிதைகள் கதைகள் படித்தீர்களா இல்லையா என்பதை ஒரு பதில் மெயிலில் கொடுத்தால்நல்லது. பதிவிடு வது பற்றி நான் பேசவில்லை. ஒரு மெயில் யாராவது அனுப்பித்தால் அதற்கு பதில் வந்தால் நல்லது. உங்கள் கருத்தை இங்கேயே தரவும். எனது குறைகளையும் வெளிப்படையாக இதிலேயே போட்டால் நானும் திருத்திக் கொள்ள வசதியாக இருக்கும். பதில் போடவும் நிறுவனரே......வணக்கம்.**

**கேசவ் குமார்**

வணக்கம் பாவலரே. உங்கள் கோரிக்கைக்கமைவாக உங்கள் கேள்விக்கான பதிலை தளத்திலேயே தந்திருக்கிறேன். நன்றி வாழ்த்துகிறேன்..

**கேள்வி 9 : ஐயா இனிய இரவு வணக்கம் நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள கருத்து மிகவும் சிறப்பாக உள்ளது. நான் எழுதும் கவிதைகள் எதாவது பிழைகள் இருந்தால் தெரிவிக்கவும் நான் திருத்தம் செய்து கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் சிறுகதை போட்டியில் நானும் பங்கு பெற்றுள்ளேன் நிலா சாட்சி என்ற தலைப்பில் கதை எழுதினேன். ஆனால் அது எப்போது பத்திரிகையில் வெளியீடு வர போகிறது.**

**எஸ். செல்வராசு**

வணக்கம் பாவலரே. 'இரவி' சஞ்சிகையால் அறிவிக்கப்படும் போட்டிகளுக்கு மட்டுமே நாம் பொறுப்பு. எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தவும் ஏனைய தமிழ் வளர்ச்சி செயற்பாட்டாளர்களுக்கு ஆரதரவளிக்கவுமே அவர்களுடைய அறிவிப்பை நாம் அனைவருடனும் பகிர்ந்துகொள்கிறோம். நீங்கள் குறிப்பிடுவது வேறு ஒரு குழுமத்தால் அல்லது வெளியீட்டாளரால் நடாத்தப்பட்ட போட்டி எனக் கருதுகிறேன். அந்தப் போட்டிப்பதிவில் சென்று அதன் அறிவிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். **(தொடர்ச்சி 52ஆம் பக்கத்தில்)**

# இளங்கோவும் தாத்தாவும் சிறுவர் இலக்கிய வெளியீடு




கடந்த வருடம் 2025ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நோர்வே கணேசன் பதிப்பகத்தினரால் 'இளங்கோவும் தாத்தாவும்' என்ற சிறுவர் இலக்கியத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த தொகுப்பை யோகராணி கணேசன் அவர்கள் தொகுத்து சிறுவர் இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். புலம்பெயர் தேசத்திலிருந்து சிறுவர் இலக்கிய வளர்ச்சியின்பொருட்டு பெரும் முயற்சியெடுத்து இந்தப்புத்தகத்தை வெளியிட்டுள்ள யோகராணி அவர்கள் பாராட்டப்படவேண்டியவர் ஆவார். இந்த புத்தகத்தை நோர்வே நாட்டில் இயங்கிவரும் கணேசன் பதிப்பகம் தனது ஐந்தாவது வெளியீடாக வெளியிட்டுள்ளது. இந்தப் புத்தகத்திற்கு முன்னர் வெளிவந்த ஏனைய புத்தகங்களின் விபரத்தையும் 'இளங்கோவும் தாத்தாவும்'' புத்தகத்தின் பின்னட்டையில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப்புத்தகம் பிரதான கதாபாத்திரமாகிய சிறுவன் தனது சிறுவயத-ிலேயே தாய் இறந்துபோக தாத்தாவின் அரவணைப்பிலும் பரா-மரிப்பிலும் வளரவேண்டிய சூழல் உருவாகிறது. இவ்வாறான நிலையில் எதிர்பாராத நெருக்கடிகளைச் சந்திக்கும் சிறுவர்கள் அவற்றை எதிர்கொள்வதற்கு ஏற்ப பயிற்றுவிக்கக்கூடி விடயங்களை தாங்கியயதாக படைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும். இது இந்தப் புத்தகத்தைப் படிக்கும் அனைத்து சிறுவர்களையும் மிகவும் கவரும் என்பதில் ஐயமில்லை.

---

# திருமதி தயாழினி சிவநாதனின்

## மூன்று நூல்கள் வெளியீடு





ஈழத்து தமிழ் இலக்கிய படைப்புகள் குறைவின்றி வெளிவந்தவண்ணம் உள்ளன. இலக்கிய ஆழுமைகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. 2026 வருடத்தின் தொடக்கத்திலேயே எழுத்தாழினி தயாழினி சிவநாதன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தித்திக்குதே, கிளிஞ்சல்கள்,மற்றும் மின்மினிப் பூச்சிகள் போன்ற நூல்களே வெளியீடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியிலுள்ள யுாஜா கிரீம் ஹவுஸ் ஹம்சிகா மண்ணபத்தில் 11. 01. 2026 அன்று, மரபுப்பாமணி உடுவிலூர்க்கலா அம்மையார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. பரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வைத்தியலிங்கம் யோகேஸ்வரன் அவாகள் கலந்துகொண்டு நூல் வெளியீட்டை செய்திருந்தார். முதற் பிரதிகளை திரு. தியா-கராசா ஜெகசீலம், திருமதி பத்மவேணி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். நிகழ்வில் வழக்கமான நடைமுறைகளோடு இசை நிகழ்ச்சி, புல்லாங்குழல் இசை நிகழ்வு மற்றும் நடனம் போன்றவையும் இடம்பெற்றன.

# கிழக்கிலங்கையின் பெண் ஆளுமை கிண்ணியா சபீனா அவர்களுக்கு இலக்கிய வித்தகர் விருது





கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் நடாத்தப்படும் கிழக்கு மாகாண விருது வழங்கும் விழா 2025ஆம் ஆண்டுக்காக கடந்த ஐப்பசி மாதத்தில் இடம் பெற்றது. இந்த விழாவில் கிழக்கிலங்கையின் பெண் இலக்கிய ஆளுமையாய் இலக்கிய உலகில் பிரகாசித்துவரும் **'கிண்ணியா சபீனா'** அவர்கள் **'இலக்கிய வித்தகர்'** விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை இலக்கிய ஆளுமைகள் மட்டத்தில் பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளதோடு வரவேற்பையும் பெற்றுள்ளது. இந்த நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# "ஒட்டகச்சிவிங்கி பொம்மை" சிறுவர் இலக்கிய வெளியீடு



எமது 'இரவி' சஞ்சிகையில் தொடர்ச்சியாக தனது ஆக்கங்களை அனுப்பி மிகச் சிறப்பான முறையில் பங்களிப்புச் செய்துவரும் **கவிதாயினி வைத்திய கலாநிதி ஜலீலா முஸ்ஸம்மில்** அவர்களுடைய கைவண் ணத்தில் உருவாகிய 'ஒட்டகச்சிவிங்கி பொம்மை' என்ற மழலைப் பாடல்களால் உருவாக்கப்பட்ட சிறுவர் இலக்கியப் படைப்பு 11 கார்த்திகைமாதம் 2025இல் வெளியிட்டு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு ஏறாவூர் ஓட்டுப்பள்ளி அஹமட் பரீட் பொது நூலக வளாகத்தில் நூலகப்பொறுப்பாளர் பி. என். எப். றிஸாதா தலைமையில் இடம்பெற்றது. ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் அல்ஹாஜ் எம். எஸ். நழீம் அவர்கள் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இது இவரது நான்காவது வெளியீடாகும். இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு படைப்பாளரால் ஒட்டகச் சிவிங்கி பொம்மை அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது.




# துளித்தேன் ஹைக்கூ கவிதை நூல் வெளியீடு

'இரவி' சஞ்சிகையில் தொடர்ச்சியாக தனது கவிதைகளைப் படைத்து பங்களிப்பு செய்துவரும் மற்றொரு எழுத்தாளர் **கவிஞர் அனுராதா செளா-ரிராஜன்** அவர்களின் கை வண்ணத்தில் உருவாகிய **'துளித்தேன்'** என்னும் ஹைக்கூ கவிதைகளால் உருவாக்கப்பட்ட ஹைக்கூ கவிதை நூல் நூல் அண்மையில் நூலேணி பதிப்பகத்தினரால் சென்னையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இவரது மற்றொரு படைப்பாகிய **'மனதுக்குள் கூகுள்'** நூல் தமிழ் நாடு முத்தமிழ்ச்சங்கத்தின் 'எழுத்தாணி விருது 2025'ற்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஈழத்தின் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண நகரில் வீற்றிருக்கும் நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் தோற்றம் 70 வருடங்களுக்கு முன்னர்

நன்றி - ஸபாஸ்